1007

இந்து ஒளி

HINDU OLI

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

அகில இலங்கை இந்து மாமன்றம்
இறை பணிநீற்க



தீபம் -1

சுடர்-1

அகில இலங்கை இந்து மாமன்றக் காலாண்டிதழ்

தாது வருடம் கார்த்திகைத் திங்கள் 9ம் நாள்

Quarterly of
All Ceylon Hindu Congress
24th November 1996



தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு 3.5.96ல் நடந்த மகாகும்பாபிஷேகக் காட்சிகள்.





தலைவர் திரு.கயிலாசபிள்ளை, பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா, உட்பட பக்தர்கள் மத்தியில் மாமன்ற முன்னைநாள் தலைவரும் பொதுச் செயலாளருமான திரு.ஆ.சின்னத்தம்பி பக்திப் பரவசத்துடன் நிற்கும் காட்சி.

சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேகம் செய்கின்றனர்

கும்பம் எடுத்துச் செல்லப்படும் காட்சி.

பஞ்சபுராணங்கள்

1. தேவாரம் - சுந்தரர்

பண் – தக்கேசி (7 ஆம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை யென் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையனென் றறி யொண்ணா
எம்மானை, எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல்பழனத் தணி
ஆரூரானை மறக்கலு மாமே !

2. திருவாசகம் - மாணிக்கவாசகர்

(8 ஆம் திருமுறை)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்
விரையார் கழற் கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி, வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்,
என்னைக் கண்டு கொள்ளே !

3. திருவிசைப்பா - திருவாலியமுதனார்

பண் – இந்தளம் (9 ஆம் திருமுறை)

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் உமையள் காண
விகிர்தன் ஆடுமே.

4. திருப்பல்லாண்டு - சேந்தனார்

பண் – பஞ்சமம் (9 ஆம் திருமுறை)

சூழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மனஞ்செய் குடிப் பிறந்த
பழவடி யாரொடும் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம் - சேக்கிழார்

(12 ஆம் திருமுறை)

மன்னினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அன்னலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கன்னினாலவர் நல்விழாப் பெலிவுகண் டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென உரைப்பார்

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

இந்து ஒளி

தீபம்: 1 சுடர்: 1

கார்த்திகைத் தீபத்திருநாள் தாதுவருடம் கார்த்திகை 9

24.11.1996

ஒளி ஏற்றுகிறோம்

"தீபம் இருளை விலக்கி எதிரே உள்ள பொருளைக் காட்டுகிறது. அது போலப் படிப்பறிவு, அறியாமை இருளை அகற்றி உண்மைகளை உணர்த்துகிறது. கணிதம், விஞ்ஞானம் பூகோளம் என்று பலவற்றைப்படித்து அறிவை வளர்த்துக் கொள்கிறோம்.

'கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு' என்பது பழமொழி. ஆக கை மண் அளவு அறிவுதான் நம்மிடம் உள்ளது. உலகு அளவுக்குஅறியாமை இருக்கிறது. இதை அகற்ற உலகளவு அறிவைப் பெறவேண்டும் என்பது தெளிவு".

இவ்வாறு பெருவணக்கத்திற்குரிய ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் கடந்த ஆண்டில் எழுதியிருந்த தீபாவளிச் செய்தி ஒன்றில் கூறியிருந்தார்கள்.

40ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டின் இந்து மன்றங்களை ஒன்றிணைத்து இலங்கை வாழ் இந்துமக்களின் உச்சநிறுவனமாக விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் தன் தலைமையகக் கட்டிடத்தைப் பூர்த்தி செய்து கொண்டபின், இந்நாட்டின் இந்து மக்களுக்குச் சமய அறிவைப்புகட்டும் வழியில் நல்லதொரு சஞ்சிகையை வெளியிட வேண்டும் என விழைந்தோம். இந்துமக்களிடையே சமய அறிவை வளர்க்கவல்ல ஒளியாக இந்து ஒளி விநாயகப்பெருமானின் திருவருளுடன் ஏற்றப்படுகின்றது.

காலாண்டு இதழாக ஆரம்பமாகும் இந்து ஒளி கூடிய சீக்கிரம் மாதாந்தம் சுடர்விட, சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருளை வேண்டிஅவனின் பாதார விந்தங்களில் இதனைச் சமர்ப்பித்து நிற்கின்றோம்.

இந்துஒளி வாசகர்களின் சமயஅறிவைமேலும் வளர்த்திட தரமானஆக்கங்களைத் தேடித் தொகுத்துத் தந்திருக்கின்றோம். பெருவணக்கத்திற்குரிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் அருள் வாக்கிற் கேற்ப, ஆழமான சமயத் தத்துவங்களையும் மக்களுக்கு விளங்கக்கூடிய கருத்துக்களையும் முன்வைக்க முயல்வோம். வரும் சுடர்கள் மேலும் பிரகாசித்து ஒளிபரப்பும். நாங்கள் இன்று கார்த்திகைக் குமரனின் திருவவதார தினத்தில் ஏற்றும் இந்து ஒளி தொடர்ந்து பல்லாண்டு பிரகாசிக்க ஆண்டவனருள்வாராக.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழ்

மாமன்றப் பணிகள் வளர இறைவனருளட்டும்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வரின்
அருள் ஆசி

அருள் ஓங்கும் நெஞ்சத்திர், அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து ஒளி என்னும் சஞ்சிகையை வெளியிட இருப்பதை அறிந்து பெரும் மகிழ்ச்சியடைகிறோம். இந்து சமயம் என்பது ஆழ் சமுத்திரம்! சமுத்திரத்திலே முத்து மாணிக்கம் போன்ற விலைமதிப்பற்ற பொருட்கள் இருக்கின்றன. அவற்றை வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு கண்ணுக்கு புலப்படுவதில்லை. அப்படியான ஆழ் கடலில் இறங்கி ஆராய்பவனுக்கு மட்டுமே இந்தச் சிறப்புகள் தெரிகின்றன. அது போலவேதான் இந்து சமயமும் உள்ளது. விஞ்ஞானம் வளர்ந்து வருகின்ற இந்த நேரத்தில் விஞ்ஞானத்தைப் பற்றி அறிவதற்குப் பல நூல்கள் வெளி வந்தாலும் அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிடும் இந்து ஒளி என்னும் சஞ்சிகை ஆழமான சமய தத்துவங்களை மக்களுக்கு விளங்கக்கூடிய கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்று வேண்டுகிறோம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பணிகள் வளர இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரியஸ்வாமிகள்

'நன் முயற்சி வெற்றி பெறுமாறு பிரார்த்திக்கிறேன்'

இலங்கை இராமகிருஷ்ணமிஷனின் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின் வாழ்த்து

அகில இலங்கை இந்து மாமன்றத்தினர், எதிர்வரும் திருக்கார்த்திகைத் தினத்தன்று, 'இந்து ஒளி' என்ற பெயரில், காலாண்டு சஞ்சிகையொன்றை வெளியிடவுள்ளனர் என்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

இந்து சமயக் கருத்துக்கள் கடலைப்போன்று பரந்து கிடக்கின்றன. அவற்றை மக்கள் அறியச் செய்வது நமது தலையாய கடமை. மக்களது சமய அறிவு வளர வளர, அஞ்ஞானமும், மூடநம்பிக்கைகளும் ஒழியும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நன்முயற்சி வெற்றி பெற இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தினருக்கு எனது மனப் பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- சுவாமி ஆத்மகனாநந்தா

' 'எல்லாம் சிவன் செயல்; அம்பாள்துணை'

மாமன்றத்துணைத் தலைவரும் தெல்லிப்பழை
துர்க்கா அம்மன்
தேவஸ்தான நம்பிக்கைப்பொறுப்பாளர்
சபைத்தலைவருமான துர்க்கா துரந்தரி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் செய்தி

பெருமதிப்புக்குரிய செயலர் அவர்கள்
அகில இலங்கை இந்து மாமன்றம்
கொழும்பு.

ஐயா,

வணக்கம். தாங்கள் அனுப்பிய கட்டடப் பூர்த்தி சிறப்பு மலரும் கடிதமும் இன்று காலை கிடைத்தன. மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அற்புதமான பணி; நல்ல ஒழுங்கான அமைப்பு; இவ்விடம் எல்லோரும் பார்த்துப் பார்த்துப் பாராட்டுகிறார்கள்.

யார்யார் எந்தக் கருமத்தைச் செய்தார்கள் என்பதிலும் பார்க்க, எத்தகைய உள்ளம் வாய்ந்தவர்கள் செய்து முடித்தார்கள் என்பது தான் சிந்தனைக்குரியது. மகத்தான ஒரு பணியை நிறைவேற்றி விட்டீர்கள். இறை ஆசி என்றும் உங்களை வழி நடத்தும்.

'இந்து ஒளி' வெளியீடு பற்றி அறிந்து மகிழ்கிறோம். அந்த இதழும் சிறப்புற அமைய அம்பாள் துணை நிற்பாளாக.

இவ்விடம் எங்கள் சொந்த இடத்தில் வதிவதும், ஆலயத்தில் எங்கள் பணியைத் தொடர்வதும் எமக்குப் பரம திருப்தி. எல்லாம் சிவன் செயல்; அம்பாள் துணை.

வணக்கம்.

பணிவன்புடன்
தங்கம்மா அப்பாக்குட்டி.

உ

சிவமயம்

'சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானின் அருளுடன் இந்து ஒளி மலர்கின்றது'

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரின் செய்தி

மாமன்றத்தின் சஞ்சிகை ஒன்றினை வெளியிட ஆண்டவனருள் கிடைத்திருப்பதையிட்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

நல்ல தரமான ஆக்கங்களை இந்தச் சஞ்சிகையில் வெளியிட்டு இந்நாட்டு இந்து மக்களின் அவசிய தேவைகளில் ஒன்றினைப் பூர்த்தி செய்வதையிட்டுத் திருப்தி கொள்கின்றோம்.

மறைந்த தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம் எடுத்த முயற்சியால் தேங்கி நின்ற தலைமையகக் கட்டிடவேலைகள் கடந்த சில ஆண்டுகளில் துரிதப்படுத்தப்பட்டன. சித்திரைப் பூரணைத் திருநாளில் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானைத் தலைமையகக் கட்டிடப் பிரார்த்தனை மண்டபத்தில் பிரதிஷ்டை செய்கின்ற பாக்கியமும் கிடைத்தது. அப்பெருமானின் அருளால் இந்தக் காலாண்டு மலர், கார்த்திகைத் தீபத் திருநாளில் மலர்கின்றது.

அத்தருணத்தில் மாமன்றப் பணிகளுக்குப் பல ஆண்டுகளாகத் தன்னை அர்ப்பணித்து, தலைவராகவும் பொதுச் செயலாளராகவும் தொண்டாற்றிய பெரியார் திரு. ஆ. சின்னத்தம்பி அவர்களைப் பிரதமவிருந்தினராக அழைத்துக் கௌரவிக்க இருக்கின்றோம். தலைமையகக் கட்டிடப் பூர்த்திக்கு அயராது உழைத்த மூத்த பொறியியல் நிபுணர் திரு. என். ஏ. வைத்தியலிங்கம் கட்டிடக் கலை நிபுணர் திரு. வி. எஸ். துரைராசா அவர்களையும் மறைந்த கட்டிடப் பொறியியல் நிபுணர் திரு.எஸ் ஞானப்பிரகாசம் அவர்களையும் கூடிய சீக்கிரம் கௌரவிக்க இருக்கிறோம்.

இம்மலர் இக்கார்த்திகைத் தீபநந்நாளில் மலர தாராள சிந்தையுடன் உதவியவர் பல தர்மங்களையும் செய்து வரும் எங்கள் மாமன்றத் தர்மகர்த்தாக்களில் ஒருவரான திரு.திருக்குமார் நடேசன். அவரின் புண்ணிய தொண்டுகள் தொடர ஆண்டவனைப் பிரார்த்தித்து அவருக்கு எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்து நிற்கின்றோம்.

மாமன்றச் சேவையில் பல ஆண்டுகள் ஈடுபட்டவர்களான அறங்காவலர் சபைத்தலைவர் திரு. ஆ. குணநாயகம், மாமன்றத் துணைத் தலைவர் கலாநிதி க. வேலாயுதபிள்ளை, மாமன்றப் பிரதிச் செயலாளர் திரு.க. இராஜபுவனீஸ்வரன் ஆகியோரின் அனுபவம் மிக்க வழிகாட்டலில் இம் மலரினைத் தொகுத்து வெளியிடுகிறார், பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன். அவர்களனைவருக்கும், மலரை அழகுற அச்சிட்டு உதவும் யுனி ஆட்ஸ் நிறுவன அதிபர் திரு. பொ. விமலேந்திரன், உதவிகள் பல வழங்கிய எங்கள் மாமன்ற நிர்வாக அலுவலர் திரு. எம். சின்னையா ஆகியோருக்கும் மாமன்றத்தின் நன்றிகள் .

வி. கயிலாசபிள்ளை,
தலைவர்.

சிவனே சரணம்

தாளம்: ஆதி

இராகம்: பூர்விகல்யாணி

பிறப்புண்டு, வாழ்வுண்டு, இறப்புமுண்டு,
பேரருளோன் வள்ளல் எம் சிவபிரானின்
திருக் கருணைக் கடாட்சம் எமைத் தீண்டிவிட்டால்
திண்ணம் அது நற்பேறு அடைவதுண்மை

வழங்கி வரும் திரு மறைகள் காட்டும் வழி
நல்லவழி என்பதை நாம் உணர்ந்து விட்டால்
பழியேது, பாவமேது இப்புவியில்
பகையொழித்துப் பக்குவமாய் வாழலாமே

திருநீறு பூசிவிட்டால் போதுமல்ல
திருவேடு பகரும் வழி நடத்தல் வேண்டும்
மனமதிலே உண்மையொளி ஏற்றிவிட்டால்
மதி யெமக்கு நல்லவழி காட்டி நிற்கும்

சதி நாசமோச மெம்மை என்றும் தீண்டா
சத்தியத்தின் வழிநின்று வாழும் போது
பதியான எங்கள் சிவன் பார்த்தருள்வான்
பரிதவித்து இனியும் மனம் பதற வேண்டாம்

விதியென்று ஒன்றுண்டு, வினைப்பயனும் தானுண்டு
விட்டவழி சிவன் வழியே என்று விட்டால்
கிட்டவரும் துயரநிலை ஓட்டிவிட்டு
எட்டிவந்து எமைக்காப்பான் சிவபிரானே

நற்கதியை நாமடைய நல்லவழி
சிற்பதியில் ஆடுகின்ற சிவன் வகுத்தான்
இப்பதியில் அவ்வழியே உய்ய வைக்கும்
கற்றுணர்ந்து அவ்வழியே நாடல் வேண்டும்

ஓம் என்ற ஒலியினிலே உறையும் அண்ணல்
ஓங்கார நாதமாக ஒலித்திருப்பான்
எங்கும் நிறைந்திருக்கும் எங்கள் ஈசன்
எதற்கும் அவன் திருவடியே பற்றி நிற்போம்

ஆக்கம் - த. மனோகரன்
"உமாபதி" கொழும்புத்துறை
(செயலாளர் மாமன்றக் கல்விக்குழு,
துணைச்செயலாளர், மாமன்றம்)

விளக்கீடு *

(இந்து ஒளி கார்த்திகை தீபத் திருநாளான விளக்கீடு அன்று மலர்கின்றது. அறிவும் அனுபவமும் மிக்க சைவப் பெரியார் விளக்கீடு பற்றி எழுதியதை ஈண்டு தருகிறோம்)

விளக்கீடென்னுந் திருவிழா சிவபெருமானே முதற் கடவுளென்பதை விளக்குவது. அவர் பிரம விஷ்ணுக்களுக்கு ஞான ஒளிவடிவாகத் தம்மைக் காட்டிய திருவருளே இந் நாளிற் கொண்டாடப்படுவது. அதற்காகக்கோயில்களிலும் வீடுகளிலும் மற்று மிடங்களிலும் பெருந்தொகையான விளக்குகள் ஏற்றப் படுகின்றன. கோயில் வாயிலிற் பெரு நெருப்புண்டாக்கப்படுகின்றது. அதற்குச் சொக்கப் பனையென்று பெயர். இது கார்த்திகைமாதத்திலே வரும் பூரணையிற் செய்யப்படுவது. (சொக்க என்பது சுஷ்க என்பதன் திரியென்பர்: சுஷ்க–உலர்ந்த)

பூசை முறை– முதல்நாள் சாயங்காலம் ங்கலகிரிகைகளை முடித்துச் சிவாக்கினி யுண்டாக்கி ஒன்பது தகழிகளிலே அந்த அக்கினியைப்பூசித்து வைத்தல் வேண்டும். விளக்கீட்டு நாளிலே கோயிலின் முன்பாக ஒரு உயரமான மரத்தை [1] நாட்டி அதைச் சுற்றித் தகழிகள் வைத்தற்குச் சலாகைகள் பொருத்திக் காய்ந்த ஓலை [2] முதலியவற்றால் வட்டமாக அடைத்து விடுக. பொழுதுபட்டபின்பு சிவபெருமானை எழுந்தருளச் செய்து அந்த மரத்துக்கு முன்னே நிறுத்தி அந்த மரத்திலே சிவபெருமானைப் பூசிக்க. ஒன்பது தகழிகளில் ஒன்றை ரத்தின் நுனியிலும் மற்றவைகளை மரத்தைச் சுற்றி ட்டுத்திக்குகளிலும் வைக்க. அந்தக் தகழிகளிலேயுள்ள நெருப்பானது சுற்றியிருக்கும் இலைகளிலே பிடிக்க முழுவதும் எரியும். அந்த மரமும் ஒளியும் சிவபெருமானுடைய சோதி ரூபத்தைக் குறிக்கும். எரிந்த சாம்பலைச் சிவபெருமானுக்குச் சாத்தி அடியார்களுக்குங் கொடுக்க. பின்பு மரத்தைத் தறித்து விடுக. [3]

சிவபெருமான் பிரம விஷ்ணுக்களுக்குத் தோன்றிய கதை பின்வருமாறு அருணாசலபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. பிரமதேவர் செருக்குக்கொண்டு தாமே முழுமுதற்கடவுளென்றெண்ணி விஷ்ணுவிடம் போய்த் தம்முடைய பெருமைகளைச் சொன்னார். விஷ்ணு பிரமாவைத் தாழ்த்திப் பேசினார். இதனால் இருவருக்குமிடையிற் சண்டை உண்டாயிற்று. இவர்களுடைய விரோதத்தைத் தீர்க்கவேண்டுமென்று தேவேந்திரன் சிவபெருமானுக்கு முறையிட்டான். அப்போது சிவபெருமான் நெருப்பு வடிவமான ஒரு மலைபோல இருவருக்குமிடையிலே தோன்றினார். [4] பிரம விஷ்ணுக்கள் அதைக் கண்டு அஞ்சினர். அது மிகப் பெரிதாயிருந்தபடியால் அதன் அடியையேனும் நுனியையேனும் காண்பவரே தங்களுக்குட் பெரியவராவரென்று தீர்த்தனர். விஷ்ணு அந்த நெருப்பு மலையின் அடியை அறிந்து வருகின்றறேனென்று பன்றி வடிவாகப் பூமியை அகழ்ந்து கீழே சென்றார். பிரமா நுனியைக் காணுதற்காக அன்ன வடிவத்தோடு மேலே பறந்து போனார். விஷ்ணு அடியைக் காணமாட்டாதவராய் வலியிழந்து இது பரம்பொருளாகிய சிவபெருமானுடைய தோற்றமே என்றும் அதன் நுனியைப் பிரமா காணமாட்டாரென்றும் நிச்சயித்துக் கொண்டு மகிழ்ச்சியோடு பூமிக்கு மேல் வந்தார். பிரமா முடியைக் காணாதிருக்கவுந் தமது அகந்தையினால் அதைக் கண்டதாகச் சொன்னார். அப்போது பிரமாவினுடைய ஆணவவலிமையைக் கெடுத்தற்காகச் சிவபெருமான் நேரே தோன்றி அவரைக் கண்டித்து இருவருக்கும் அருள்செய்தார். அந்த அக்கினியைக்காட்டும் மலை (அருணாசலமாகிய) திருவண்ணாமலையாம். இந்தப் பேரருள் கார்த்திகை மாசத்திலே கார்த்திகை நட்சத்திரத்திலே எவரும் பெறத்தக்கது. இந்த ஒளியைக் குறித்தற்காகவே சைவ நாடெங்கும் அந்த நாளிரவில் பல இடங்களிலும் விளக்கு ஏற்றப்படுகின்றது.

நன்றி: சைவபெரியார் சு. சிவபாதசுந்தரனாரின் சைவக் கிரியை விளக்கம்.

---

* விளக்கீடு = விளக்கு + ஈடு (= இடுதல்) = விளக்குகள் வைத்தல்

1. தென்னை பனை, மூங்கில் சண்பகம், வில்வம் முதலிய மரங்களில் ஒன்று
2. தென்னை பனை கமுகு வாழை முதலியவற்றின் இலை.
3. உத்வ சனக்கிரமம்போலும், மேலே மூன்று பங்கும் கீழே இரண்டு பங்குமாகத் தறிக்க
4. தோன்றியநாள் மாசிமாதச் சிவராத்திரி, ஆண்டுகள் தோறுந் திருவண்ணாமலையிலே தோன்றியருள் செய்யும் நாள் கார்த்திகைப் பூரணை. இருவருக்கும் ஈற்றிலே அருள் செய்தநாள் இந்நாள்போலும், கார்த்திகையிற் கார்த்திகை சுப்பிரமணியப் பெருமானுக்கு விசேட தினம்

ஆறுமுகநாவலரும் சிதம்பரமும்

ச. அம்பிகைபாகன்

"சிதம்பரம் போகாமல் இருப்பேனோ
சென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ"

என்று கோபாலகிருஷ்ண பாரதியார் பாடி இருப்பது, நந்தனாருக்குச் சிதம்பர தரிசனத்தில் இருந்த ஆர்வத்தை மாத்திரமல்லாமல், சைவர்களாயுள்ளோர் எல்லோரினதும் ஆர்வத்தையும் பிரதிபலிக்கிறது. சைவர்களாய் உள்ளவர்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது சிதம்பரத்தைத் தரிசிக்காவிட்டாற் பிறவிப் பயனை அடையாதவர்களாகத் தம்மைக் கருதுவர். இப்படி இவர்கள் கருதுவதற்குக் காரணம் சிதம்பரத்தின் ஒப்பற்ற மகிமையே. நாவலர் அவர்கள் சிதம்பரத்தின் மகிமையைப் பெரியபுராணம் தில்லைவாழந்தணர் புராணத்துக்கு எழுதிய சூசனத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

சிதம்பரத்தின் மகிமை

"சாந்தோக்கிய உபநிடதத்திலே பிரமபுரத்திலுள்ள நகரமாகிய புண்டரிக வீட்டினுள்ளே இருக்கும் ஆகாச மத்தியில் விளங்கும் அதிசூக்கும சித்தை அறிதல் வேண்டுமென்று தகரவித்தை சொல்லப்பட்டது. இங்கே பிரமபுரமென்றது இச்சரீரத்தையும், புண்டரிக வீடென்பது இருதயகமலத்தையும், ஆகாசமென்றது பராசக்தியையும், அதிசூக்குமசித்தென்றது பரப்பிரமமாகிய சிவத்தையும் என்றறிக. புறத்தும் இப்படியே இப்பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே இருக்குந் தில்லைவனம் புண்டரிக வீடெனவும், தில்லை வனத்திலிருக்கும் ஆகாசம் பராசத்தியாகிய திருச்சிற்றம்பலமெனவும், அத்திருச்சிற்றம்பலத்திலே நிருத்தஞ் செய்யும் பரப்பிரம்மசிவம் அதிசூக்குமசித்தெனவும் சொல்லப்படும். இவ்வாகாசம் பூதாகாசம் போற் சடமாகாது சித்தேயாம்; ஆதலால் சிதம்பரமெனப்படும். இச்சிதம்பரம் எந்நாளும் நீக்கமின்றி விளங்குந்தானமாதலால், தில்லைவனமும் சிதம்பரம் எனப் பெயர்பெறும்".

தில்லைவாழ் அந்தணர் பெருமை:

மேலே குறிப்பிடப்பட்ட அதே சூசனத்தில் கூத்தப்பெருமானைப் பூசிக்கும் அந்தணர் பெருமையையும் விளக்கியுள்ளார். அதன் சாரம் பின்வருமாறு: ஒருமுறை பிரமா, தாம் புரியும் யாகத்துக்கு உதவிசெய்யும்பொருட்டு வியாக்கிரபாத முனிவரின் அனுமதியோடு தில்லை மூவாயிரவரைக் கங்கை நதி தீரத்துக்கு அழைத்துச் சென்றார். உரியகாலத்தில் அவர்கள் திரும்பிவராதபடியால், வியாக்கிரபாத முனிவர் இரணியவன்ம சக்கரவர்த்தியை அழைத்துவரும்படி அனுப்பினார். அப்படி அழைத்து வந்து தில்லை மூவாயிரவரை எண்ணியபொழுது ஒருவர் குறைவதைக் கண்டு சக்கரவர்த்தி திகைத்தார். அப்பொழுது சிவபெருமான் தேவர் முதலிய யாவரும் கேட்ப பின்வருமாறு கூறினார். "இவ்விருடிகள் எல்லோரும் எமக்கு ஒப்பாவார்கள்" நாமும் இவ்விருடிகளுக்கு ஒப்பாவோம்; ஆதலால் நம்மை இவர்களுள் ஒருவராகக் கைக்கொள்."

மேற்கூறியவாறு சிதம்பரத்தின் மகிமையை உணர்ந்தே நாவலரவர்கள் அதையே கேந்திரமாக வைத்து சைவத்தை வளர்க்க ஒரு மாபெருந் திட்டம் வகுத்தார்.

நாவலர் கல்விப்பணி

சிதம்பரத்திற்குச் செல்லுமுன் நாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணை, கந்தர்மடம், கோப்பாய், பருத்தித்துறை முதலிய இடங்களில் சைவப் பிரகாச வித்தியாசாலைகளைத் தாபித்தார். ஆனால் சிதம்பரத்தில் நாவலர் அவர்கள் ஒரு சாதாரண வித்தியாசாலையைத் தாபிக்கத் திட்டம் போடவில்லை. அவர்கள் போட்டதிட்டம் சைவப்பிரசாரர்களைப் பயிற்றும் ஒரு தாபனத்துக்கே, இத்தாபனம் கத்தோலிக்கரின் செமினறிகளையும் புரட்டஸ்தாந்தரின் மதச்சாத்திரக் கல்லூரிகளையும் போன்றதாகும்.

நாவலர் அவர்கள் சிதம்பரத்தில் தாபிக்க இருந்த நிறுவனத்துக்கு ஒரு பதினான்கு அம்சத் திட்டம் போட்டார். இத்திட்டத்துக்கு முன்னுரையாக பின்வருமாறு கூறியுள்ளார்.: "கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமயநூலைத் தாங்கள் கற்றும் வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும் வருகிறபடியினாலே அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந்தோங்கிவருகிறது". நாவலரவர்கள் மேற்காட்டப் பெற்றவற்றைக் கூறியதற்குக் காரணம் சைவர்களும் கிறிஸ்தவர்களின் முன் மாதிரியைப் பின்பற்றித் தமது சமயத்தை வளர்க்க வேண்டுமென்பதே.

நன்றி: கோயில்

"பாவலர் போற்றும் ஞான தேசிகரை
பணிந்தவ ராணையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப்
புலமிகு மறிவர் கூட்டுண்ணக்
காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டுக்
கருணைகூர் தேசிகர் இவர்க்கு
நாவலரெனும் பேர்தகுமென அளித்தார்
ஞாலத்தார் தருந்தகும் என்ன ?"

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப் பற்றி
சுவாமி விபுலாநந்தர் சூட்டிய கவிதா பாமாலை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

ஆராய்ச்சியாளராகவும் நாடகப் புலவராகவும் வைத்தியராகவும் விளங்கிய யாழ்ப்பாணத்து நல்லூர் ப. கந்தப்பிள்ளை, சிவகாமி என்போரின் கனிட்ட புதல்வர்; திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரின் மரபினர், நொத்தாரிசு தியாகராசா, சின்னத்தம்பி உடையார், நொத்தாரிசு பரமானந்தர், ஆராய்ச்சி தம்பு என்போரின் தம்பி நல்லூர் வித்துவசிரோன்மணி ச.பொன்னம்பலபிள்ளையின் தாய் மாமன், நைட்டிகப்பிரமசாரி.

நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், நல்லூர் வேலாயுத முதலியார், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் என்போரிடம் தமிழ் இலக்கியஇலக்கணங் கற்றவர். யாழ்ப்பாணம் வெஸ்லியன்மெதடிஸ்த மிஷன் மத்திய கல்லூரியில் ஆங்கிலம் கற்றவர். சங்கத மொழியினையும் நன்கு கற்றவர்.

1841 ஆம் ஆண்டு முதல், யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்த மிஷன் மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் பீற்றர் பேர்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராகவும் புரிந்த வேலையை 1848 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் துறந்தவர். 1846 இலே சைவசமயப் பிள்ளைகளை ஒன்று சேர்த்துத் திண்ணைப் பள்ளி ஆரம்பித்தவர், 1848 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வண்ணார்ப் பண்ணையிற் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவியவர். வண்ணைச் சிவன் கோயிலுக்கு முன்னுள்ள வீட்டில் ஏழு மாதமும் பின்பு, கோயில் மடத்திலும் நிலவிய அவ்வித்தியாசாலைக்கு வண்ணை அ. ஆறுமுகச் செட்டியார் தானமாக வழங்கிய நிலத்திற் கட்டடம் கட்டுவித்து 1851 ஆம் ஆண்டிலே நிரந்தரமான இடத்தினை அளித்தவர். 1852 ஆம் ஆண்டிலே ஆசிரியருக்கு வேதனம் கொடுக்க இயலாது அரசாங்கத்திற்கு உதவி கோரி விண்ணப்பித்த போதும் 1870 வரை அரசாங்கம் உதவி வழங்காததால் கொழும்பு இ. நன்னித்தம்பி முதலியார், முதலாம் ஔதாரிகளின் பொருளுதவியாற் கொள்வனவு செய்யப் பெற்ற வியாபாரத் தலங்களின் வருமானத்திலிருந்து 1858 முதலாகவே தம் ஆசிரியருக்கு வேதனம் கொடுத்தவர்.

வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் வளர்ச்சியைக் கண்டு ஊக்கம் பெற்று சைவர்களின் கேந்திரத் தலமான சிதம்பரத்திலே அத்தகைய வித்தியாசாலையை அமைக்கும் நோக்குடன் 1860 இலே தமிழ் நாட்டில் விக்கியாபனம் விடுத்தும், அங்கு போதிய ஆதரவு கிடையாமையால் ஈழத்திற்கு மீண்டு, பல்வேறு இடங்களில் அது விடயமாகப் பிரசங்கங்கள் ஆற்றிப் பொருள் தேடிக் கொண்டு சிதம்பரம் சென்று 1864 இலே வித்தியாசாலை கட்டத் தொடங்கி, மூன்று மாதத்திற்குள் அதனை ஆரம்பித்து வைத்தவர்.

யாழ்ப்பாணத்திற் கோப்பாய், புலோலி எனுமிடங்களிலும் எழுபதுகளிலே சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைக்க முயன்றவர். 1872 முதல் 1876 வரை வண்ணையில் சைவாங்கில வித்தியாசாலை ஒன்றினையும் ஆரம்பித்து நடத்தியவர்.

1868, 1870 ஆம் ஆண்டுகளில் வெளியிட்ட விக்கியாபனங்கள் மூலம் பயிற்சிக் கல்லூரி ஒன்றினை அமைக்கும் திட்டம் ஒன்றினையும் முன்வைத்தவர்.

நேரடியாகவும், தம் வித்தியாசாலைகளிலும், கற்ற, நீண்ட பட்டியலுடைய, மாணாக்கர் பரம்பரையொன்றினை உடையவர். நல்லூர் க. சதாசிவப்பிள்ளை முதலாக நீண்டு செல்லும் அப் பரம்பரை, இருபதாம் நூற்றாண்டின் நான்காம் தசாப்தம் வரை ஈழத்தின் தமிழ்ப் பிரதேசங்களிலே சைவ மரபினைப்போற்றிப் பேணிய பரம்பரையாகச் சிறந்து விளங்கியது. அப் பரம்பரையினருட் சிலர் தமிழ் நாட்டிலும் சைவப் பணிகளிலே முன்னின்றுள்ளனர் என்பது மறுக்கவொண்ணாதது. ஈழத்தவர் மட்டுமன்றித் தமிழ் நாட்டினைச் சேர்ந்தோரும் அப்பரம்பரையில் இடம் பெறுகின்றனர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

1847 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வண்ணை வைத்தீஸ்வரர் கோயில் வசந்த மண்டபத்திலே தொடங்கிய சைவப்பிரசங்கத்தினை 1879 ஆம் ஆண்டு ஆடி வரை, பல்வேறு கருமங்களில் மத்தியிலும், விடாது செய்து வந்தவர். திருவாவடுதுறை ஆதீன கர்த்தரால் நாவன்மை மெச்சப் பெற்று 1849 இலே "நாவலர்" பட்டம் சூட்டப் பெற்றவர். சைவத்தின் உண்மைகளை விளக்கி, சைவ மக்களிடையே புகுந்துள்ள மாசுகளை நீக்கி புறச்சமயிகளின் தீவிர பிரசாரத்தினைத் தடுக்க முற்பட்டவர். கோயிலதிகாரம், பிராமணீயம், வீரவணக்கம் முதலிய சக்திகளின் எதிர்ப்பினைச் சளையாது நின்று எதிர்த்தவர். புராணபடனம், பிரசங்க முறை, துண்டுப்பிரசுரம் என்பனவற்றைக் கருவிகளாகக் கொண்டு சைவப் பிரசாரணம் செய்தவர்.

1849 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து அச்சியந்திரம் கொண்டு வந்து யாழ்ப்பாணத்திலே வித்தியாநுபாலனயந்திரசாலை எனும் அச்சகத்தை நிறுவியவர். அதன் மூலம் சைவர்கள் ஈழத்திலே நிறுவிய முதல் அச்சகத்தின் உரிமையாளரானவர். வித்தியாசாலைக் கல்விக்கும் சைவப் பிரசாரத்திற்கும் அவ்வச்சியந்திரம் போதாதிருந்ததாற் சென்னையிலே ஏனையோர் அச்சகங்களிலும் எழுபதுகளிலே தாம் சென்னையில் நிறுவிய அச்சகத்திலும் நூல்களை அச்சிட்டவர்.

பேர்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராக இருந்த போது வேதாகமத்திருப்புதலுக்கு உதவியவர். அக்காலை பெற்ற அனுபவம் கிறித்தவக் கண்டனத்திற்கு அவருக்குப் பேருதவியாக அமைந்தது.

தந்தையார் மறைந்த போது முற்றுவிக்கப்படாதிருந்த இரத்தினவல்லி விலாசத்தை முற்றுவித்தவர். தேவ கோட்டைத் தலபுராணம் பாடத் தொடங்கி ஐந்நூறு பாடல்வரை பாடியவர். புலோலி நகர் ஸ்ரீபசுபதீசுரப் பெருமானார் திருவூஞ்சல் பாடியவர். தனிப்பாடல்களும் கீர்த்தனைகளும் பாடியவர்.

பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்பவற்றை வசன நடையிலே எழுதியவர். பெரியபுராண வசனம் 1852 இலே திருத்தொண்டர் புராணம் என்ற பெயரிலே வெளிந்தது. அசுரகாண்டம், அசுரயாகப்படலம் வரை எழுதிய கந்தபுராண வசனம் 1861 இலே வந்தது. கோப்பாய் ச. பொன்னம்பலம்பிள்ளை எஞ்சிய பாகத்தை முற்றுவித்து 1911 இலே

முழுப்பதிப்பாகத் தந்தனர். நாவலர் எழுதி முற்றுவிக்காத திருவிளையாடற் புராண வசனத்தினை சுவாமிநாத பண்டிதர் சென்னையிலே 1910 இற் பதிப்பித்தனர்.

பெரிய புராணம் உணர்த்தும் உண்மைகளை விளக்க நாவலரவர்கள் எழுதிய " பெரிய புராணம் சூசனம்" முற்றுப் பெறவில்லை. சிதம்பரதலத்தின் வரலாறுகளைச் சுருக்கிச்கூறுவது நாவலரவர்கள் எழுதிய "சிதம்பரமான்மியம்"

அனுட்டானவிதி முதற்புத்தகம் (நித்தியகன்ம விதி), அனுட்டானவிதி இரண்டாம் புத்தகமும் குருவாக்கியமும், சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், சைவவினாவிடை முதற்புத்தகம், சைவ வினாவிடை இரண்டாம் புத்தகம் (1875) என்பனவும் சைவசமயி, அநாசாரம், திருக்கோயிற் குற்றங்கள் (1878) எனும் தொகுப்பும் சைவர் பொருட்டு நாவலரவர்கள் எழுதியவை.

யாழ்ப்பாணச் சமயநிலை (1872), நல்லூர்க் கந்தசுவாமி கோயில் (1875), நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இரண்டாம் பத்திரிகை (1875), மித்தியாவாத நிரசனம் (1876), போலியருட்பா (1869) என்பன சைவரிடையே புகுந்து விட்ட மாசுகளைக் கண்டித்து நாவலரவர்கள் எழுதியவை.

சைவதூஷண பரிகாரம் (1854), சுப்பிரபோதம் (1853) வக்கிர தண்டம் நாவலரவர்கள் எழுதிய கிறித்தவ கண்டனங்கள்.

திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி (1851), திருமுருகாற்றுப்படை, சைவசமயநெறி (1868) கோயிற்புராணம் (1868) மருதூரந்தாதி, சொரூபானந்தப் பொருளாகிய உபநிடதம் எனும் சமய சம்பந்தமான செய்யுணூல்களுக்கு உரை கண்டவர்.

சௌந்தரியலகரியுரை (1849) புட்பவிதி (1851) கொலைமறுத்தலுரை (1851), ஞானக்கும்மி, மேசுமதபரிகாரம், கோயிற்புராணம், மறைசையந்தாதி, திருக்கோவையார் உரை (1860). திருவாசகமும் திருக்கோவையாரும் (1859) சேதுபுராணம் (1866) சிதம்பர மும்மணிக்கோவை (1867) அருணகிரிநாதர் திருவகுப்பு (1867) கந்தபுராணம் (1869) பதினோராம் திருமுறை (1869) விநாயக கவசம், சிவகவசம், சத்திகவசம், சகலகலாவல்லிமாலை எனும் சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம், நால்வர் நான்மணிமாலை, பெரியநாயகிவிருத்தம், கூகலித்துறை, பிக்ஷாடண நவமணிமாலை, பட்டினத்துப்பிள்ளையார், திருப்பாடற்றிரட்டு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, குளத்தூர் அழுதாம்பிகை பிள்ளைத்தமிழ், திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருச்செந்தூரகவல் முதலிய சமய சம்பந்தமான செய்யுணூல்களைப் பதிப்பித்தவர்.

சமய சம்பந்தமற்ற வசனம் எழுதியும் உரை எழுதியும் நூல்களைப் பதிப்பித்தும் பணிபுரிந்தவர்.

நன்றி : "இந்துக்கலைக்களஞ்சியம்"
ஆசிரியர் : பேராசிரியர் பொ. பூலோகசிங்கம்

அடுத்து வரும் விசேட தினங்கள்

25.11.96	கார்த்திகை	10	விநாயக விரதாரம்பம்
2.12.96	கார்த்திகை	17	ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை
10.12.96	கார்த்திகை	25	அமாவாசை விரதம்
15.12.96	கார்த்திகை	30	விநாயக ஷஷ்டி விரதம்
16.12.96	மார்கழி	1	திருவெம்பாவை பூசை ஆரம்பம்
20.12.96	மார்கழி	5	சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம்
24.12.96	மார்கழி	9	பூரணை விரதம் – இரவு நடேசர் ஆர்த்திராபிஷேகம்
25.12.96	மார்கழி	10	உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம்
8.1.97	மார்கழி	24	அமாவாசை விரதம்
14.1.97	தை	1	தைப்பொங்கல்
23.1.97	தை	10	பூரணை விரதம் – தைப்பூசம்
7.2.97	தை	25	அமாவாசை விரதம்
20.2.97	மாசி	9	நடேசரபிஷேகம்
22.2.97	மாசி	11	பூரணை விரதம் – மாசி மகம்
7.3.97	மாசி	24	மகா சிவராத்திரி
8.3.97	மாசி	25	அமாவாசை விரதம்
23.3.97	பங்குனி	10	பூரணை விரதம் – பங்குனி உத்தரம்
7.4.97	பங்குனி	25	அமாவாசை விரதம்
14.4.97	சித்திரை	1	ஈசுர புதுவருடப் பிறப்பு

இந்து ஒளி அடுத்த இதழ் மகாசிவராத்திரி தினமான 7.3.97 (மாசி 24) அன்று வெளிவரும்

நற்சிந்தனை

சஞ்சலம் வந்தால் வரட்டும்

(சுமார் 55 ஆண்டுகளுக்கு முன் சிவயோக சுவாமிகளின் ஆணைக்கு அமைய சிவதொண்டன் இதழில் வெளிவந்த கட்டுரை இது)

சஞ்சலம் வராமல் இவ்வுலகில் வாழவும் முடியுமோ? இவ்வுலகிற் பிறப்பதையே பிணியாகச் சொல்லப்பட்டிருக்கிற பொழுது சஞ்சலத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? சஞ்சலம் வந்துகொண்டேயிருக்கும். ஆனால், அதனால் பாதிக்கப்படாமலிருக்கவும் வழி காட்டப்பட்டிருக்கின்றது. சற்குருவின் கடாட்சத்தாலும் மெய்யறிவைப் பெறுவதாலும் அவ்வழி எதுவெனவறிந்து, அதைக் கடைப்பிடித் தொழுகுவோமாகில், சஞ்சலம் நம்மை அலைக்கவும் முடியாது, அசைக்கவும் முடியாது.

இவ்வுலகத்திலோ யாவும் அநித்தியம். இத்தேகம் அநித்தியம். பஞ்சபூதங்கள் அநித்தியம். ஐம்பொறி; ஐம்புலன்கள் அநித்தியம். பெண்டிர்பிள்ளை அநித்தியம். பொருள்பண்டம் அநித்தியம்; சீர்சிறப்பு அநித்தியம். பேர் புகழ் அநித்தியம். அதிகாரமும் செல்வாக்கும் அநித்தியம். எல்லாம் அநித்தியம். ஆகையால், இவைகளில் மயங்கிப் பற்றுவைப்பது சஞ்சலத்துக்கிடமாகும். இவை நாமல்ல. இவை நமக்கந்நியமானவை. கருமம் புரிவதற்கு இவைகள் உபயோகப்படுவன. அவைகளை அந்த உபயோகத்துக்குதவக்கூடிய நிலையில் வைத்துப் பேணவேண்டியது முறை. ஆனால் அவை நமக் கென்றும் வேண்டியவையுமல்ல. நம்மைவிட்டுப் பிரியாது என்றும் இருப்பவையுமல்ல. ஆகையால், மனத்தை விடயங்களில் அதிகஞ் செல்லவிடுவதால் சஞ்சலத்தை வரவழைப்பதல்லாமல் வேறொரு பிரயோசனமும் பெறமுடியாது.

யாக்கையே நிலையற்றபொழுது யாக்கை சம்பந்தமாக அநுபவிக்கும் சுகங்கள் நிலைத்தாலென்ன, நிலையா விட்டாற்றானென்ன? ஈற்றில் எல்லாம் அநித்தியமாகவே முடிகின்றது. ஆகையால் அநித்திய வஸ்துக்களில் பற்று வைப்பதில் ஒரு சுகமுமில்லை. கடைசியில் எல்லாம் சஞ்சலத்தையே வருவிக்கின்றன. ஒன்றும் பூரணவின்பத்தைக் கொடுப்பதாயில்லை. அவற்றின் சுகம் சிற்றின்பமாகவே முடிகின்றது. சிற்றின்பம் நிலையாத இன்பம். அதன் விளைவு துன்பம். அது நம்மைப் பந்தப்படுத்தும் இன்பம். உலக வாழ்வின் சஞ்சலங்களையெல்லாம் கண்ட விவேகி அச் சஞ்சலங்களுக்குக் காரணமாயிருப்பனவற்றை ஒரு பொழுதும் நாடமாட்டான்.

நித்தியா நித்திய விவேகம் ஒன்றுமே மனிதனைச் சஞ்சலத்திலிருந்து மீட்கக்கூடும். நித்தியானந்த நித்திய வஸ்துவாகிய இறை எம்முடன் என்றும் உள்ளது. அது நம்மை விட்டு ஒரு காலத்திலும் பிரியாதது. அதை உணர்வதே வீடு. அதைப் புசிப்பதே பேரின்பம். அதில் சொக்குவதே இறவா இன்பம். அது குணங்குறியற்றது. அது ஒரு மாதிரியிலுமில்லை, அது ஆச்சிரமங்களில் தங்கியிருக்க வில்லை, சாதி, சமயம், தொழில் முதலியவைகளாலுண்டாகும் பேதங்களில் அது தங்கியிருக்கவில்லை. எல்லோருக்குஞ் சமபாகமாயுள்ளது. எவரொருவருக்குஞ் சொந்தமானதன்று. எல்லாவற்றையும் மறந்து அதன் நினைவு ஒன்றேயிருந்தால் போதும். ஒரு துக்கமும், ஒரு சஞ்சலமும் நம்மைப் பாதிக்கமுடியாது.

கடவுள் ஒருவரே நித்திய வஸ்து. நாம் வேறு, கடவுள் வேறு எனுமெண்ணம் நமக்கொரு காலத்திலும் இருக்கப்படாது. நம்முடையதென்று ஒன்றையும் வைத்திருக்கப்படாது. நமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அவரிடத்தே ஒப்படைத்துப் போடவேண்டும். நான் என்ற நினைவேயிருக்கப்படாது. எல்லாம் அவருடையதாய் விட்டு விட வேண்டியது. தனம், தானியம் பூமி முதலிய சகல சம்பத்தும் அவரால் நமக்களிக்கப்பட்டன. எல்லாம் அவருடையது. நமக்கென்று எதுவிருக்கின்றது? நம்முடன் கூட வந்ததெது? நம்முடன் கூடப் போவதெது? ஒன்றுமேயில்லை. எல்லாம் வந்தவாறு ஏதோ மாயமாய்ப் போய் விடும். ஆகையால் நிலையற்ற பொருட்களில் மனத்தைச் செல்லவிடுவது சஞ்சலத்துக்கிடமாகும். அவைகளில் பற்று வைப்பது தவறு. ஏதுமொரு காலத்தில் அவைகள் நம்மை விட்டுப்பிரியவேண்டி வரும். அப்பொழுது சஞ்சலத்துக்கிடமாகும். பரம் ஒன்றே எக்காலத்தும் நம்மைவிட்டுப் பிரியாமலிருக்கின்றது. அது நித்தியமான பொருள், பண்டும், இன்றும், என்றும் அது நம் உயிருக்குயிராய் நம்மறிவினுக்கறிவாய், நம்மை விட்டுப் பிரியாதிருக்கின்றது. வாழ்விலும் தாழ்விலும் இன்பிலும், துன்பிலும், இறப்பிலும், பிறப்பிலும் நம்முடன் எக்காலத்துங் கூடவேயிருக்கின்றது. நமக்கு என்றும் வழிகாட்டுவதும் அதுவே. அதன் சந்நிதானத்தை விட்டு ஒரு காலமும் விலகமுடியாது. அஃது அப்படியேயுள்ளகாரியம். எப்பவோ முடிந்த காரியம்.

எல்லாம் சிவன் செயல். உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம்– இறைவனுடைய சந்நிதானத்தில் ஒரு பிழையுமுண்டாகாது. எங்களுக்கு அது வேண்டும் இது வேண்டும் என ஆசைப்படவேண்டியதில்லை. எதைக் கடவுள் நமக்குக் கொடுக்கிறாரோ அதை நாம் சந்தோஷமாக ஏற்க வேண்டியது. கடவுளுடைய ஆசீர்வாதம் நமக்கெப்பொழுதும் உண்டு. அதைப்பற்றி நமக்குச் சற்றேனும் ஐயமிருக்கப்படாது. சில காரியங்கள் நமக்கு விளங்காமலிருக்கலாம். அதையிட்டு நாமேன் கவலைப்படவேண்டும்? எல்லாம் கடவுளுடைய சித்தத்தின்படி நடந்துகொண்டு போகின்றன. நாமொன்றுமறியோம். எல்லாம் அவர் அறிவார். எமது கடன் பணிசெய்து கிடப்பதே. இறைவன் சந்நிதானத்தில் நாம் என்றுமிருப்பதால் நமக்கொரு குறையுமில்லை. நமது செயலொன்றுமில்லை. எல்லாம் ஈசன் செயல் எனும் உணர்ச்சி நாளாந்தம் வளர்ந்துகொண்டு போக 'ஒரு பொல்லாப்பும் இல்லை' எனும் மகா வாக்கியத்தின் உண்மையை நாம் உணரக்கூடியதாய் வரும். திடபக்தி வேண்டும். கடவுளிலே பூரண விசுவாசமிருக்க வேண்டும். அதைவிடச் சிறந்த கவசம் வேறொன்றுமில்லை. என்ன வந்தாலும் அசையாமலிருக்கப் பழகவேண்டும்.

"சஞ்சலம் வந்தாலும் வரட்டும்- வேல் வேல்
சற்றும் அலையாமல் சாந்தத்தில் கூட்டு

ஒரு பொல்லாப்புமில்லை."

நடராஜர் அபிஷேகங்கள்

ஓர் ஆண்டில் நடராஜப் பெருமானுக்கு ஆறு அபிஷேகங்கள் நடைபெறும். நமக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆதலின், நடராஜப் பெருமானுக்கு ஓராண்டில் நிகழும் ஆறு அபிடேகங்களும் ஒரு நாளில் நடைபெறும் ஆறுகாலப் பூசையைக் குறிப்பன.

சித்திரை - திருவோணம் (உச்சிக்காலம்)
ஆனி - உத்திரம் (திருவந்திக்காப்பு)
ஆவணி - சுக்கிலபட்ச சதுர்த்தசி (இரண்டாம் காலம்)
புரட்டாசி - சுக்கிலபட்ச சதுர்த்தசி (அர்த்தயாமம்)
மார்கழி - திருவாதிரை (விடியல்)
மாசி - சுக்கிலபட்ச சதுர்த்தசி (காலசந்தி)

இந்த ஆறு அபிடேகங்களைக் குறிக்கும் வெண்பா வருமாறு:

"சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்தரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும் – பத்தி
மாசியரி கன்னிகருவு சதுர்த்தசி மன்னும்
ஈசர்அபி டேகதின மாம்"

பற்றற்ற வாழ்வு

திருடாதிருக்கும் குணத்தோடு சேர்ந்தது பற்றற்ற வாழ்வு. அவசியமில்லாத போதும், அதன் சொந்தக்காரனாக இருப்பதற்காக ஒருவன் சொத்து வைத்திருப்பானாயின் அவனும் ஒரு திருடனேயாவான். வருங்காலத்திற்காக வைத்திருப்பது சொத்து. சத்தியத்தைத் தேடுபவனும், அன்பு வழியைக் கடைப் பிடித்தவனும், 'நாளைக்கு என்ன செய்வது' என்ற கவலையற்றவர்களாதலால், சொத்து வைத்துக் கொள்ள இடமில்லை. நாளைக்காகக் கடவுள் கொடுப்பதில்லை. அன்றன்று வேண்டியதை மட்டும் அவர் படைத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய கடாக்ஷத்தில் நாம் நம்பிக்கை வைத்திருப்போமாயின், அன்றாடம் வேண்டிய உணவையும் அவசியமான இதர தேவைகளையும் அவர் தருவார். எந்தச் சாதுக்களும், பக்தர்களும், இந்த நம்பிக்கையோடிருந்தார்களோ அவர்கள் தங்கள் அனுபவத்தால் இந்த உண்மையை அறிந்திருந்தார்கள்.

'அன்றாடம் வேண்டியதையே பகவான் தந்திருக்கின்றார், அதற்கு மேல் தரவில்லை' என்பதை நாம் நமது அறியாமையினாலோ, அல்லது அறிய விரும்பாத தன்மையினாலோ உணர்ந்து கொள்ளாமலிருக்கின்றோம். பணக்காரர்களிடம் மிதமிஞ்சிய பொருள்கள் இருக்கின்றன. அவ்வளவு அவர்களுக்குத் தேவையில்லை. அவைகளை அதிகமாக அவர்கள் கவனிப்பதுமில்லை. ஆதலால்

பொருள்கள் வீணாகின்றன. ஆனால், அதே பொருள்களை வேண்டி லக்ஷக் கணக்கான மக்கள் பட்டினி கிடந்து சாகின்றார்கள். அவனவனுடைய தேவைகளை மாத்திரம் ஒவ்வொருவனும் வைத்துக் கொண்டிருப்பானாயின், உலகில், ஒருவருக்காவது தேவை இருக்காது; எல்லோரும் சந்துஷ்டியாய் வாழ்வார்கள். இது அனுட்டிக்கப்படாததால் ஏழைகளுக்கு எப்படி மனக்கிலேசங்கள் உண்டாகின்றனவோ அவ்வாறே செல்வர்களும் கிலேசமடைகின்றனர்.

தங்களுடைய வயிறு நிரம்பத்தக்க அளவு கிடைத்திருப்பினும் ஏழைகள் சந்துஷ்டியடையாதிருக்கின்றனர். அவர்களுக்கு வேண்டிய அளவு அவர்களுக்குக் கிடைக்கவே வேண்டும். அவர்களுக்கு அந்த அளவு கிடைக்குமாறு செய்வது சமூகத்தின் கடமையாகும். உலகத்தில் சந்துஷ்டி பரவியிருப்பதற்காகப் பணக்காரர்கள் இந்தக் காரியத்தை தலைமேற் போட்டுக் கொள்ள வேண்டும். அவர்கள் தங்களிடம் ஓர் குறிப்பிட்ட அளவுக்குப் பொருள் வைத்துக் கொண்டிருப்பார்களாயின் ஏழைகளுக்குச் சோறிடலாம்; மேலும், அந்த ஏழைகளைப் போலவே 'போதுமென்ற' ஓர் மனோபாவத்தையும் அடையலாம்.

- மகாத்மா காந்தி

The Late Mr. V. Balasubramaniam

"Hindu Approach to Modern Crisis"

V. Balasubramaniam Memorial Oration delivered at ACHC Headquarters, on 28.07.1996

by
Hon. Justice C.V Wigneswaran
Judge of the Court of Appeal

Gurur Brahma Gurur Vishnu
Gurur Devo Maheshwaraha
Guru Shakshat Para Brahma
Tasmai Shri Gurave Namaha

Mr. Chairman, Your Excellency, Ladies & Gentlemen,

Let me thank the All Ceylon Hindu Congress for giving me this opportunity to deliver this lecture in memory of one who did yeoman service to the Congress as well as to society in general. The late Mr. V. Balasubramaniam had tasted life at both ends so to say. There was a time when he realized what penury and indigent circumstances meant and also a time when he savored wealth and luxury. There was a time when he enjoyed good health and carefree living and also a time when he experienced the constraints of a life of much responsibility though poor in health. Yet when he could afford he gave. It was his quality of giving, of being philanthropic and generous, which had endeared him to all and sundry. It was his initiatives which made the All Ceylon Hindu Congress to accelerate the construction of these Head Quarters which had been stagnating for over 20 years. These annual memorial orations are therefore the thanksgiving of a grateful fraternity of well wishers.

The subject chosen for this occasion is "The Hindu Approach to Modern Crisis".

The lives of Hindus all over the world are today in great conflict. The Hindus have begun to perceive a strident dichotomy between their ideals and the actuality of modern living. Modern Science and technology have imperceptibly ushered a culture that is not conducive to Hindu ethics. Conflict between capital and labour, strikes, lock-outs, unemployment, rising population, disruption of ecological balance, communal, linguistic and regional antagonisms and hatreds, though the hall marks of the internecine warfare in the West in yester-years if not even today, have begun to permeate the social fabric of the Hindus thus affecting their attitudes to life in general.

Today the Hindus have begun to realize the dangers of the adulteration of their ideals, and the imminent subversion of their way of life by the technological perspectives and its concomitant philosophy coming from the West. Conflict, adharma, disintegration are being driven into the body and soul of Hindu Society both from within and without. The contemporary culture has cast its tentacles deep into the Hindu way of life and created areas of stress and strain. The process of debasement of the ancient ideals and values of the Hindus, their ways of life and thought is rapidly spreading through out India and other countries where Hindus live. The time has come for us to take stock of the situation, recognize and reorient ourselves in terms of our traditional norms and values as otherwise we would soon be swept away by the avalanche of hatred, greed and selfishness that characterizes the emerging culture.

From the time Man emerged from his primitive isolation and learnt to live societally his problem had been to evolve a type of human personality who will be self-integrated in physical, emotional, mental, moral and spiritual aspects and thereby produce an idyllic human social order which would be free from all elements of friction, discord, conflict and in which there would be a harmonious blend of the interests of both the individual and the group. This was the task set by the ancient saints and sages of India too. In these efforts, the Hindu social thought, I submit, as do many others today , had been in advance of the contemporary social thought of the West. The Hindus in their ideas had (i) supplied the cosmic background to our mundane existence; (ii) they had woven the contributions of the physical, biological and social sciences into the warp and woof of social

relationship; (iii) they had formulated an ideological structure with profound psychological insight, ethical earnestness and fervour and spiritual illumination and (iv) they had given expression to a system known for its supreme practicality as a scheme of life.

The Hindu ideal was embodied in one word - Dharma. This ideal arose out of religion, the fundamental teaching of which was unity. There is in fact only one Existence in which all beings are rooted. However varied the appearances, however different the forms, they are but branches from a single trunk. "All beings have root in me" said Krishna in the Bagavad Gita. From this naturally followed the view that each individual was but a part of a whole. He was not isolated; he was not independent. He was a part of a vast interlinked and inter dependent order. He was not born free. He was born into numerous obligations and by the very fact of living he was constantly adding to his debts. The happiness of the whole of society and each of its parts depended upon the harmony and due integration of these parts. Humanity together with all animals and all immovable things made a symbiotic whole and each unit entering into the composition of that whole was subordinate to and existed for the use of that whole. No man existed for himself nor for his own separate ends. He existed for all and for the common ends of society. A finger does not exist for itself and by itself. It is part of the body. It exists in the body and for the use of the body. A finger that wanted to be free and independent would be a monstrosity or absurdity. So with man-said the Hindu saints and sages. He was a member in a great body and existed for the use of that body. To think otherwise was considered ignorance. An illusion of separateness.

Thus the Hindu ideal was "Man who was dutiful" rather than "Man who was free". Man was expected to recognise all his obligations and live as part of a greater whole not as an independent being.

The Hindu therefore did not ask "What were his rights?". He asked "What were his duties?" He accepted the plan of society formulated by Rishis with the object of securing that each man should do his duty as the rational expression of social Dharma. Nothing was said about rights. Each man obtained his rights when all around him discharged their several duties. To do duty, to the Hindus, was to be in accord with the divine working.

The Western mind perceived life differently. The evolution of man in the West brought on a rapid growth of the lower mind, the mind dealing with concrete objects, the reasoning, questioning, scientific mind. As this developed man's sense of separateness, of his own personal "I" increased. "I am myself", "you are yourself", "this is mine", "that is yours" - these feelings of the personal self grew and flourished exceedingly. As this growth proceeded the underlying tendency moved some of the keenest minds in the West to formulate this sense of "I - ness" and "my - ness" into an ideal. It was the ideal of the single, independent man, man in isolation, as a self-reliant, self-dependent being, the single man like an Arnold Schwarzenegger standing by himself with a right to exercise all his powers for his own advantage. He was conceived of as alone, as a solitary human being and the whole fabric of society was looked at from this stand point, the stand point of the "Rights of Man".

Then the question arose how can society be formed out of a number of individuals, separate and isolated each claiming to have his or her individual rights. The social contract theory (Le Contract Social) of Jean Jacques Rousseau was the answer.

"Man is born free". None should have any title to his obedience. None should command him without his own consent. He should have the right to take whatever he can and to hold whatever he can. The strong hand, the strong brain was its own justification. "Might was right" said the Western mind indirectly.

But it was found that the strongest must at sometime or other become weak, occasionally ill or might decay into old age. The strong individual could then become in his weakness a victim. Then he would crave for protection. Thus came the "social contract theory". It was made out that man gave up some of his natural inherent right to do as he pleased in exchange for protection in the rest of his rights. He would not take from others by force when he was strong and able to do so, if others would protect him in the enjoyment of his possessions when he was weak. Thus laws arose such as:

(i) thou shall not murder
and (ii) thou shall not steal.

In return, the rights of the individuals were laid down :-

(i) thou shall not be murdered
and (ii) thou shall not be robbed.

Further it was ordained that "if thou be murdered or robbed thy murderer or thy robber be punished".

Mutual agreement from this standpoint was the basis of laws. No man was to be ruled except by his own consent. No man would have part of his property taken from him as taxes except by his own consent. This became the foundation of the Western democratic theory of society and government.

This ideal, an individual being clothed in his rights, took hold of the minds of the Western world during the last third of the 18th century. The "Rights of Man" formed the basis of the Declaration of Independence which created the great Republic of the West and tore the American Colonies from the Monarchy of England to build them into the United States of America. The American Constitution was based on the "Rights of Man". The French Revolution raised its Republic on the "Rights of Man". In England too the same idea took root and Thomas Paine's famous "Rights of Man" became the battle cry of British Democracy. Gradually its main ideas became incorporated into the Western political system of the 19th century.

This was the Western ideal-the free, independent, strong, self-reliant human being in whom rights were inherent, in-born, given by God or Nature, over whom none had any right to tyrannize none had any title to control.

We could perceive the difference in attitudes between the Western and the Hindu mind. Their ideals had been different. But the Indian subcontinent had to put up with the more potent and militant Western armed thrust which looked down upon the Indian mind.

It is only in recent times, there has been a greater awareness in the West regarding their unrealistic approach, an approach which has led to chaos in this world, very surprisingly, largely due to the growth of science. The whole tendency of modern science has been towards unity and not separateness.

Professor Fritjof Capra in his book "The Tao of Physics" states as follows:-

".....the basic elements of the Eastern world view are also those of the world view emerging from modern physics."

He goes on to say that the two basic themes of the Eastern world view, (which includes the Hindu view) and the contemporary scientific point of view are the unity and interrelation of all phenomena and the intrinsically dynamic nature of the Universe. Both points of view see the world as a system of inseparable, interacting and ever moving components with the observer or the individual being an integral part of this system.

He further goes on to make a bold statement. "In our Western culture which is still dominated by the mechanistic, fragmented view of the world, an increasing number of people have seen this as the underlying reason for the widespread dissatisfaction in our society and many have turned to Eastern ways of liberation".

Therefore the world has reached a stage where an integrated, interrelated, connected attitude to life has become essential as opposed to a tendency to divide the perceived world into individual and separate things. The latter attitude gives rise to the experience of isolated egos which is the outcome of our measuring and categorizing mentality.

This mentality Hinduism refers to as avidya or ignorance. What it means is the ignoring of the basic unity of the Universe and the interrelatedness of all persons and things. It is also the building up of an illusive notion of an isolated individual self and the distancing of the individual from the ultimate reality.

This precisely was what the Western mind created. 17th century philosopher Descartes' famous sentence "Cogito ergo sum" - "I think therefore I exist" - had led the Westerners to equate their identity with their mind, instead of with their whole organism. As a consequence of the Cartesian division , most individuals have become aware of themselves as isolated egos existing "inside" their bodies. The mind had been separated from the body and given the futile task of controlling it, thus causing an apparent conflict between the conscious will and involuntary instincts. Each individual has been further split up into a large number of separate compartments, according to his or her activities, talents, feelings, beliefs etc. which are engaged in endless conflicts generating continuous metaphysical confusion and frustration. The Ego thrives on a relationship which sees opposition and conflict. This is its chief weapon and it uses such relationship to maintain a sense of separateness from the rest of creation for that is its purpose.

The natural environment thus has been treated as if it consisted of separate parts to be exploited by different interest groups. The fragmented view was further extended to society which thus split it into different nations, races, religions and political groups. The belief that all these fragments - in ourselves, in our environment and in our society- are separate, can be seen as the essential reason for the present series of social, ecological and cultural crises. It has alienated us from Nature and from our fellow human beings. It has brought a grossly unjust distribution of natural resources creating economic and political disorder. It has brought an ever rising wave of violence, both spontaneous and institutionalized. It has brought about an ugly, polluted environment in which life has often become physically and mentally unhealthy if not unbearable.

Thus the Western mechanistic world view has been both beneficial and detrimental at the same time. It was extremely successful in the development of classical physics and technology but has had many adverse consequences for our civilization and culture.

In contrast to this mechanistic Western view stands the Hindu view of the world which is "organic". All things and events perceived by the senses are, as stated earlier, interrelated, connected and are seen as organs or parts or aspects or manifestations of the same ultimate reality. It is therefore intrinsically dynamic and contains time and change as essential features. Hinduism sees the Cosmos as one inseparable reality for ever in motion, alive and organic. In other words spiritual and material at the same time. The Hindu view of the Divine is not that of a ruler who directs the world from above but of a principle that controls everything from within.

It was said in the Brihad-aranyaka Upanishad (3.7.15) as follows:-

He who, dwelling in all things,
Yet is other than all things,
Whom all things do not know,
Whose body all things are,
Who controls all things from within -
He is your soul, the Inner Controller,
The Immortal.

Thus the Hindu Approach to Modern Crisis would firstly be the providing of a consistent and relevant philosophical background to the theories of contemporary Science. It is a conception of the world in which scientific discoveries can be in perfect harmony with spiritual aims and religious beliefs. The two basic themes of this conception are the unity and inter-relation of all phenomena and the intrinsically dynamic nature of the Universe. Hinduism informs the world that the multitude of things and events around us are but different manifestations of the same Ultimate Reality. This Reality is the unifying concept which gives Hinduism its essentially monistic character in spite of the worship of numerous gods and goddesses - a unity in diversity.

The dynamic nature of the Universe is spelt out by Hinduism looking at the world as the stage for divine play. This play or lila is accomplished by maya. Maya does not mean that the world is an illusion. It means illusion lies in our point of view because we think that the shapes and structures, things and events around us are realities of nature instead of realising that they are concepts of our measuring and categorising minds. Maya is the illusion of taking these concepts for Reality. Thus in the Hindu view of nature all forms are fluid, relative and ever changing. The dynamic force of this play is karma which is the active principle in this play, the total Universe in action, where everything is dynamically connected with everything else.

Having first provided the philosophical background we thus come over secondly to the active principle in this play which is 'Karma', 'Karma' generally means action. 'Karma' has also acquired a psychological sense. That is, as long as our view of the world is fragmented, as long as we are under the spell of 'maya' and think that we are separated from our environment and can act independently we are bound by 'karma'. To be free from the bond of 'karma' means to realise the unity and harmony of all nature including ourselves and to act accordingly. The Gita is very clear on this point.

"All actions take place in time by the interweaving of the forces of nature, but the man lost in selfish delusion thinks that he himself is the actor".
(Chapter III verse 27)

To break the bonds of karma means to realise that all the phenomena we perceive with our senses are part of the same Reality. It means to experience concretely and personally that everything including our own

self is Brahman. Even this understanding merely intellectually without actual experience gives us humility which is an essential pre-requisite for an integrated life. We begin to understand that we are creating 'karma' all the time. We realise that we get the objects that we had desired in the past. We have character and capacities for which we had laboured and therefore are born in environments which we have opted. Character is thought formed. Man is born with what he has thought upon and his present character is an index of his previous thoughts. Man creates his future by his thought now. If he thinks nobly, he will be noble in conduct; if he thinks basely, no environment will make him different. Knowing this man should be able to manipulate this law of 'karma' for his own purpose and progress. Those psychological elements in us by means of which we carry on interaction with the life around us fall under the mechanism of social interaction termed 'Dharma'.

We therefore now come over to the third important aspect of the Hindu approach.

'Dharma' emphasises the totality of man's response to the impact of the outside world, natural and social, in accordance with his psycho-physical development. These responses may broadly be called man's duties. Each human being has certain duties to perform depending on his station in life and his psychological evolution.

Hindus recognised four human types from a psychological standpoint. The man of the first type was quiet in his ways and was given to intellectual pursuits. Thinkers, professors, priests, preachers and philosopher-states-men fell into this category. The man of the second type was of energetic temperament; administrators, warriors, politicians and public servants fell into this category. The man of the third type was impelled by desire. He was a man of possessive instincts, a trader, a financier or husbandman. He attended to the material needs of the community. The fourth type which comprised the majority was psychologically an undefined type of personality. His thoughts, actions and desires did not make a coherent integrated pattern. Generally such a person was swayed by the impulses of the moment. His mental and moral career had not come to the point where he knew what he was or what his goal in life should be. He was therefore expected to co-operate with the other groups by calm obedience and patient service. These four groups had functions or occupations that were in conformity with their inner awakening which were respectively

(i) guiding others
(ii) protecting others,
(iii) sharing with others and
(iv) co-operating with the above three groups.

Hinduism calls these inherent tendencies in individuals also as Dharma. In fact we know any object by its dharma. The dharma of fire is to burn; of the sun to shine and give heat; of water to quench thirst or put out fire. These roles cannot be reversed. So too every human being, Hinduism says, has his own dharma, the dominant note of his being, which distinguishes him from the rest of his fellow men. Thus the recognition of one's dharma and fulfillment of same is pivotal to Hindu social ethics. The concept of dharma supplies the psychological, ethical and spiritual foundations in terms of which the individual and the group are related to each other. Dharma indicates the predominant characteristic of the inner self of each individual and to live and work in accordance with this basic note of his being, can alone ensure progress and ascent.

In consonance with the psychological development of the individual the Hindus provided four social institutions through which each of them should go through so that there would be a progressive and orderly fulfillment of their demands of inner and outer lives in which lies the secret of social progress. At each stage of their life, they were to be given opportunities and scope for exercising their respective inborn faculties. Each stage was designed to be a preparation for the next. These four social institutions were education (brahmacharya stage) family-economics (grahastha stage), state or public or social service (vanaprastha stage) and religion (samnyasa stage).

The Hindu approach to modern crisis visualises a change in the perspectives of the individual and also a change in the vision of societies and nations. It envisages

(i) the recognition of the inter-relatedness of everything in the Universe and the essential unity be-

hind all diversity which is also recognised by Science today. Such a recognition shatters the very foundation of exclusiveness hitherto practised since the necessity for a consensual, corporate existence in this world becomes clear.

(ii) the understanding of 'Karma' which is the dynamic force behind all phenomena. Acting without fragmentation gives rise to humility in the individual and the society. They thus pursue a 'live and let live' policy. The desire to project one's self above the others, one's needs above the others, one's interests, whether present or future, above the others, then dwindles away. The realisation comes about that if a person or group of persons spread happiness around they will reap happiness. If they had spread misery they must be prepared to face the just retribution. Thus the awakening dawns that action and its fruit are inter dependent.

(iii) the acknowledgment of the necessity to fulfil every person's dharma or duties in consonance with the stage and station in their lives. This draws every individual into associated life and makes him a fully integrated individual-an individual who is responsible and responsive to the needs of others. The change in the individual changes society. This change is the blossoming out of love and care in the hearts of men and women. The only power that can undo the Ego is love. Love does not destroy the Ego, but the Ego becomes meaningless in its presence. Such a state of love would not be considered as a farfetched ideal if we remember the life of Emperor Asoka, who from being a conceited, tyrannous ruler became a benign and gentle giant, beloved of all his subjects. Duty, dedication and discipline were the hallmarks of his devoted reign after his pyrrhic victory in the Kalinga War. So the three important words in the Hindu approach are Dharma, Karma and Para Brahma.

As opposed to this approach the Westerners had propagated a view of separateness, life of ego-centricity and the concept of stressing the rights of man, all of which have contributed to the unstable and chaotic condition of this world today. We must not forget that the East and the South still live in the shadow of the West and the North due to the legacies of a bye-gone colonial era.

The propagation of a Hindu modus vivendi keeping more in tune with modern scientific discoveries must act as a palliative to the modern malaise which is basically the inability to comprehend the unity and interdependency of mankind. Hinduism recognises brotherhood of man not on the pre-condition of any fundamental belief but simply because beings of this world are inter related. Hinduism recognises that all human beings are children of God in heaven despite their varied beliefs. As such their paternity is not disputed even to an agnostic, non-believer or an atheist. The Hindu approach embraces all. To foster such an approach Hindus all over the world must first realise that behind the heterogeneous rituals and varied formalities among the votaries of the Hindu religion itself wherever they may be resident, there is an unmistakable syntax of cultural and religious unity among all of them which creates and sustains an indissoluble bond. The Ramakrishna Mission specially and many other institutions and individuals have no doubt given leadership during the course of this century to highlight the cultural and religious identity and affinity of those professing the multifaceted paths of Hinduism. Fortunately their peregrinations were not manipulated for any purpose of proselytisation. Yet the time is ripe for the far-spread fraternity of the Hindus all over the world to come forward to stress the invisible religio-cultural ecumenism of the Hindus which has the capacity to embrace the whole world despite its diversity and divisions since it now stands out as a plausible alternative to the hitherto materialistic and mechanical world view point. Hinduism fortunately does not postitulate any pre-conditional beliefs. It recognises the differences in perception since man is subject to evolution. It recognises that Truth "Is ", whatever may be the beliefs of votaries. Recognition of Truth is more important to the Hindus than imposition of beliefs. One who recognises the perennial truth-the Sanadhana Dharma - wherever he is, whatever be his colour or community, he is a Hindu.

Of course perception of unity of mankind does not mean the deliberate extermination of all other groups who stand for individualism or exclusiveness. The wanton destruction of the Mosque at Ayodya by misguided pseudo- religionists was the very anti-thesis of the perennial Hindu philosophy which preached the twin concepts of justice and unity. There must no doubt be the realisation of the essential unity of mankind but we must also recognise the varietal diversities among hu-

man beings. We must recognise the inexorable law of 'karma' which invariably metes out justice. If the pursuit of unity among mankind is one side of the coin truth and justice should form the other side. There cannot be unity without fairplay and justice. In such a pursuit among humanity based on unity justice, fair play and truth we must no doubt face attempts at expansionism, imperialism-economic or otherwise-and chauvinism by misguided groups or individuals. In this respect Buddhism as an off shoot of Hinduism has preached compassion and respect for the view point of others. No doubt these concepts are complementary for the attainment of a veritable Utopia.

At the same time it must not be forgotten that Hinduism also preaches unmitigated resistance to evil. Arobindo Ghosh observed that non-resistance to evil is false to experience and foolish to reason. Hence the stress on unity based on justice, fairplay and compassion.

Even in our Country it is the awareness of the more powerful majority despite its mental complexities and fears both actual and imagined, of its obligations towards minorities on the basis of humaneness, humility and harmonious relationship that can form the cornerstone of an enduring peace. Our great and friendly neighbour with her hoary and hallowed Hindu tradition could no doubt ensure this if it could with sincerity pursue the great ideals of the Hindus thereby creating a haven of human happiness in this country as well as in this World. Modern India thus has an obligation to shed its Western oriented viewpoints and project the Hindu approach to World crises both for its survival as well as that of the rest of the World. Modern Science demands it.

Sacred Ashes.

The chief religious emblem of the Saivite creed is their "Sacred Ashes" and it is one of the essential doctrines of that creed that worshippers of Siva should wear these ashes on their body, chiefly in their forehead, in conformity with the rules laid down on the subject. We know that the different nations of the world have their respective insignia and I know of no one calling the possession of such an insingnia as a superstitious practice. But in the case of the emblem of the of the Saivite creed, although it is full of meaning, the critics would not hesitate to call it a rank superstition.

I will explain here shortly the practice of wearing ashes for the edification of the critice as well as that of others who run the risk of being prejudiced by violent criticisms. Sacred ashes represent the Grace of God that illumines a soul on the removal therefrom of its inherent impurity of mala. Ashes, it must be understood, are produced by burning of cow-dung in the Sacred fire. Cow duing is symbolical of the mala-power (Pasumalam) in man-Pasu being a name of soul as well as for cow; and malam being a name for our ignorance (Pasa) and cow down. When the malam that envelopes the soul is burnt by the fire of Jnanam or pure wisdom, the Grace of God shines forth, and this Grace is symbolized by the sacred ashes-white in colour. It is rubbed in our body to remind us of the Grace of God which we have to seek daily. There are several other reasons for the wearing of ashes, but I will not enter into them here, as it is for seekers after truth to find them out. I will only say that the preparation of these ashes is attended with a good deal of religious rites and ceremonies, which, coupled with the sanctity of the cows, add greatly to the importance of the "Sacred ashes".

From "Essentials of Hinduism in the light of Saiva Siddhantha" by Sabaratna Mudaliyar.

Our Belief and Conviction

Our belief and conviction about God who exists behind all things should be emotionally acceptable, intellectually sound and above all practical and demonstrable in our lives.

-Swami Shantanand Saraswathy

அபரக் கிரியைகள்

அபரம் என்பது பின் என்ற பொருள் தருவது. இறந்த பின் செய்யப்படும் கிரியைகள், அபரக்கிரியைகள். பிரேதக்கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆட்டைத்திதி, திவசம் என்பன அபரக்கிரியைகள்.

ஒருவர் இறந்த பின்னும் அவருக்கு வாழ்வுண்டு என்ற நம்பிக்கையே அபரக்கிரியைகளுக்குக் காரணமாம். இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள் வரை (அந்தியேட்டிவரை) அருவமாய் இறந்தவர் உயிர் விடும்போது இருந்த இடத்திலே இருந்து அந்தியேட்டியில் தொடர்பு நீங்கித் தான் செய்த நல்வினை தீவினைப்படி சுவர்க்க நரகத்தையடைந்து இறையருளால் வினையைத் தொலைக்க மீண்டும் பிறந்திறந்து இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனும் நிலைகளை அடைந்து இறையடி நீழலிலே சென்று ஆனந்த நிலையில் அடங்குவர்.

அபரக் கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. அதற்குத்தக்க அளவு உயிரைப்பற்றிய மல பந்தம் விலகும். மலம் விலகும் அளவுக்குச் சிவத்தன்மை சிறிது சிறிதாகப் பற்றும். கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும் போது முழுமையாக அது சிவத்தன்மை பெற்றுவிடும்.

அந்தியேட்டி வரை செய்யப்படும் கிரியைகள் உடலைத் தொடர்புபடுத்திச் செய்யப்படுவன. பின்பு உயிரைக்கருதிச் செய்யப்படுவன. அந்தியேட்டி வரை செய்யும் கிரியைகளின் பலனை அவர் நேரடியாகவே பெறுகிறார். அந்தியேட்டியின் பிறகு நிகழும் கிரியைகளின் பலனை மேலுலகத்திலுள்ள பிதிரர்கள் என்ற தேவசாதியார் ஏற்று அவர்கள் எங்கிருந்தாலும் அங்கங்கு சேரச் செய்கிறார்கள்.

பிதிரர், படைப்புக் காலத்திலே இறந்தவர் நலன்களைக் கவனிக்கச் சிவபிரானால் நியமிக்கப்பட்டவர்கள். இறந்தவர் பேரில் அவர்களைக் குறித்துச் செய்யும் எள்ளும் தண்ணீரும் இறைத்தற் கிரியையால் (திலதர்ப்பணம்) அவர்கள் திருப்தியுற்று இவரைக்குறித்துச் செய்யும் தான தரும பலன்களை அவர்கள் ஏற்று தவத்தின் மூலம் அவருக்கு நன்மை விளைவிப்பர். அதே வேளை, கிரியை செய்பவர் மேல் அவர் தந்தை தாய் முதலியோர் சொரியும் அன்பையும் ஆசியையும் இவர்கள் பெறும் வகை செய்வர். அதனால் தான் பிதிர்க்கடன் பிரதான கடன் எனப்படுகின்றது.

பிரேதக்கிரியையில், கும்பபூசை, அக்கினி காரியங்கள் இறந்தவரைச் சிவமாக்கும் முயற்சிகள். கும்பங்களில் உருத்திரனையும் திக்குப்பாலகர்களையும் எழுந்தருளப் பண்ணிப் பூசிப்பார்கள். அக்கினியிலும் சிவனை எழுந்தருளச் செய்து பூசிப்பார்கள். கும்பங்களிலுள்ள சிவத்தன்மை, உடலை நீராட்டும் போது உடலிற் செறியும், அக்கினியின் சிவத்தன்மை அதிகரிக்க உதவும்.

இறந்தவர் உயிர்விடும் போது கிடந்த இடத்தில் அன்று தொட்டு இளநீர் அல்லது தண்ணீர்ச் செம்பு வைப்பதும் 'எட்டு' வைபவத்தின் போது அவர் விரும்பியவை சகலவற்றையும் படைத்து வைப்பதும் பாடல், படிப்புகள் முடிந்தபின் படைத்தவற்றிற் சிறிது சிறிதாக எடுத்து முகட்டை நோக்கிக் காட்டுவதும் எரிந்த பின்னும் உடல் இருந்த சூழலில் இறந்தவர் இருக்கிறார் என்ற நம்பிக்கையைக் காட்டுவன.

அந்தியேட்டிக் கிரியைக்கு அமைக்கும் மாக்கோடிட்ட மண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் ஐந்து நிற மாக்கள் சதுர வடிவில் பரப்பப்பட்டிருப்பது பஞ்ச பூதங்களைக் குறிக்கும். அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கி விடுவதை அந்தியேட்டி காட்டும். தநுகரண புவன போகங்களை எல்லாம் இடித்து நொறுக்கி இல்லாமற் செய்தல் பொற்கண்ணம் இடித்தல் உணர்த்துவது. இது பிரேதக்கிரியையிலும் அந்தியேட்டியிலும் நடக்கும் கிரியை.

அந்தியேட்டி முடிவில் நடப்பன வீட்டுக் கிரியைகள் எனப் பொதுவாக வழங்கப்படுவன. சபண்டீகரணம், ஏகோதிட்டம், தசதானம் முதலிய பல கிரியைகள் வீட்டுக் கிரியைகளிலுள.

தேகத்தொடர்பு நீங்கி தனக்குரிய கதியில் செல்பவரின் பாதையில் விக்கினங்களால் கஷ்டம் ஏற்படாது விமோசனம் அளிக்கும் நோக்கில் இடம்பெறுவன வீட்டுக்கிரியைகள். இக்கிரியைகளில் குடை, செருப்பு, விளக்கு, செம்பு, தண்ணீர் முதலிய எல்லாம் கொடுப்பது அவ்வசதிகள் வேண்டியிருக்கும் பாதையில் அவை அவருக்கு உதவட்டும் என்பதற்காகவே.

சபண்டீகரணம் வீட்டுக்கிரியையிலே முக்கியமானது. பிதிரர்களின் உதவி வேண்டிச் செய்வது சபண்டீகரணம். பிதிரர்களுக்கு அறிகுறியாக மாவுடன் எள், அரிசி, தேன், சர்க்கரை, தயிர், குழைத்துருட்டிய பிண்டங்களை இட்டு வைத்து அவற்றுக்கு எதிர் இறந்தவரைக் குறிக்கும் பிண்டம் வைத்து கிரியை செய்பவர் எல்லோரையும் ஒருசேரப் பூசித்து எல்லோருக்கும் நைவேத்தியம் கதலீ பல தாம்பூலம் சமர்ப்பித்து தூபதீபாராதனை செய்து முடிவில் இறந்தவரைக் குறிக்கும் பிண்டத்தைப் பிதிரரைக் குறிக்கும் பிண்டத்தோடு ஒன்று சேர்ப்பதைக் காணலாம்.

அந்தியேட்டிக்குப் பின் நிகழும் கிரியை பொதுவாக சிரார்த்தம் எனப்படும். சிரத்தையோடு செய்யப்படுவது சிரார்த்தம். ஆட்டைத் திதி, திவசம் இரண்டும் நம்மவர் மத்தியில் சிரார்த்தம் எனச் சிறப்பாகக் குறிக்கப்படும்.

நன்றி : "இந்துக்கலைக் களஞ்சியம்"
ஆசிரியர்: பேராசிரியர் பொ.பூலோகசிங்கம்

மார்கழித் திருவாதிரையும் திருவெம்பாவையும்

திருமுருக கிருபானந்தவாரியார்

மார்கழித் திருவாதிரை

காருற்ற ஆணவக் கருவறையில் கண்ணில்லாக் குழந்தையைப் போல் கட்டுண்டு கிடந்த ஆன்மாக்களுக்குக் கருணைக் கடலாகிய இறைவன் தநுகரண புவன போகங்களை யருளி ஐம்பெருந் தொழில்களை யயர்கின்றான். அவை இறைவனுக்கு விளையாட்டுப் போலே ஆயாசமின்றி நடைபெறுகின்றன. ''காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி'' என்பார் மாணிக்கவாசகர்.

திருக்கோயில்களில் நாள்தோறும் நடந்து வரும் வழிபாடுகள் இந்த ஐம்பெருந் தொழில்களையே உணர்த்தி நிற்கும்.

1. வைகறையில் பள்ளியறையின் திருக்காப்பு நீக்கித் தரிசிக்கப் பெறுதலாகிய ''திருவனந்தல்'' என்று சொல்லப் பெறுகின்ற திருப்பள்ளியெழுச்சி அருளலை (அநுக்கிரகத்தை)க் குறிக்கும்.

2. பின்னர் அபிஷேகம் முதல் நடைபெறும் வழிபாடு படைத்தல் என்ற சிருஷ்டியைக் குறிக்கும்.

3. அதற்குப் பின் அடுத்த காலம் முதல் அர்த்தயாமப் பூஜைக்கு முன் நிகழ்கின்ற வழிபாடுகள் யாவும் காத்தல் என்ற திதியைக் குறிக்கும்.

4. அர்த்தயாம வழிபாடு அழித்தல் என்ற சங்காரத்தைக் குறிக்கும்.

5. பள்ளியறை வழிபாடு திரோபவம் என்ற மறைத்தலைக் குறிக்கும்.

இவ்வாறு ஆண்டவன் அருளால் அயரும் ஐம்பெருந் தொழில்களின் குறிப்பே கோயில் வழிபாடுகள் எனவுணர்க.

இனி, தேவர்களுக்கு ஒருநாள் நமது வருடமாகும். தை முதல் ஆனி வரை பகல்; ஆடி முதல் மார்கழி வரை இரவு ஆகும். இந்த முறையில் மார்கழி மாதம் விடியற்காலமாகும். ஆண்டு முழுவதும் அவ்வம் மாதங்களில் செய்யும் விழாக்களும் இந்த ஐம்பெருந் தொழில்களையே உணர்த்தும்.

1. மார்கழி மாதம் விடியற்காலையாதலினால் அம்மாதத்தில் நிகழும் திருவாதிரை விழா அநுக்கிரகம் என்ற அருளால் ஆகிய இனிய தொழிலையுணர்த்தும்.

2. தை மாதம் நிகழும் விழா படைப்பு. (சிருஷ்டி)

3. மாசிமாதம் முதல் ஐப்பசி மாதம் வரை நிகழும் விழாக்கள் காப்பு. (திதி)

4. கார்த்திகை மாதத்தில் நிகழும் விழா அழித்தல். (சம்மாரம்)

5. கார்த்திகை மாதத்தில் உத்சவ முடிவாகிய திருக் கார்த்திகையின் மறுதின முதல் மார்கழி மாதத்தின் திருவாதிரைத் திருவிழாக் கொடியேற்றத்தின் முன்னாள் வரையிலுள்ள நாட்கள் திரோபவம் என்பதை (மறைத்தலை) யுணர்த்தும். திரோபவம் நீங்க மற்ற சிருஷ்டி முதலிய நான்கினுள்ளும் ஐம்பெரும் தொழில்களின் தூல நிலைகள் காட்டப்பெறுகின்றன.

1. கொடியேற்றுதல் - சிருஷ்டி
2. நிவேதனங்கள் - திதி
3. கிருஷ்ணகந்தம் - சம்மாரம்
4. தேரோட்டம் - திரோபவம்
5. தீர்த்தவாரி - அநுக்கிரகம்

1. **கொடியேற்றம் :-** ஆணவ இருளில் கிடந்த ஆன்மாக்களை அதினின்றும் மேலேற்றி உய்விக்கும் பொருட்டுச் செய்வதே சிருஷ்டி. விடை எழுதிய கொடியை மேலேற்றுதல் அதனை உணர்த்தும்.

2. **நிவேதனம்:-** மும்மல நீக்கத்தின் பொருட்டு ஆன்மகோடிகளுக்கு அளித்தருளிய உடம்பு, உலகம் நுகர்வுப் பொருள்கள் முதலியவற்றைத் தருவதே காத்தற்றொழிலாகும். இதனைப் பற்பல நிவேதனஞ் செய்வது உணர்த்தும்.

3. கிருஷ்ணகந்தம்:- ஏழாந் திருநாளன்று நடராஜ மூர்த்திக்குச் சாத்தப்படுகின்ற கருநிறமுள்ள மை.

ஆன்ம கோடிகளைக் கட்டுப்படுத்தியு பாசத்தை ஞானக் கண் நோக்கினால் ஒடுக்குதலை இது உணர்த்துவதனால் சம்மாரம் எனப்படும்

4. தேர் விழா:- துன்பமயமான உலக வியாபாரங்கள் யாவும் கீழ்ப்பட மேற்கொள்வது தேரேறுதல். இது மறைத்தலாகிய திரோபவம் ஆகும்.

5. தீர்த்தவாரி : இறைவனது கருணைமயமான தண்ணீரிலே ஆன்மாக்கள் முழுகி ஆச்சாரியனுடைய திருவருளால் மலநீக்கம் பெற்று சத்திபதிந்து உய்வு பெறுதலாம். இது அநுக்கிரகமாகும்.

எனவே நித்திய நைமித்திய வழிபாடுகளும் திருவிழாக்களும் இறைவனுடைய ஐம்பெருந்தொழில்களை உணர்த்தும் பொருட்டு நடைபெறுகின்றன.

ஆகவே இவற்றுள் மார்கழியில் நிகழும் விழா அநுக்கிரகமாகும் என்று கூறினோம். இது எல்லா விழாக்களிலும் மிக மிகச் சிறப்புடையதாகும்.

கிழமைகளில் சோமவாரம் சிவபெருமானுக்கு உரியது. நட்சத்திரங்களில் திருவாதிரை சிவபெருமானுக்கு உரியதாகும்.

திருவாதிரை நட்சத்திரத்தில் தீர்த்தவாரியாகக் கொண்டு மார்கழியில் திருவிழா நிகழும்.

தோற்றத்தை உடுக்கையாலும், காத்தலை அபயத் திருக்கரத்தாலும், அழித்தலைக் கரத்தில் ஏந்திய அக்கினியாலும், மறைத்தலை ஊன்றிய திருவடியாலும், அருளலைத் தூக்கிய குஞ்சிதபாதத்தாலும் காட்டியருளும் நடராஜ மூர்த்தியின் விழா இத் திருவாதிரையிலே நிகழும். பூலோக கைலாயமாகிய சிதம்பரத்திலே கனக சபாபதிப் பெருமானுடைய இந் நல்விழா மிகவுயர்ந்த முறையில் நடைபெறும். ஆ ! ஆ ! அடியவர்களின் திருக்கூட்டம் அரஅர என்று முழக்கம் புரிந்து ஆனந்தமுறும்.

சேந்தனார் இறைவனுக்கு நிவேதித்த பரிகலசேடமே உண்ணும் நியதியுடையவர். ஒரு மார்கழித் திருவாதிரை நாளிலே அவருக்குப் பிட்டுங் களியுமேயமையப் பெற்றன. மனவருத்தத்தோடு அவற்றை இறைவனுக்கு நிவேதித்தனர். அவருடைய மெய்யன்பை விளக்கும் பொருட்டு, நடராஜ மூர்த்தி, தமது சிற்சபையிலே பிட்டுங் களியும் உதிர்ந்து கிடக்குமாறு செய்தருளினார். இதனைக் கண்ணுற்ற தில்லை மூவாயிரம் அந்தணர்களும், ஏனைய அடியார்களும், எல்லையில்லாத மகிழ்ச்சியுற்று இறைவனுடைய திருவருளின் எளிமையையும், சேந்தனாருடைய அன்பின் அருமையையும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். அன்று தொட்டு இன்றுவரை மார்கழித் திருவாதிரை தோறும் பிட்டுங்களியும் எம்பெருமானுக்குச் சிறந்த நிவேதனங்களாக அமைந்து வருகின்றன.

மார்கழித் திருவாதிரைத் திருவிழா முழுவதும் அநுக்கிரக வடிவமாதலால், அநுக்கிரகத்தைக் குறிக்கும் தீர்த்த ஸ்நானம் முக்கியமாதலால், அம்மார்கழி நித்திய பூஜாநுக்கிரகமாகிய விடியற்காலையில் தீர்த்தத்தில் முழுகி திருவடி தரிசனம் புரிவது ஆன்றோர் ஆசாரம்.

இதனால் திருவருணையில் எழுந்தருளியிருந்த நமது நான்காவது குருமூர்த்திகளாகிய மணிவாசக அடிகளார் மார்கழி விடியற்காலை தீர்த்தமாடப் போக வேண்டும் என்று ஒரு பெண், மற்றொரு பெண்ணை எழுப்புவதாகவும், சிவமயமாகிய நீரில் முழுகுவதாகவும், திருவடியைத் தரிசிப்பதாகவும் அமைந்திருக்கும் திருவெம்பாவையை அருளிச் செய்தனர்.

இத் திருவெம்பாவையை அன்பர்கள் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் ஒதி, முழுகி, திருநீறு பூசி, ஒருமைப்பட்ட மனத்துடன் வழிபடுவாராயின் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் பெற்று உய்வர்.

திருவெம்பாவை

திருவாசகத்திலே ஒரு சிறந்த பகுதி திருவெம்பாவை. இது மார்கழியில் ஓதவேண்டிய சிறப்புடையது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருத்தில்லையிலே ஒரு புறம் பர்ணசாலை அமைத்து, அதில் இருந்து தவம் புரிந்துகொண்டிருந்தார். அம்பலவாணர் ஒரு தவமுனிவராகச் சென்று மாணிக்கவாசகரைக் கண்டு. "அன்பரே! தாங்கள் பாடியருளிய திருவாசகத்தைச் சொல்லும்; நான் எழுதிக் கொள்ளுகிறேன்" என்றார். அவருடைய விருப்பப்படியே மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தைக் கூறினார்.

எல்லாம் எழுதி முடித்தபின், ஆனந்தக் கூத்தர், "அன்பரே! பாவை பாடிய வாக்கினால் கோவை பாடும்" என்று அருளிச் செய்தார். இங்கே பாவை யென்பது திருவெம்பாவையைக் குறிக்கும். திருவாசகத்துக்குள் 'பாவை பாடிவாய்' என்று இதனைச் சிறப்பித்துக் கூறினார். எனவே திருவெம்பாவை ஒப்புயர்வற்ற உன்னத வாக்கு.

மார்கழிச்சிறப்பு

இதற்கு மற்றொரு சிறப்பும் உண்டு. மார்கழி மாதத்தில் பன்னிரு திருமுறைகளையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு, இத்திருவெம்பாவை ஒன்றை மட்டுமே, ஒத வேண்டும். இது இன்றும் நிகழ்கின்ற ஆன்றோர் மரபு.

மார்கழி மாதம் சிறந்த மாதம்; கல்வியிற் சிறந்தவர் சூரியமூர்த்தி. அவர் தேவகுருவாகிய வியாழ பகவானுடைய வீடாகிய தநூர் ராசியில் சஞ்சரிக்கின்ற மாதம் மார்கழி. அதனால் அம்மாதம் உயர்ந்தது. கண்ணபிரான் கீதையில் 'அர்ஜுனா! நான் மாதங்களில் மார்கழி மாதமாக இருக்கிறேன்' என்கிறார். இம் மார்கழி தீட்சைக்கு உரிய மாதம்.

இனி பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தில் **திருவாதிரை** திருவிழாவும், பூலோக வைகுந்தமாகிய ஸ்ரீரங்கத்தில் **ஏகாதசி** நல்விழாவும் நடைபெறுவது மார்கழியில் தான்.

வைகறை வழிபாடு

மார்கழி மாதம் வைகறையில் செய்யும் வழிபாட்டைப் **பற்றிச்** சிவாகமத்தில் ஒரு வசனம் வருகின்றது.

"சாபகத பாநு திவஸாந்த்ய நிசிகாலே
ஆதிசிவ தேவ்யாஸஹ ஏகதின பூஜா
ஏகதின பூஜாபலம் கோடிதினே நாஸ்தி
இந்த்ரபதி இந்த்ரசிவ கோடிதின வாஸம்"

இதன் பொருள்:

சாபம்– வில், கத–அடைவது, தநூர் ராசியில் சூரியன் **சஞ்சரிக்கின்ற** மாதமாகிய மார்கழில், விடியற் காலத்தில் **உமையம்மையுடன்** கூடிய சிவபெருமானை ஒருநாள் **வழிபடுவார்களாயின்**. அந்த ஒருநாள் பூஜைக்கு மற்றைய நாட்களில் கோடி நாள்களின் பூஜை நிகராகாது. மேலும் மார்கழி மாதம் விடியற்காலையில் ஒருநாள் சிவமூர்த்தியை வழிபட்டவர்கள் இந்திரனை போன்ற சிறப்புடன் சிவபோகத்தில் இந்திரனுடைய நாட்களில் கோடி நாட்கள் இன்புற்று இனிது வாழ்வார்கள்.

(நமது ஆண்டுகளில் முந்நூற்றறுபது கொண்டது ஒரு தேவ ஆண்டு)

பாராயணப் பலன்

உத்தமமான பிறப்பெடுத்த நாம் இத்தகைய புனிதமான மார்கழி மாதம் விடியற்காலையில் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது, துயில் எழுந்து, நீராடி, நீறாடி, திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி என்ற இரு நூல்களையும் பக்திபரவசத்துடன் பாராயணம் புரிதல் வேண்டும். அங்ஙனம் **புரிவோர்க்கு** ஆணவ இருள் நீங்கி சிவஞான ஒளி உண்டாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் **அருளிச்** செய்த, திருவெம்பாவை, நவசக்திகளும் தமக்குள் துயில் **உணர்த்தும்** தன்மையை உணர்த்துவது.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை
யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதுஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசு? ஏல்ஓர் எம்பாவாய்"

அருள் ஜோதி

இறைவன் ஜோதிமயமானவன். அருட்பெருஞ் ஜோதி. இன்ன காலத்திலே தோன்றிய ஜோதி என்ற காலவரம்புக்கு அது உட்படாதது. அதற்கு முடிவுமில்லை. முதலும் முடிவும் இல்லாத அருமை பெருமை யுடையது.

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி'

என்ன அருமையான அமுதவாக்கு! தித்திக்கின்ற தேனமுத வாக்கு.

'வாள் தடம் கண் மாதே! –ஒளிபெற்ற விசாலமான கண்களையுடைய பெண்ணே!

ஒளியும் அகலமும் படைத்த கண்ணுடையவளே என்று அழைத்ததனாலும் இப்போது துயில்கின்றபோது இருளும் குவிதலும் பூண்டிருக்கின்ற கண் என்பதனைக் குறிப்பிடுகின்றது. உய்த்துணர வைத்தல் என்ற உத்தி.

'வளருதியோ'– இன்னும் நீ கண் வளரலாமோ?

வன் செவியோ நின் செவிதான்– உனது மென்மையான காது என்ன வன்மை பெற்றதா?

அன்பின் காட்சி

'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே'

நாங்கள் வீதியில் தேவதேவனாகிய சிவபெருமானை வாழ்த்திய ஒலியைக் கேட்ட மாத்திரத்தில்,

' விம்மி விம்மி மெய்ம்மறந்து போதார்
அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே....!

அன்புள்ள ஒருத்தி ஆனந்த மேலீட்டாலும் அன்பின் உணர்ச்சியாலும் விம்மி, விம்மி, தன் உடம்பை மறந்து மலர் நிறைந்த படுக்கையின்மீது புரண்டு தன் வசம் இழந்து ஒன்றையும் உணராது கிடக்கின்றாள். (இதோ பார் இந்த அன்பின் காட்சியை)

"ஈதே என் தோழி"–எமது தோழியே! இதுவல்லவா சிவபக்தி? என்ன அதிசயம்! நீ பார்!

'பரிசு ஏல் ஓர்', இத்தன்மையை நீ ஏற்று ஆராய்ந்து பார்!

'எம்பாவாய் –எமது பாவை போன்றவளே!

இத்தகைய அற்புதமான இனிய பாடல்களாகிய திருவெம்பாவையை அன்பர்கள் மார்கழி மாதம் வைகறையில் தவறாது ஒதி, அகம் புறம் என்ற இரு இடங்களிலும் நின்று சிவனருளால் இகம் பரம் என்ற இருமை நலன்களையும் பெறுவார்களாக.

அங்கத்துவ சங்கங்களுக்கு

உங்களுடைய பணிகள் பற்றிய செய்திகளை இரத்தினச் சுருக்கமாக அடுத்த இதழில் வெளியிட 15.2.97க்கு முன் அனுப்பவும்.

புதிய அங்கத்துவம்

இதுவரை மாமன்றத்தில் சேராத இந்துமன்றங்களை மாமன்றத்துடன் இணையுமாறு அழைக்கிறோம். விண்ணப்பப் பத்திரங்களை மாமன்றத்தலைமையகத்திலிருந்து தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இந்து நாகரிகப் பயிலரங்கு

அகில இலங்கை இந்து மாமன்றக் கல்விக்குழு அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கத்தின் அனுசரணையுடன் கல்விப் பொதுத்தராதரப் பத்திர(உயர்தர) வகுப்பில் இந்து நாகரித்தை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர் நலன் கருதி இலவச பயிலரங்குகளை ஒழுங்கு செய்து நடத்தியது.

கொழும்பு – 4, சரஸ்வதி மண்டபத்தில் வார இறுதி நாட்கள் ஒன்பதில் மணி 9.00 முதல் 4.00 வரை நடைபெற்ற இப் பயிலரங்குகளில் பங்குபற்ற 119 மாணவர்கள் பதிவு செய்திருந்தனர். கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மேல் மாகாணத்திற்குட்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதில் பங்கு பற்றிப் பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இராமகிருஷ்ண மிசன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தா அவர்களும், யாழ். மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களும் ஆசி கூறிப் பயிலரங்கை ஆரம்பித்து வைத்தனர். பயிரலங்கின் ஆரம்பக் கூட்டத்திற்கு அகில இலங்கை இந்து மாமன்றக் கல்விக்குழுத் தலைவர் க. அருணாசலம் தலைமை வகிக்க மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டனும், மாமன்றத் துணைச் செயலாளரும், கல்விக்குழுச் செயலாளரும், அனைத்திலங்கை இந்து வாலிபர்சங்கப் பொதுச் செயலாளருமான திரு. தமனோகரனும் பயிலரங்கின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தனர்.

பயிலரங்கின் விரிவுரையாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. என். கிருஷ்ணவேணி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செல்வி புனிதச் செல்வி. யோகேஸ்வரி முருகேக, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி. கிருபா பவசிங்கம், கொழும்பு இந்து சமய ஆசிரிய ஆலோசகர் திருமதி ஹேமாவதி சண்முக சர்மா, பாமன்கடை அரசினர் தமிழ் வித்தியாலய ஆசிரியர் எம். மனோகரன், கொழும்பு, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி கௌரி இரத்தினவேல், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆசிரியை ஜெயபவானி இராசரத்தினம், புளுமெண்டோல் தமிழ் வித்தியாலய ஆசிரியை செல்வி. ச. லிங்கேஸ்வரி அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த திரு. சோ. முரளி ஆகியோர் இருந்து உதவினர்.

பயிலரங்கின் நிருவாகக் கடமைகளைக் கல்விக் குழுச் செயலாளர் த. மனோகரனும், அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்க உறுப்பினர்களான நா. யோகராஜா, மா. கணபதிப்பிள்ளை ஆகியோரும் ஆற்றினர்.

மாணவர்களுக்குத் தேநீரும், பகல் உணவும் வழங்குவதற்கு பதவிதாங்குநர்கள் சிலர் தமது சொந்தக் கணக்கில் உதவியமை குறிப்பிடற்பாலது. பயிலரங்கை நடத்த இந்து வித்தியாபிவிருத்திச் சங்கத்தினர் இடமளித்து உதவியதுடன் யுனி ஆட்ஸ் நிறுவனத்தினர், மாணவர்களுக்கான கோவை உறைகளை இலவசமாக வழங்கினர். கலர் டொட் நிறுவனத்தினர் ஏனைய அச்சுவேலைகளுக்கு உதவி வழங்கினர்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் முதன் முதலாக நடத்தப்பட்ட இப் பயிலரங்கு பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் மாமன்றக் கல்விப் பணியின் ஆரம்பமாகவும் அமைந்தது. திருகோணமலை, அட்டன் ஆகிய நகரங்களிலும் இவ்வாறான பயிலரங்குகள் நடத்தப்பட வேண்டுமென்று விடுக்கப்பட்ட வேண்டுகோள் மாமன்றம், கல்விப் பணியில் ஆற்ற வேண்டிய கடமையை உணர்த்துவதாயுள்ளது.

மனப்பூர்வமாக ஒத்துழைத்து மாமன்றத்திற்குப் பெருமை சேர்த்த விரிவுரையாளர்களுக்கு மாமன்றத்தின் நன்றி என்றும் உண்டு.

பயிலரங்கில் பங்குபற்றிய மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படவும், விரிவுரையாற்றிய கல்வியியலாளர்களைக் கௌரவிக்கவும் விரைவில் கல்விக்குழு விழா ஒழுங்கு செய்யவுள்ளது.

அடுத்த இதழுக்கு ஆக்கங்களையும் 'இந்து ஒளி' மேலும் சிறப்புற ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வரவேற்கிறோம்.

ஆசிரியகுழு

தைப்பொங்கல் - பட்டிப்பொங்கல்

தை மாத முதல்தேதியில் சூரியன் மகரராசியில் பிரவேசிப்பதால் இதனை மகரசங்கிராந்தி என்பர். இத்தினத்தில் விசேஷ சூரிய பூஜை வழிபாடுகளும் தர்ப்பணங்களும் செய்வர்.

மார்கழிமாதக் கடைசியாகிய தைப்பொங்கலுக்கு முதல் நாளில் பழைய யாவும் கழித்து வீடுவளவுகளைத் துப்புரவு செய்து போகிப்பண்டிகை என்றபெயரால் தமிழகத்தில் கொண்டாடுவர்.

தை முதலாம் நாளிலே முற்றத்திலே பசுஞ்சாணத்தினால் மெழுகிக் கோலங்கள் இட்டு மூன்று கற்களை அடுப்பாக வைத்துப் புதுப்பானையில் பச்சரிசிப் பொங்கலிட்டுச் சூரியனுக்குப் படைப்பார்கள். பானைக்கு மஞ்சள், மாவிலை என்பன கட்டுவர். முழுக்கரும்பினை அருகில் நாட்டியும், மாவிலை, தோரணங்களால் அவ்விடத்தை அலங்கரித்தும் சூரியபகவானைப் பிரார்த்தித்து இஞ்சி, மஞ்சள், கரும்பு, வெற்றிலை, பாக்கு, பழவகை என்பவற்றை நிவேதனம் செய்வர். கும்பம்வைத்து, சூரியனை, சாயாதேவி, உஷாதேவி சமேதராக ஆவாகனம் செய்து முறைப்படி பூஜிப்பதும் உண்டு.

புத்தாடை அணிதல், பட்டாசு கொழுத்தல், வான வினையாட்டுக்களில் ஈடுபடுதல் என்று மகிழ்ச்சியான கொண்டாட்டமாக யாவரும் இதனைக் கொண்டாடுவர். உயர்ந்த மரங்களில் அன்ன ஊஞ்சல் கட்டிப் பாடி ஆடுதல், இப்போது மறைந்து விட்ட யாழ்ப்பாணக் கலாசாரங்களில் ஒன்று.

உத்தராயண கால ஆரம்பநாளான தைமாதப் பிறப்பில் அதுவரை நிலவிய மழைக்காலக் குளிரும் கஷ்டமும் நீங்கி ஒரு புத்துணர்வும், "தைபிறந்தால் வழிபிறக்கும்" என்ற நம்பிக்கையும் உண்டாகின்றது.

தைப்பொங்கலை உழவர் திருநாள் என்று சொல்வர். உலகுக்கு உணவிடும் உழவர் பெருமக்கள் உலக ஒளிக்கடவுளாகவும், உணவு சிறக்க உதவுபவருமாகிய சூரிய பகவானுக்கு நன்றி கூறி விழா எடுக்கும் நாள் உழவர் பெருநாள் தானே!.

தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் பட்டிப்பொங்கல். உழவுக்கு உதவுவதுடன் நமக்கு வேண்டிய நிறை உணவையும் தருகின்ற மாடுகளுக்காகப் பட்டிகளைத் துப்புரவு செய்து அலங்கரித்து மாடுகளையும் நீராட்டி மாலை, சந்தனம் முதலியவற்றால் அழகுபடுத்தி அங்கே பொங்கலிட்டுப் பொங்கலை மாடுகளுக்கு ஊட்டும் திருநாள் இது.

" அலகிலா மறைவிளங்கும் அந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளங்கும் மழைவிளங்கும் மனுவிளங்கும்
உலகெலாம் ஒளிவிளங்கும் உழவருழும் உழவாலே"

நன்றி: ப. சிவானந்த சர்மா எழுதிய
"சைவவிரதங்களும் விழாக்களும்."

மாமன்ற வேண்டுகோள்

இந்து மக்கள் ஏராளமானோர் அகதிகளாக வாழும் அவல நிலையில் கொண்டாட்டங்கள் வேண்டாம். தைப்பொங்கல், புத்தாண்டு, தீபாவளி தினங்களை வழிபடு தினங்களாக அனுட்டித்து அல்லலுறும் மக்களுக்கு உதவுங்கள்.

சுவாமி விபுலாநந்தர் – வாழ்வும், பணிகளும், ஆக்கங்களும்

– ஒரு சிறு கண்ணோட்டம்

சுவாமி ஆத்மகனானந்தஜி.
தலைவர், இலங்கை இராமகிருஷ்ணமிஷன்

(21.7.1996 அன்று அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்தில் நடந்த சுவாமி விபுலாநந்தரின் நினைவு நினத்தில் சுவாமிஜி ஆத்மகனானந்தஜி அவர்கள் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவு)

அறிமுகம்: இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைத் தீவின் கிழக்கு மாகாணத்தில் காரைத் தீவு என்னும் இயற்கை வனப்புமிக்க ஒரு சிறிய கிராமத்திலே பிறந்து தமிழ் கூறும் நல்லுலகம் போற்றி வணங்கும் அளவிற்கு மேன்மையோடு வாழ்ந்தவரே அருட்திரு விபுலாநந்த அடிகளாராவார். அவரது பிறப்பால் தமிழுலகம் மட்டுமல்ல, உலகம் முழுமையுமே சிறப்புற்றது எனலாம்.

அடிகளார், ராமகிருஷ்ண சங்கத்தின் பெருமை மிக்க துறவியாவார். ராமகிருஷ்ண சங்கத்தின் கொள்கையான 'ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாய ச (தனி மனித மேம்பாடும், அதனை அடைவதற்கு மார்க்கமாக அமைந்திருக்கும் மானிட சேவையும்') என்பது, அடிகளாரது வாழ்க்கையில் முழுமையான மலர்ச்சியைக் கண்டது எனலாம். பணிவு, தூய்மை, ஆண்மை, அன்பு போன்ற உயர் பண்புகளின் இருப்பிடமாக விளங்கிய அவர், பாமரர் பண்டிதர் எனும் இரு சாராரும் போற்றும் உத்தமராக விளங்கினார். அவரது தணியா இலக்கியத் தாகமும், தமிழ் மொழிப்பற்றும், எந்த விதத்திலும் அவரது சமய, சமூகப் பணிகளுக்கு முரணாகவோ அல்லது இடையூறாகவோ இருந்ததில்லை. முத்தமிழ் வித்தகராக, தமிழினத்தின் மணிவிளக்காகத் திகழ்ந்தாலும், தனது மனித நேயப் பண்புகளால் உலகம் முழுமைக்கும் உரியவராகவும் விளங்குகிறார் என்பதே அடிகளாரின் தனிச்சிறப்பாகும்.

ஆளுமை: சுவாமி விபுலாநந்த அடிகளாரது ஆளுமை பன்முகப்பட்டது. ஒரு தனி மனிதரிடம் இத்தனை குணாதிசயங்கள் ஒருங்கே அமைந்திருப்பது ஒரு அபூர்வ நிகழ்வு என்றே கூறலாம். அறிஞர்கள் அவரை எப்படியெல்லாம் கண்டு ரசித்துப் போற்றியிருக்கிறார்கள் என்பதைக் கீழ்க்காணும் ஒரு சில கட்டுரைத் தலைப்புகளின் வாயிலாக அறியலாம்.

1. சுவாமி விபுலாநந்தரின் ஆளுமையும் பெறுமானங்களும்
2. சுவாமி விபுலாநந்தரும் தனித்தமிழும்
3. சுவாமி விபுலாநந்தரும் சமஸ்கிருதமும்
4. சுவாமி விபுலாநந்தரும் இசைத்தமிழும்
5. சுவாமி விபுலாநந்தரின் கவிதைகள் – ஒரு கண்ணோட்டம்
6. சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள்
7. சுவாமி விபுலாநந்தரின் சமூகப் பணி
8. சுவாமி விபுலாநந்தரின் இலக்கிய நோக்கு
9. விபுலானந்த அடிகளும் சைவ சிந்தாந்தமும்
10. யாழ் நூல் தந்த விபுலாநந்தர்
11. சுவாமி விபுலாநந்தரின் தேச பக்தி
12. விபுலாநந்தத் துறவி

இவை தவிர, அடிகளாரை ஒரு சிறந்த பள்ளி ஆசிரியராகவும், பத்திரிகை ஆசிரியராகவும், சமயசமரச நோக்குடைய பண்பாளராகவும், பன்மொழிப் புலவராகவும், மானிட நேயராகவும், இப்படி மேலும் பல கோணங்களிலும் அவரது ஆளுமையை வெளிப்படுத்தும் கட்டுரைகளைக் காணலாம். அவர் கீழ்த் திசைச் செல்வத்தோடு மேற்றிசைச் செல்வத்தையும் ஒருங்கிணைத்தவர், பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தவர், சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையேயான முரண்பாடுகளை நீக்கியவர், சுருங்கக் கூறின் மனித குலத்தை ஒன்றிணைக்கத் தோன்றியவர்.

ஆக்கங்கள்: சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்களில் யாழ் நூல், மதங்கசூளாமணி, உமாமகேசுவரம், நடராச வடிவம், தில்லைத் திரு நடனம், கலைச் சொல் அகராதியின் ஒரு பகுதி ஆகியனவும், விபுலாநந்த அமுதம், விபுலாநந்தத் தேன், விபுலாநந்த ஆராய்வுகள், விபுலாநந்த கவிமலர், விபுலானந்தர் உள்ளம் என்னும் அவரது கட்டுரைத் தொகுதி நூல்களும், அவரது ஆங்கிலக் கட்டுரைகள் சிலவற்றை உள்ளடக்கிய 'Ancient thoughts for Modern Man' என்னும் ஆங்கில நூலும், கர்மயோகம், ஞானயோகம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்த தீபம், சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள் ஆகிய மொழி பெயர்ப்பு நூல்களும் அடங்கும். இதுவரை புத்தகவடிவில் வெளிவராத கட்டுரைகள் பல இன்றும் உள்ளன.

வாழ்க்கை நெறி

சைவவாழ்க்கை

சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார்

(பல ஆண்டுகளுக்குமுன் " சைவ வாழ்க்கை பற்றி சைவப் பெரியார் தொகுத்த ஆழமான கருத்துக்களை இன்றைய தலைமுறையினரும் அறிய வேண்டிய அவசியத்தை உணர்ந்து இதனை வெளியிடுகிறோம்.)

நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும் போது நம் மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும் போது அது கிடைக்குமாயின், இன்புறுகின்றோம். கள்ளுணவை விரும்புகிறவன், அதைப் பருகும் போது இன்புறுகின்றான். அன்றியும் நாம் விரும்பமாட்டாத ஒன்று நம்மைச் சேராவிட்டாலும் நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோசப்படுகிறான்.

இப்படியின்றி நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும், விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகின்றது. எனக்காயினும், என்னைச் சேர்ந்தவர்க்காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகின்றது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டாகிறது. ஏதாயினும் இடர் வரப்போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகின்றது.

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக்காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம் வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீலமான ஆகாயமும், கரியதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும். அது போலச் சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால், யாவும் உவப்பானவைகளாகவே தோற்றும். நான் விரும்பிய பொருள் கிடையாவிடில் துன்பமில்லை; எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை. என் குழந்தை இறந்து போம் என்று அஞ்சுவதில்லை; என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலுமேயன்றிக் கோபித்தலில்லை.

சைவ சமயத்தின்படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கிறோம். இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் சிவபெருமான்; ஆதலால் அவருக்கு "வைத்தியநாதன்" என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு.

ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்க மாட்டான். அதுபோல, நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு; வைத்திய நாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால் நாம்விரும்பிய பொருள் நமக்குக் கிடையாவிடில், அது நமக்கு ஆகாதென்று உணர்ந்து, அது கிடையாமற் போனதைப்பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்பமாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான்; ஆமணக்கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கிறான்; பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான்; அதுபோலச் சிவபிரானாகிய வைத்தியநாதர் நாம் விரும்பமாட்டாதவற்றை நமக்குச் சேர்த்தலும், கொடிய வேதனைகளை ஆக்குதலும், நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழும்படி வைத்தற்கேயாம். ஆதலால், நம்முயற்சிகளைக் கடந்து, நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும், நாம் வேதனைகளில் அகப்பட்டாலும் அவைகள் நமது நன்மைக்காகக் கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப் பற்றி இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்து போவதும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறியவேண்டியதில்லை. 'யாவும் அவருடைய செயலே; அவர் செய்வதெல்லாம் நன்மையே' என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால், அப்பர் சுவாமிகள் பாடியருளியபடி,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனற்
சங்கவெண் குழை யோர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா வாளாய்க்
கொய்ம் மலர்சே வடியினையே குறுகினோமே."

"கண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முரண் ஏறும்
அகலம் வளாய அரவும்,
திண்ணன் கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை."

என்றும் எப்போதும் ஆநந்தமாய் வாழலாம். துக்கம், கோபம், அச்சம் ஆகிய மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெருமுயற்சி செய்து பொருளைத் தேடி நட்டத்தைத் தீர்த்தலும், எனக்கு யாராவது இடர்செய்ய வரும் போது கோபங்கொள்ளுதலின்றி அவனைத் தடுத்தலும், குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்து போனால் 'பிறந்தவர் இறக்கை திண்ணம்' என்பதைக் கண்டு மனங் கலங்காதிருத்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத் தக்கவைகளாம்.

ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் பல மொழி பெயர்ப்புகளை அடிகளார் செய்துள்ளார். நமது பாரம்பரிய உண்மைகளைப் பிற நாட்டினரோடு பகிர்ந்து கொள்வதில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும், அவ்வாறே பிற நாட்டினரின் கலை, அறிவியல், கலாசார உண்மைகளை நமது மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும் இங்கு காணலாம். அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு, மத, மொழி, இன வேறுபாடுகளை எல்லாவகையிலும் கடந்து செல்ல வேண்டும். இல்லையெனில் மனித சமுதாயம் முன்னேற முடியாது. இக்கருத்தை விபுலாநந்த அடிகளது வாழ்க்கையில் தெளிவாகக் காண்கிறோம்.

தமிழ்ப்பற்று: விபுலாநந்த அடிகள் தமிழோடு, வடமொழி, இலத்தீன், ஆங்கிலம் முதலான மொழிகளையும் நன்கு கற்றவர். இருந்தும், தமிழ் மொழியின் மீது அவருக்கிருந்த பற்று அலாதியானது. அப்பற்று அவருக்கு வெறியை ஏற்படுத்தவில்லை, மாறாக தன்னம்பிக்கையையும், பெருமிதத்தையும், வீரத்தையும் ஊட்டின எனலாம். தனது நண்பர் ஒருவர்க்கெழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிடுகிறார் "..... தமிழ்ப் புலவராகிய நாம், கம்பனுடைய வழித் தோன்றல்களென்பதை அறியவேண்டும். அவனைப் போல நாமும் மன்னன் முன்னிலையில் ஏமாப்போடு நின்று, 'என்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ, உன்னையறிந்தோ தமிழை ஒதினேன்" என்று துணிவாகச் சொல்ல வேண்டும். ஈதல் நமக்குரியதேயன்றி இரத்தலல்ல.. நீங்கள் எந்நாளும் தமிழ்த் தொண்டு புரிய வேண்டும். கூழுணவுதான் கிடைத்தாலும் தமிழ்த்தாயின் அருளெனக் கருதி ஏற்றுக் கொண்டு விரிந்த முறையிலே, தொண்டாற்ற வேண்டும்.." அடிகளாரது தமிழ் மொழிப் பற்று வியக்கத்தக்கது !

முத்தமிழ்ப் புலமை: அடிகளாரது முத்தமிழ்புலமை உலகறிந்த விடயம். 1912 இல் கொழும்பு ஆசிரியப் பயிற்சிச்சாலையில் மாணவராக இருந்த காலத்திலேயே கவிதை புனையத் தொடங்கியவர். கோதண்ட நாயபுரி குமரவேள் நவமணிமாலை, கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளையார், இரட்டைமணிமாலை, சுப்பிரமணியசுவாமி இரட்டைமணிமாலை ஆகிய சிறு பிரபந்தங்கள் அவரால் இக்காலத்தில் இயற்றப்பட்டவை. 1916 இல் லத்தீன் மொழிப் புலவராகிய வெர்ஜில் இயற்றிய ஏநேயகாவியத்தின் இரண்டாம் பரிச்சேதத்தைச் செய்யுள் நடையில் மொழிபெயர்த்து, கதைத் தொடர்பு, நூற்பொருள் என்பவற்றை வசன நடையில் எழுதி 'செந்தமிழ்' என்னும் இதழில் பிரசுரித்தார். கலை, இலக்கியம், சமயம் சம்பந்தமாக அவர் எழுதியுள்ள கட்டுரைகளுக்கு எல்லையேயில்லை. மதங்கசூளாமணி நூலின் வாயிலாக, நாடக இயலில் தனது வல்லமையைக் காட்டுகிறார் அடிகளார். ஷேக்ஸ்பியரது ஆங்கில நாடகங்களுள் பன்னிரண்டைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் உள்ள நாடக லட்சணங்களை, தமிழின் முதல் நூலாகிய தொல்காப்பியம், மற்றும் வடமொழி நூல் தசரூபகம் ஆகியவற்றோடு ஒப்பிட்டு ஆராய்தலே மதங்கசூளாமணியின் உள்ளடக்கம். ஒரு குறிப்பிட்ட காலசாரத்தில் தோன்றிய இலக்கியத்தினை முற்றிலும் வேறுபட்ட காலாசாரத்தில் தோன்றிய இலக்கியத்தோடு ஒப்பிடுவது ஒரு கடினமான காரியமே. இக்காரியத்தைத் திறம்படச் செய்திருக்கும் விபுலானந்த அடிகளின் நாடக இயல் புலமையை அறிஞர் உலகமே போற்றுகின்றது. தமிழ் இயல், நாடகத்தோடு, இசைத்துறையிலும் நமது அடிகளாரது புலமை பாராட்டத்தக்கது. அவர் இயற்றிய உலகப் பிரசித்தி பெற்ற யாழ்நூல் இசைத்தமிழுக்கு அவர் ஆற்றியுள்ள தொண்டின் சின்னமாக என்றென்றும் நிலைத்திருக்கும். இசைத்தமிழ் இலக்கணம் நூல் தமிழில் இல்லை என்னும் குறையை யாழ்நூல் போக்கியுள்ளது.

தமிழிற்கு அடிகளார் ஆற்றியுள்ள அரும்பணிகளுக்காக தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது.

சமூகப் பணி: அடிகளார், இலக்கியப் பணிகளுக்குத் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்துக் கொண்ட போதிலும், அதே அளவிற்கு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார் என்பது ஆச்சரியத்தை அளிக்கும் விடயமாகும். யாழ்ப்பாணத்தில், அவர் தொடங்கிய கல்விப்பணி கிழக்கு மாகாணத்தில் விரிவு பெற்றது. மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்த வித்தியாலம் அவரது நோடிப் பார்வையில் மிகச் சிறப்பாக இயங்கியது. அத்துடன் இணைந்திருந்த மாணவரில்லம் அவரது பூரண ஆசியைப் பெற்றிருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் தொண்டாற்றிய காலத்தில் அவர் பெற்ற ஊதியம் இவ்வித்தியாலத்தின் வளர்ச்சிக்காக அவரால் செலவிடப்பட்டது. அவரது மேற்பார்வையில் இருபதிற்கும் மேற்பட்டபள்ளிகள் அப்பொழுது இயங்கி வந்தன. அவரது அயராத உழைப்பின் காரணத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி நிலை மேம்படுத்தப்பட்டதோடு, சைவ பாரம்பரியமும் காக்கப்பட்டது. அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்திலேயும் அருகிலிருந்த சேரிப் பகுதிக்குச் சென்று அங்குள்ள ஏழைப் பிள்ளைகளுக்குப் பலவிதங்களில் சேவை செய்ததாக அறிகிறோம்.

முடிவுரை: கடலின் ஆழத்தையும், பரப்பையும் முழுமையாக எங்ஙனம் அளக்க இயலாதோ, அவ்வாறே சுவாமி விபுலாநந்தரின் ஆளுமையும் எல்லையற்றது. இங்கு சுருக்கமாக அவரது வாழ்க்கைப் பணிகளைப் பற்றிக் கூறியுள்ளோம். அவர் இப்பூவுலகில் வாழ்ந்த காலம் மிகக் குறுகியதேயானாலும் அவரது புகழ் இவ்வுலகில் என்றென்றும் நிலைத்திருக்கும். அவரது முத்தமிழ்ச் செல்வங்கள் என்றும் அழியாதவை. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது மனித நேயப் பண்புகள் கலங்கரை விளக்காக இவ்வுலகிற்கு என்றும் வழிகாட்டிக் கொண்டிருக்கும்.

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியினைக்கு
வாய்ந்த மலர் எதுவோ
வெள்ளைநிறப் பூவுமில்லை
வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி
உத்தமனார் வேண்டுவது

- சுவாமி விபுலானந்தர்

வாழ்க்கை நெறி

சைவவாழ்க்கை

சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார்

(பல ஆண்டுகளுக்குமுன் " சைவ வாழ்க்கை பற்றி சைவப் பெரியார் தொகுத்த ஆழமான கருத்துக்களை இன்றைய தலைமுறையினரும் அறிய வேண்டிய அவசியத்தை உணர்ந்து இதனை வெளியிடுகிறோம்.)

நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும் போது நம் மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும் போது அது கிடைக்குமாயின், இன்புறுகின்றோம். கள்ளுணவை விரும்புகிறவன், அதைப் பருகும் போது இன்புறுகின்றான். அன்றியும் நாம் விரும்பமாட்டாத ஒன்று நம்மைச் சேராவிட்டாலும் நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோசப்படுகிறான்.

இப்படியின்றி நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும், விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகின்றது. எனக்காயினும், என்னைச் சேர்ந்தவர்க்காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகின்றது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டாகிறது. ஏதாயினும் இடர் வரப்போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகின்றது.

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக்காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம் வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீலமான ஆகாயமும், கரியதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும். அது போலச் சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால், யாவும் உவப்பானவைகளாகவே தோற்றும். நான் விரும்பிய பொருள் கிடையாவிடில் துன்பமில்லை; எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை. என் குழந்தை இறந்து போம் என்று அஞ்சுவதில்லை; என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலுமேயன்றிக் கோபித்தலில்லை.

சைவ சமயத்தின்படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கிறோம். இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் சிவபெருமான்; ஆதலால் அவருக்கு "வைத்தியநாதன்" என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு.

ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்க மாட்டான். அதுபோல, நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு; வைத்திய நாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால் நாம்விரும்பிய பொருள் நமக்குக் கிடையாவிடில், அது நமக்கு ஆகாதென்று உணர்ந்து, அது கிடையாமற் போனதைப்பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்பமாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான்; ஆமணக்கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கிறான்; பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான்; அதுபோலச் சிவபிரானாகிய வைத்தியநாதர் நாம் விரும்பமாட்டாதவற்றை நமக்குச் சேர்த்தலும், கொடிய வேதனைகளை ஆக்குதலும், நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழும்படி வைத்தற்கேயாம். ஆதலால், நம்முயற்சிகளைக் கடந்து, நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும், நாம் வேதனைகளில் அகப்பட்டாலும் அவைகள் நமது நன்மைக்காகக் கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப் பற்றி இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்து போவதும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறியவேண்டியதில்லை. 'யாவும் அவருடைய செயலே; அவர் செய்வதெல்லாம் நன்மையே' என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால், அப்பர் சுவாமிகள் பாடியருளியபடி,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனற்
சங்கவெண் குழை யோர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா வாளாய்க்
கொய்ம் மலர்சே வடியினையே குறுகினோமே."

"கண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முரண் ஏறும்
அகலம் வளாய அரவும்,
திண்ணன் கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை."

என்றும் எப்போதும் ஆநந்தமாய் வாழலாம். துக்கம், கோபம், அச்சம் ஆகிய மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெருமுயற்சி செய்து பொருளைத் தேடி நட்டத்தைத் தீர்த்தலும், எனக்கு யாராவது இடர்செய்ய வரும் போது கோபங்கொள்ளுதலின்றி அவனைத் தடுத்தலும், குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்து போனால் 'பிறந்தவர் இறக்கை திண்ணம்' என்பதைக் கண்டு மனங் கலங்காதிருத்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத் தக்கவைகளாம்.

சைவ சித்தாந்தம் பரப்பிய முன்னோடியான சேர் முத்துக் குமாரசுவாமி அவர்கள் (1834-1879)

சி. குமாரசாமி. எம்.ஏ.
செயலாளர், தேவாரப் பண்ணிசைமன்றம்
மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்

சைவசித்தாந்தம் என்பது சிவனை அடையும் அறிவின் முடிபு எனப் பொருள்படும். முப்பொருள்களான பதி (கடவுள்), பசு (ஆன்மா), பாசம்(தடை), உண்மையானவை; என்றும் உள்ளவை. பாசம் ஆன்மாவைப் பற்றுமே ஒழிய பதியைப் பற்றாது, பதி தாமே அறியும் தன்மையுள்ளது; பசு பிறரால் அறிவித்தால் அறியும் தன்மையானது; பாசமோ அறிவித்தாலும் அறிய மாட்டாதது.

திருமூலர் தமது திருமந்திரத்திலும் சைவ சமய நாயன்மார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி போன்றோர் தமது தேவாரப் பதிகங்களிலும், மாணிக்க வாசகர் தமது திருவாசகப் பாடல்களிலும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை வாரிவழங்கியுள்ளனர். திருஞானசம்பந்தர் தமது மூன்றாந் திருமுறையின் மாலை மாற்றுப் பதிகத்தில் சித்தாந்தத்தினை தெளிவுறப் பாடியுள்ளார். "யாமாமா நீயாமா மா" என்று தொடங்கும் தேவாரம் "கௌசிகப் பண்ணில்" அமைந்துள்ளது. இதன் பொருளானது, சிற்றுயிராகிய நாம் நீ (கடவுள்) என்று கூறுதல் பொருந்துமா ? நீயே ! கடவுள் என்றால் முற்றிலும் பொருந்தும்.

மெய்கண்டதேவர் 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் 'சிவஞானபோதம்' எனும் நூலை இயற்றியுள்ளார். 12 சூத்திரங்களைக் கொண்ட நூலில், பிரமாணவியல், இலக்கணவியல், சாதனவியல், பயனியல் என்று நான்கு பிரிவுகள் உண்டு. பிரமாணவியலில் பதி, பசு, பாசம் ஆகியன நித்தியமானவை, உண்மையானவை என்றும் இலக்கணவியலில் இம்மூன்றின் இலக்கணங்களும், சாதனவியலில் உயிர்களே முக்தியின்பம் பெறும் தகுதியுடையன என்றும் குருவடிவாக இறைவன் எழுந்தருளி பக்குவ ஆன்மாக்களுக்கு அருள் செய்வான் என்றும், பயனியலில் சிவப்பேறு, பாச நீக்கம் போன்றனவும் கூறியுள்ளார் மெய்கண்டார்.

மெய்கண்டாருக்கு முன்னர் "திருவுந்தியர்", "திருக்களிற்றுப் படியார்" போன்ற நூல்கள் தோன்றின. இவரின் மாணாக்கரான அருணந்தி சிவாசாரியார் சிவஞான போதத்திற்கு விளக்க நூலாக "சிவஞான சித்தியார்" என்ற விருத்தப் பாக்களாலான நூலில் "பரபக்கம்", "சுபக்கம்" என்று பிரித்து எழுதியுள்ளார். பரபக்கத்தில் பிற சமயதத்துவக் கொள்கைகளைத் தத்துவரீதியாகக் கண்டித்தும், சுபக்கத்தில் சித்தாந்தக் கொள்கைகளை வலியுறுத்தியும் பாடியுள்ளமை , குறிப்பிடத்தக்கது. சைவ அறிஞர்கள் இந்த நூலினைப் பாராட்டியுள்ளார்கள். சித்தாந்தத்தினை அறிவதற்குச் சித்தியாரில் ஒரு விருத்தப் பாதி போதும் !

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய படிகள் அல்லது துறைகள் உண்டு என்றும், ஒழுக்கத்தினைக் கடைப்பிடித்தும், ஞான நூல்களைக் கற்றும், கற்பித்தும், தான தருமங்களை இயற்றியும் நாம் சிவனை அடைவதற்கு முயற்சிக்கலாம் எனச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

இத்தகைய சைவ சித்தாந்தத்தினை முதன் முதலில் ஆங்கிலேயருக்கு விளக்கியவர், இலங்கையின் தவப் புதல்வரான முத்துக் குமாரசுவாமி ஆவர். 1857 ஆம் ஆண்டு மாட்சிமை பொருந்திய ஆசியச்சங்கத்தின் (Royal Asiatic Society) இலங்கைக் கிளையில் "சைவசித்தாந்தச் சுருக்கம்" எனும் ஒரு கட்டுரையினை வாசித்து விளக்கியுள்ளார்.

இக்கட்டுரை அச்சங்கத்தினால் பிரசுரிக்கப் பட்டுள்ளது. இளம் வழக்கறிஞரான முத்துக் குமாரசுவாமி தமது 24 வது வயதில் இக் கட்டுரையை எழுதி அச்சபையில் விளக்கியுள்ளார். 1860 ஆம் ஆண்டு " இந்து சமயம்" என்ற கட்டுரை அதே சபையில் வாசிக்கப்பட்டு சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

தாம் ஒரு இங்கிலாந்து வழக்கறிஞர் (Barrister) ஆவதற்கு இங்கிலாந்து சென்ற போதும் தமது சமயத்திலும் தத்துவத்திலும் அவருக்கிருந்த ஈடுபாடு குறையவில்லை எனலாம். அரிச்சந்திரனின் கதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதனை மாட்சிமை தங்கிய விக்ரோறியா மகாராணியாருக்கு அர்ப்பணித்தார். பின்னர் அக்கதையை ஆங்கிலத்தில் நாடகமாக்கி ஆங்கிலேயே நடிக நடிகைகளுடன் தாம் அரிச்சந்திரனாக நடித்து அரச சபையில் மேடையேற்றினார். விக்டோரியா மகாராணியாரின் பாராட்டு முத்துவுக்குக் கிடைத்தது. அரசியாரால் "சேர்" எனும் பட்டம் முத்துக் குமாரசுவாமிக்குச் சூட்டப்பட்டது. ஆங்கிலமொழிப் பேச்சுத்திறனுக்கும் நடிப்புக் கலைக்குமாக இக் கௌரவம் கொடுக்கப்பட்டதாக இலண்டனில் வெளிவந்த (Illustrated London News) பத்திரிகை மூலம் அறிகிறோம். இலங்கையில்

மட்டுமல்லாமல் ஆசியாவிலே முதல் "சேர்" பட்டம் பெற்றவர். என்ற பெருமைக்குரியவர் முத்துக்குமார சுவாமி !

'அரிச்சந்திரன்' நாடகமாக்கப்பட்டுப் பிரசுரிக்கப் பட்டபோது அதன் அநுபந்தமாக "சைவசித்தாந்தச் சுருக்கம்" என்ற கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளது. இதனைப் பலமேனாட்டவர்களும் வாசித்து எமது தத்துவத்தினை அறிய நேர்ந்தது. கலாநிதி ஜீ. யூ. போப் எனும் அறிஞர் இந்தியாவுக்குச் சென்று தமிழ் படித்து "திருவாசகத்தினை" ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் என்பது யாவரும் அறிந்தது. அந்நூலில் "சைவ சித்தாந்தம்" பற்றியும் போப் ஆங்கிலத்தில் கூறியுள்ளார். எமது தத்துவம் பற்றி அவர் குறிப்பிடுகையில், 'தென்னிந்தியத் தமிழர்களின் அறிவின் முதிர்ச்சியே' சைவசித்தாந்தம்" எனக் கூறியுள்ளார்.

சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள் இலண்டனில் உள்ள கலைக் கூடங்களில் (Arts Councils) தொடர்ச்சியாகச் 'சைவ சித்தாந்தம்' பற்றியும் "இந்தியத் தத்துவம்" பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றிய போது அங்குள்ள அரசியல் அறிஞர்களும் கல்விமான்களும் அவரின் உரையினைச் செவிமடுப்பதற்குச் சென்றார்கள். இங்கிலாந்தின் பிரதமர்களான பார்மஸ்ரன் பிரபு (Lord palmerston) பெஞ்சமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli) கவிஞர் அல்பிரட் ரெனிசன் (Alfred Tennyson) கவிஞர் மத்யூ ஆர்னொல்ட் (Mathew Arnold) ஆகியோர் உட்படப் பல பிரமுகர்களும் சென்று கேட்டார்கள்.

சேர் முத்துவின் ஆங்கிலச் சொல்லாட்சியினை மெச்சி அவர்கள் அவரை "மிகச் சிறந்த நாவன்மை" படைத்தவர், " The Silver tongued orator of the East" என்று அழைத்தனர் என அறிகின்றோம்.

சுவாமி விவேகாநந்தர் 1893 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வேதாந்தக் கருத்துக்களைப் பரப்பினார். அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே சேர் முத்து எமது சமயத்தத்துவத்தினைப் பரப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதன்றோ!

பின்னர் ஜே. எம். நல்லசுவாமிப் பிள்ளை, சோமசுந்தரம் பிள்ளை ஆகியோர் 'சைவ சித்தாந்தத் தீபிகை" என்ற நூலில் சித்தாந்தம் பற்றி ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். மேனாட்டினர் எமது சிறந்த தத்துவத்தினை அறிய வைப்பதற்கு ஆங்கிலமொழிக் கட்டுரைகள் மிகவும் அவசியமாகின்றன.

சேர் முத்துக் குமாரசுவாமி இலங்கைச் சட்ட நிரூபணசபையில் (Legislative Council) தமிழ் மக்களின் பிரதி நிதியாகப் பதவி வகித்து 17 ஆண்டுகள் சேவை புரிந்தவர். இவரின் தந்தையாரான குமாரசுவாமி முதலியாரே முதலாவது தமிழ்ப் பிரதிநியாக இருந்தவர். சேர் முத்துக்குமாரசுவாமியின் அருமை மைந்தனே கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி ஆவர் !!

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" – குறள்.

மார்கழிப் பிள்ளையாரும், மாக்கோலமும், வாரக் கோலங்களும்

மார்கழி மாதம் முழுவதுமே மங்கையர்க்குரிய மாதமே, திருவெம்பாவையையொட்டிய மார்கழி நீராடல் பிரசித்தமானது. அதைவிட, மார்கழிமாத மாக்கோலம் இன்னொரு வகையில் விசேஷமானது. மார்கழி மாதம் முழுவதும் வீட்டு முற்றத்தில் மாக்கோலமிட்டு, மத்தியிலே பசுஞ்சாணத்தினால் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடும் வழக்கம் நீண்டகாலமாக நிலவிவருகிறது.

பெண்கள் அதிகாலையில் நீராடிப் பெருக்கித் தூய்மை துலங்கும் முற்றத்தின் மையத்தில் சாணத்தினால் தரையை மெழுகி, ஏனைய இடங்களுக்குச் சாணித் தண்ணீர் தெளித்து அரிசிமாவினால் அழகிய கோலத்தினை இடுவார்கள். அக் கோலத்தின் மத்தியில் சாணத்தினால் சிறு பிள்ளையார் பிடித்து வைத்துச் சிரசிலே ஒரு பூவும் வைத்து விடுவார்கள். தமிழ் நாட்டில் இதற்காகப் பூசணிப்பூவையே பயன்படுத்துவார்கள்.

ஒவ்வொரு நாளும் விதவிதமான கோலங்களைப் போட்டி போட்டுக் கொண்டு போடுவார்கள். இக்கோலங்களில் கலையழகு மின்னும். சிற்றெறும்பு முதலிய ஜீவராசிகளுக்கு உணவாக இக்கோலமா பயன்படுகிறது. இன்று சிலர் கண்ணாம்புப்பொடி முதலியவற்றைக் கொண்டு கோலம் போடுகின்றனர். இது தவறு. கோலம் போடுவதன் நோக்கங்களில் ஒன்று எறும்பு முதலியவற்றிற்கு உணவாக வேண்டுமென்பதே.

பெண்களிடையே நமது கலாசாரப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் வளர்ந்து வருவதுடன், அதிகாலையில் பெண்களுக்கு நல்ல உடற்பயிற்சியையும் இக்கோலக் கலை தருகிறது.

வீட்டிலிருந்து புறப்படுவோரும் வீட்டிற்கு வந்து வாசலில் நிற்போரும் மங்கலகரமான இவ்வழகிய கோலங்களைக் கண்டு மனமகிழ்வும் மலர்ச்சியும் பெறுவதுடன் விநாயகப் பெருமானை முதலில் கண்டு வணங்கிச் செல்ல வாய்ப்பளிக்கிறது.

மார்கழிமாதம் முடிந்து தைப்பொங்கல் நாளில் தேர்க் கோலம் இட்டு அதில் பிள்ளையார் பிடித்துவைத்து அன்று மாலை மார்கழிப் பிள்ளையார் முழுவதையும் சேர்த்து ஒரு சிறு தேர் செய்து அதில் ஏற்றி ஆற்றங்கரைக்கு இழுத்துச் சென்று ஆற்றிலே போட்டுவிடுவது அக்கால வழக்கம். இன்று இவ்விதம் செய்தவதற்கான வாய்ப்புகள் இல்லாதபடியால் நீர்நிலைகளில் (குளங்கள்) கொண்டு சென்று போட்டு விடுவார்கள்.

சில இல்லங்களில் மார்கழி மாதத்தில் மட்டுமல்லாமல் தினமும் வீட்டு முற்றத்தில் விதம்விதமாகக் கோலங்களை இடுகின்றனர். பிள்ளையார் வைப்பது மார்கழி மாதத்தில் மட்டுமே இதுவும் வரவேற்கக் கூடியதே. நம்மவர்கள் யாவரும் இக்கலையை நன்கு பயின்று தொடர்ந்து இவ் வழக்கத்தை மேற்கொள்வது நன்று.

சாணி பெறுவது, மெழுகுவது போன்ற சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய இடங்களில் சீமெந்தினால் சிறிய மேடை போன்ற அமைப்பை உருவாக்கித் தினமும் அதனைக் கழுவிக் கோலங்களைப் போடுவதும் உண்டு.

நன்றி: ப. சிவானந்தசர்மாவின் சைவ விரதங்களும் விழாக்களும்.

சைவத் திருமுறைகள் வகுத்துள்ள வாழ்க்கை நெறி

ஆ. குணநாயகம்.
ஈழத்துத்திருநெறித் தமிழ் மன்றத் தலைவர்,
தலைவர், மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை

தோற்றுவாய்:- திருவந்த தொல்லைப் புவனம் எனக் கந்தபுராணம் போற்றும் இந்த நல்ல உலகத்திலே கிடைத்தற்கரிய இம் மானுடப் பிறவி திருவருளாற் கிடைக்கப்பெற்றுப் பிறந்துள்ளோம். இவ்வாறு அருமையாகக் கிடைத்த பிறவியின் பயனைப் பெறுதற்காக அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை எமது பெருமக்கள் எமக்கு வகுத்துத் தந்துள்ளார்கள். இவ்வுறுதிப் பொருள்கள் நான்கிற்கும் வழிகாட்டிகளாக அமைகின்றன எமது சைவத் திருமுறைகள். இவை நல்ல அறநெறியாகவும், பொன்னும் மெய்ப் பொருளுமாகிய பொருள் நெறியாகவும், இன்பமே எந்நாளும் துன்பமில்லையாகிய இன்பநெறியாகவும், ஈற்றிலே இவை மூன்றையும் கைபோக விட்ட வீட்டு நெறியாகவும் அமைகின்றன.

எமது மனித நிலைமையைச் சம்பந்தப் பெருமான் கருக்கமாக அருளிப் போந்தார். "போம் வழி வந்து, இழிவு ஏற்றமானார்". (1-8-3). அதாவது பிறவி நீங்கி, உயர்ந்து போகக் கூடிய வழியில் வந்து மனிதராகப் பிறந்து, தீயன செய்து பலர் இழிவு அடைகின்றனர். சிலரே நல்லன செய்து உத்தமராய் உயர்வெய்துகின்றனர். இச் சிலர், பலராகக் கூடிய நெறியைக் காட்டி நிற்பனவே சைவத் திருமுறைகள்.

இறையிலக்கணம்: மனிதனும் தெய்வமாகலாம் என்று சாதாரணமாகச் சொல்லிக் கொள்வார்கள். உண்மையில் மனிதன் தெய்வமாக வேண்டுமென்பதே குறிக்கோளாக அமைதற்பாலது. மனிதன் தனது வாழ்க்கையில் உயர்ந்த தெய்விகப் பண்புகளைக் கொண்டொழுகுதல் வேண்டுமென்பதே இதன்தாற்பரியம். உலக முதல்வராகிய இறைவனது இலக்கணத்தை இயன்றவரையில் அறிந்து அவர்பால் அன்பு செய்து, அவ்விறைவனை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு, இவ் விலக்கை அடைவதற்காகப் பின்பற்றும் நன்னெறியே வாழ்க்கையில் உயர்ந்த பண்பாகக் கொண்டுள்ளன. சைவத் திருமுறைகள் இப்பண்பினை உரிய முறையில் கடைப்பிடித்தற்கு முதலில் இறையிலக்கணம் யாது என்பதனை இயன்றவரை நோக்கிக் காண்பதே உசிதம்.

உலகில் தோன்றிய எவ்வுயிர்க்கும் இறைவன் தாயும் தந்தையுமாகி அமைகின்றான் என்பது மேலும் மேலும் ஆணித்தரமாக வற்புறுத்தப் பெற்றுள்ளது.

"தாய்களாயினார் பல்லுயிர்க்கும்" (2-102-7)
"தோன்றிய எவ்வுயிர்க்கும் துணையாய் நின்றதாயான்" (6-50-4
"தாயானவன் உயிர்கட்கு" (1-11-6)
"தாயவன் உலகுக்கு" (1-113-2)
"தாயானே, தந்தையுமாகிய தன்மைகள் ஆயானே" (2-15-4)
"பல்லுயிர்க்கும் தந்தையாகி" (6-42-6)

எல்லா உயிர்கட்கும் இறைவன் தாயும் தந்தையுமாகும் நிலையில் மனிதர் யாவரும் ஒரு வயிற்றுப்பிள்ளைகள். அப்படியாயின் மனிதர்களுக்கிடையே மாறுபாட்டிற்கு இடம் ஏது? சகோதரத்துவமே மிளிர்தல் வேண்டும்.

தாயும் தந்தையாகியும் உயிர்க்குயிராகியும் உள்ள இறைவனின் திருவருட் செல்வம் யாவர்க்கும் தாராளமாகவும் சமமாகவும் கிடைப்பதாக உள்ளது. ஏனென்றால் அவன் "ஏரி நிறைந்த செல்வன்" (6-23-5). நிறைந்த ஏரி ஊர் நடுவண் இருக்கும்போது யாவர்க்குமே பயன்படும். நாம் எமது வாழ்க்கையிலே அமைத்துக் கொள்ளக் கூடிய ஒரு பண்பும் உண்டு என்பது குறிப்பாகக் காணக் கிடக்கின்றது. எமது பணியோ, சிரமமோ, பொருளோ மற்றையோர்க்கும் ஒரு அளவாவதல் செறியக் கூடிய வகையில் எமது வாழ்க்கையின் போக்கு அமையவேண்டும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" (5-19-9) என்பது அப்பர் திருவாக்கு.

உலகத்து உயிரும் அவன்தான், அவ்வுயிரின் வாட்டத்தைத் தீர்க்கும் மழையும் அவன்தான்.

"வான் பயிரை, அப்பயிரின் வாட்டம் தீர்க்கும் துளியான்" (6-66-9) வான் பயிரின் வாட்டத்தையே இறைவன். தீர்த்தருளுகிறான் என்றால், ஒரு மானுட உயிரின் வாட்டத்தை நாம் எவ்வளவு விரைவில் எம்மால் இயன்ற மட்டில் தீர்த்தல் வேண்டும் என்னும் குறிப்பை இங்கு காண்க.

எமக்குத் தோன்றாத் துணையாயிருப்பவன் இறைவன் எப்பொழுதுமே "தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடியோர்களுக்கே (4-94-1) தோன்றாது நிற்கின்றானாயினும் அவன் எங்கும் உள்ளான் என்பதனை அகக் கண்ணால் நாம் காணுதல் வேண்டும். ஆகையினாலேதான் "கழலடியே கைதொழுது காணின் அல்லால், கண்ணிலேன்" (6-99-1) என்று ஒதியருளினார் அப்பரடிகள். "கங்கையாடிலென், காவிரியாடிலென்... எங்கும் ஈசன் எனாதவர்க்கில்லையே"(5-99-2) எத்தகையத் தீர்த்தங்களை ஆடினாலும், எங்கும் ஈசன் இருக்கின்றான் என்னும் உணர்வு இல்லாதவர்க்கு, அத்தீர்த்தங்களாற் பயன் யாதும் இல்லையாகும்.

சிவபரம்பொருளாகிய எமது இறைவர்க்கு "நீதி" என்னும் வேறொரு பெயரும் உண்டு. நீதி மயமானவன் இறைவன். "நீதி, நின்னையல்லால் நெறி யாதும் நினைந்தறியேன்" (3-55-6) என்று அருளினார் சம்பந்தர் பெருமான். அவனது உருவம் இன்னது, அவனது நிறம் இன்னது என்று அறிதல் முடியாது... ஆனால் நீதி பலவும் தனது உருவாகத் திரண்டுள்ளவர் எனச் சொல்லுதல் சாலும்" இன்ன உரு, இன்ன நிறம் என்று அறிவதேல் அரிது, நீதி பலவும் தன்ன உருவு என மிகுத்த தவன்" (3-71-4) பங்கயத்து அயனும் மால் அறியா நீதியே என்று விளிக்கின்றார் மாணிக்கவாச க கவாமிகள்.

நீதி பலவும் என்று கூறியதன் தாற்பரியம் யாது ? இதற்கு விடை கந்தபுராணக் காப்புச் செய்யுட்களின் கடைசிச் செய்யுளிற் காணலாம்.

"வான்முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க, மன்னன்
கோன்முறையரச செய்க, குறைவிலாதுயிர்கள் வாழ்க,

நான்மறை யறங்களோங்க, நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

வான்முகில் வழாது பெய்தல், மலிவளம் சுரத்தல், குறைவிலாது உயிர்கள் வாழ்தல் முதலியன எல்லாம் தமிழ் உலகத்தில் மாத்திரமல்ல, சைவ உலகத்தில் மாத்திரமல்ல, உலகம் முழுவதிலும் வேறுபாடின்றி ஒரு படித்தாக நிலவுதல் வேண்டும் என்பதே சைவ நீதியின் பலதிறப்பட்ட சால்பு. இப் பாடலின் ஈற்றடியில் வரும் 'உலகமெல்லாம்" என்னும் தொடர் எல்லா அடிகளுக்கும் பொருந்துகிறது என்பதே சைவ நீதி.

மேலும், நீதி என்பது உயிரினம் யாவற்றிற்கும் சமமாக வழங்கப்படவேண்டியதொன்று. இதனை நாம் மனு நீதி கண்ட சோழனுடைய சரித்திரத்திலே பார்க்கின்றோம். மனிதனுக்கு வழங்கப்படும் ஒரே நீதி மாட்டுக்கும் வழங்கப்பட்டது. இத்தகைய நீதியின் மேன்மை நோக்கி அச் சரித்திரம் 12 ம் திருமுறையாகிய பெரியபுராணத்தின் ஆரம்பத்திலேயே கூறப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன? எமது வாழ்க்கையில் இம்மியளவும் நீதியினின்றும் தவறுதலாகாது என்பதேயாகும்.

"சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல், அமைந்தொருகால்
கோடாமை சான்றோர்க்கணி"

குற்றம் புரிந்தாரை ஒறுத்தலும் நீதியின் பாற்படும். இதற்கமைய, கொடுமை இழைத்து வந்த முப்புர அசுரர்களையும் இறைவன் அழித்தார்.

இறைவனுக்குரிய எண்ணற்ற நாமங்களுள் "கரியான்" என்பதும் ஒன்று (6–1–1). கரி என்பது சாட்சி. தகாத செயலை ஒருவர் செய்ய முற்படும்போது யாரும் அக்கம் பக்கங்களில் நின்று பார்த்துக்கொண்டிருக்கிறார்களா என்பதனையே முதலிற் பரிசோதிப்பர் அப்படி யாரும் அண்மையில் நிற்பதைக் கண்ணுற்றால் கருதிய செயலை செய்யவே மாட்டார். எம் பெருமானாகிய இறைவன் எமது உள்ளத்தில் எப்பொழுதும் சாட்சியாக இருக்கின்றார்.

அமுதத்தைப் பெறுதற்காகக் கடலைத் தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து கடைந்தபோது முதலில் நஞ்சு புறப்பட்டது. இந்த நஞ்சைத் தானே உண்டு தேவர்களுக்கு அமுதத்தை வழங்கியருளினான் இறைவன். "ஆலம் உண்டு அமுதம் அமரர்க்கு அருள் அண்ணல்" (2–9–9) இதனால் தியாகராசன் ஆகின்றார் அவர். தியாகத்தின் சின்னமாக நீலகண்டம் திகழ்கின்றது. எமது வாழ்க்கையிலும் தியாக சிந்தையை ஓரளவாகுதல் கடைப்பிடித்தல் வேண்டும்.

பரம் பொருளின் பூரணத்துவத்தை உபநிடதம் இயம்புகின்றது.

"ஓம் பூர்ணமத பூர்ண மிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமா தாய
பூர்ணமேவா வதிஸ்யதே"

தோன்றாதிருக்கும் அப் பரம்பொருள் பூரணமாகவே இருக்கின்றது. பிரபஞ்சமாகத் தோன்றிய இப் பரம்பொருளும் பூரணமாகவே இருக்கின்றது. பூரணத்திலிருந்து பூரணம் தோன்றியுள்ளது. எஞ்சியுள்ளதும் பூரணமாகவே இருக்கின்றது. அதன் பூரணத்துவம் என்றுமே குறைவுபடுவதில்லை.

இவ்வுயரிய கருத்தை எமது நாயன்மார்கள் இரத்தினச் சுருக்கமாக இரண்டே யிரண்டு வார்த்தைகளிற் சொல்லிப் போந்தனர். "குறைவிலா நிறைவே" (2–10–4); "குறைவிலா நிறைவே, குணக் குன்றே"(7–70–6); "குறைவிலா நிறைவே, கோதிலா அமுதே" (திருவாசகம் = கோயிற்றிருப் பதிகம் – 5).

(அடுத்த இதழில் தொடரும்)

அமாவாசை

'அமா' என்பது ஒரிடத்திற் பொருந்தியது, குவிந்தது அடுத்தது என்று பொருள்படுவது. ஒரு இராசியிற் சூரியன், சந்திரன் இருவரும் சேர்ந்து உறவாகும் வாசியான நாள் அமாவாசி எனப்படும். திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தை – பாகையைக் குறிப்பிடுவதாகும். சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேரே வரும் போது அமாவாசைத் திதி உண்டாகும்.

சூரியன் ஞானகாரகன், ஆத்மகாரகன் என்பர். ஆண்மை, ஆற்றல், பராக்கிரமம், வீரம், தீரம், தவம் என்பன சூரியானாலேயே தோன்றுகின்றன என்பர். சந்திரன் மனதிற்கு அதிபதி. மகிழ்ச்சி, தெளிந்த அறிவு, உற்சாகம், இன்பம் முதலியவை சந்திரன் உதவியாற் பெறத்தக்கனவாம். இத்தகைய ஆற்றல் மிக்க சூரிய சந்திரர் இருவரும் ஒரு இராசியில் சஞ்சரிக்கும் தினம் புனிதமான நாள்; உயிர்களின் சுகபோகமாகிய மாறுதலை உணர்த்தும் நாள். மேலும், சகல தேவர்களும் அமாவாசையின் அதிபர்கள், அன்று நோன்பு நோற்றல், விரதங் காத்தல் சிறந்ததும் இறைவனுக்கு மகிழ்ச்சி அளிப்பதும் பெருமை தருவதுமான நற்செயலாகும்.

இத்தகைய அமாவாசையிற் புண்ணிய தீர்த்தத்திலே படிந்து பிதிர் தருப்பணம் செய்து அதிதிகளோடும் சுற்றத்தாரோடும் உணவு உட்கொண்டு விரத நியமயத்துடன் இருப்பது தீர்த்த சிரார்த்தம் எனவும் காமிய சிரார்த்தம் எனவும் பெயர் பெறும்.

ஒருவர் இறக்கும் போது தூலசரீரம் (உருவுடம்பு) அழிந்து போகிறது. சூக்குமசரீரம் (அருவுடம்பு) அழிவதில்லை. சூக்குமசரீரத்தோடு செல்லும் உயிர், பூமியிற் புரிந்த வினைகளுக்கு ஏற்ப, இன்பதுன்பங்களைச் சுவர்க்க நரகத்தில் அனுபவிக்கும். இவ்விதம் அனுபவித்துத் தொலையாது எஞ்சி நின்ற பிராரத்துவ வினைகளினாலேயே உயிர் மீண்டும் பூமியில் வந்து பிறக்கின்றது.

அபுத்தி பூர்வமாகச் செய்த வினைகள் அந்தியேட்டி, தகனக் கிரியைகளால் மாறும்; புத்தி பூர்வமாகச் செய்தன அனுபவித்தேயாக வேண்டும். பிதிர் செய்வினை தேய்தற் பொருட்டுப் புதல்வர் செய்வது பிதிர் சிரார்த்தம். பிதிர் வழிபாட்டை ஏற்று இறைவன் பிதிரர் எப் பிறப்பிற் புகுந்தனரோ அப்பிறவியிற் செலுத்திப் பயனடைவித்தற் பொருட்டு பிதிர் தேவரைப் படைத்தனர். பிதிர் தேவர்களைப் பூசிக்க அவர்கள் அவ்வழிபாட்டை ஏற்று இறந்தவர்களுக்கு உபகரிப்பர்.

அமாவாசைகளிலே ஆடி அமாவாசை விசேடமானது. தை அமாவாசையும் சிறந்தது என்பர்.

நன்றி: இந்துக் கலைக்களஞ்சியம்
ஆசிரியர்: பேராசிரியர் பொ. பூலோகசிங்கம்

சமய வாழ்வும் ஒழுக்கநெறியும்

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
துணைத்தலைவர்-அகில இலங்கை இந்துமாமன்றம்

சமயம் என்பது தானும் வாழ்ந்து மற்றவனையும் வாழ வைக்கும் தூய நெறியாகும். சமய நெறி இல்லாவிட்டால் சமுதாயம் கட்டுப்பாட்டை இழந்துவிடும். சமுதாயத்தில் ஊழல் தோன்றாது காப்பாற்றும் நெறியே சமயநெறி. எனவே திருக் கோயில்களும், சமயநிறுவனங்களும் ஊருக்கு உபதேசம் செய்யும் பொது நீதிமன்றங்களாக விளங்க வேண்டும். சமுதாயத்தில் அன்பில்லாத எவரும் சமயநெறி நிற்பவர்கள் என்று சொல்வதற்குத் தகுதியற்றவர்களாவர். அன்பின் இணைப்பால் சமுதாயத்தை அணைத்துக் கொள்ள வேண்டும். பக்தி உணர்வு என்பது இறைவனை மாத்திரம் நேசிப்பதல்ல. மன்னுயிர்களை நேசிக்கும் கருணை உள்ளந்தான் இறைவனால் விரும்பி ஏற்கப்படும் பக்தி உணர்வாகும்.

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கென்றே அவதாரம் எடுத்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் பெருமான் சைவம் சார்ந்த ஒழுக்கநெறியில் உறுதியாக நின்றார். இவருடைய மகிமையான வாழ்வுக்கு, இவர் வாழ்ந்து காட்டிய ஒழுக்க நெறி முதற்காரணமாகியது. சமய குரவர்கள், நாயன்மார்கள், மற்றும் சைவச் சான்றோர்கள் அனைவரும் இன்று எமது ஏட்டிலும் இதயத்திலும் இடம் பெறுவதற்குக் காரணம் அவர்கள் மேற் கொண்ட நல்லொழுக்க நெறியே ஆகும்.

ஒழுக்கம் என்பது ஒரு மனிதனின் எல்லா நடவடிக்கைகளிலும் கலந்திருக்க வேண்டிய ஒன்றாகும். இது உள்ளத்தின் ஆழத்தில் பதியப்பட்டிருக்க வேண்டிய ஒன்றாகும். ஏனென்றால் ஒழுக்கம் என்பது உள்ளத்தைப் பற்றியதாகும். "எப்படி நீ ஒழுக்கத்தை உருவாக்குகிறாயோ அப்படியே உன் வாழ்வு அமைந்து விடுகிறது" என்று கூறுகிறார் ஒரு அறிஞர். ஒழுக்கத்தை வாழ்விலே உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒருவன் தன் வாழ்நாளில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய சிறந்த சொத்து நல்லொழுக்கமே. "இவர் ஒழுக்கம் உடையவர் என்ற நற்பெயரே" இறுதியில் உறுதி பெற்று நிற்கும். இது ஒன்றையே எமது பிற் சந்ததிக்கு விட்டுச் செல்கிறோம். மேதாவிலாசத்திலும் பார்க்க மிக உயர்ந்தது ஒழுக்கமே.

ஒழுக்கத்துக்கு அடிப்படையாக அமைய வேண்டிய பண்புகள் உண்மைபேசல், பஞ்சமாபாதகத்தை நீக்கல், பெரியோரை மதித்தல், குருவை வணங்குதல், நன்றி மறவாமை, பிறன்மனை விழையாமை, அடுத்தவனுக்குத் தீங்கு விளைவியாமை, பொறாமையில்லாமை, தெய்வபக்தி ஆகியவை ஆகும். பெறவேண்டிய அறிவுகள் அனைத்திலும் உயர்ந்தது ஒழுக்கத் தூய்மையே என்று கூறுகிறார் காந்தியடிகள். இது அன்றாட வாழ்வில் பேணிக்காக்கப்பட வேண்டியதொன்றாகும். "நான் நல்லொழுக்கத்துடன் வாழ்கிறேன்" என்று அமைதி அடையாமல் மேலும் மேலும் நற்செயல்களில் ஈடுபட்டு ஒழுக்கத்தைப் பேணிக் கொள்ள வேண்டும்.

இராவணன் சிறந்த சிவபக்தன். பெருமைக்குரிய இசை மேதை. வீராதி வீரன். இராவணே ஸ்வரன் என்று எடுத்துப் பேசப்பட்டவன். ஆனால் ஒழுக்கக்கேடு ஒன்றில் ஈடுபட்டு பிறன்மனைவியை இச்சித்த அந்தக்குற்றம் அவனைச் சார்ந்தது. இதனால் தன்வாழ்நாளில் பெற்ற பெருமைகளை எல்லாம் இழந்தான். சீதைமேல் வைத்த ஆசையினால் இக்கதி அவனுக்கு நேர்ந்தது.

ஒழுக்கம் உடையவர்களின் வாய்ச் சொல்லும் உயர்ந்ததாகவே அமையும். மறந்தும் இழிவான வார்த்தைகளைப் பேச இடமளிக்காது. சேக்கிழார் ஒரு செந்தமிழ்ப்புலவர். அத்துடன் தெய்வப் புலவருங் கூட. இவர் பாடிய பெரிய புராணத்தில் கையாண்ட மொழிநடைமுறை மிகவும் சிந்திப்பதற்குரியது.

ஒரு சிறந்த திருத்தொண்டர் ஏனாதிநாத நாயனார். இவரைக் கொன்று தன்வெற்றியை நிலைநாட்ட அதிசூரன் என்ற பகைவன் விரும்புகிறான். கபடவேடம் பூண்டு சிவனடியார் போல் விபூதியணிந்து போர்க்களத்தில் நாயனாருக்கு முன்னே வருகிறான். நாயனார் திரு நீற்றுக்கு மதிப்புக் கொடுத்துப் போற்றுபவர். தன் உடைவாளைக் கொலைக் கருவியாக்காது எதிரிமுன் நிற்கிறார். ஆனால் அதனைப் பயன்படுத்தி அதிசூரன் நாயனாரைத் தன் கொலைக்கருவியைப் பயன்படுத்திக் கொன்றுவிட்டான். சேக்கிழார் இச்செய்தியை எவ்வளவு நாகரிகமாகப் பேசுகிறார். "மற்றவனும் தன் கருத்து முற்றுவித்தான்" என்று பாடுகிறார். அதாவது கொன்றுவிட்டான் என்று சொல்வதையே தவிர்த்து மேற்காட்டியவாறு விளக்குகிறார். இதுதான் ஒழுக்கமுடையோர் வாய்ச் சொல்லாகும்.

"ஒழுக்க முடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"

என்பது வள்ளுவர் வாய்மொழியன்றோ.

சமயவழி நின்று நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கு அன்றாட வாழ்வில் கவனிக்க வேண்டியவை சில உண்டு. ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்பதைப் பின்பற்றி தினமும் ஒரு குறிப்பிட்ட ஒரு நேரம் இதற்காக ஒதுக்கப்பட வேண்டும். வீட்டிலே குடும்பமாக ஒன்று கூடிப் பூசை அறையிலோ அல்லது வாய்ப்பான ஒரு இடத்திலோ அரைமணி நேரமாவது கூட்டு வழிபாடு நடாத்த வேண்டும். இதில் வீட்டிலுள்ள சகலரையும் பங்குபற்றச் செய்வது இன்றியமையாதது. முடியுமானவரை அடியார் கூட்டத்துடன் தலயாத்திரை செய்வதும் அனைவருடனும் கூடிப் பகிர்ந்து உண்ணப் பழகுவதும் முக்கியமாகும். உள்ளூர் வெளியூர் சமய மன்றங்களில் உறுப்பினராகச் சேர்ந்து அவற்றின் வளர்ச்சிக்கு இயன்றவரை பாடுபடுதல் வேண்டும். சைவத்தின் பேரில் காணிக்கையாகப் பிடியரிசி போட்டு வைத்தல், உண்டியல் வைத்துப் பணத்தைச் சமயப்பணிக்கு உதவுதல் போன்ற நற்பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஆலயங்கள் தோறும், கல்வி நிலையங்கள் தோறும் மாணவ மாணவியர்க்கும் ஏனையோருக்கும் நல்லொழுக்க நெறிகளையும் சமய ஆசாரங்களையும் எடுத்துப் பிரசாரம் செய்ய வேண்டும்.

ஒழுக்க நெறியும் சமய உணர்வும் நம்மோடு நின்றுவிடக் கூடாது. எந்த உயிர் நமது அன்புக் காணிக்கையை எதிர் பார்க்கிறதோ அங்கெல்லாம் நமது சமய சேவையின் முத்திரை பதிய வேண்டும். எப்படியோ வாழ்ந்து முடிக்காமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒழுங்கில் வாழ்ந்து நிறைவடைவது சைவமக்களின் இன்றியமையாத கடனாகும்.

கண்ணிற் காண்பதுன் காட்சி

கண்ணிற் காண்பதுன் காட்சி கையாற்றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
யண்ணலே நின் னருள்வடி வாகுமே.

– தாயுமானவர்

Whatsoever the eye seeth is Thou

Sir Pon Arunachalam's translation of this song is as follows'

" Whatsoever the eye seeth is Thou. ;Whatsoever the hand doeth is Thy worship, What the mouth uttereth is Thy Praise.
The Earth and other elements and all living things one.
Thy gracious forms, O Lord."

- Thayumanavar

GOD- 'KADAVUL'

It is strange why God is called God. This is because there is no co-relation in this English term God between the word and its meaning or concept, whereas in the other languages through which the Saints spoke, this relationship is markedly present. For instance, in Tamil the equivalent of the English term God is Kadavul which means 'everywhere' and 'within'.....Transcendental and Immanent.

Kadavul = Kada + UI
Kada = Kadanthavar.....Transcendent
UI = UI Uraipavar..... Immanent
Then again there is the word Andavan Meaning Ruler

Swami Shantanand Saraswathy

Hinduism

"Hinduism is not a sect or dogmatic creed, not a bundle of formulas, not a set of social rules but a mighty, eternal and universal truth. It has learned the secret of preparing man's soul for the divine consummation of identity with the infinite existence of God; rules of life and formulas of belief are only sacred and useful when they help that great preparation. And the first rule of life is that man must live the highest life of which he is capable, overcoming selfishness, overcoming fear, overcoming the temptation to tamper with the truth in order to earn earthly favours. The first formula of belief is 'satyannasti paro sharmah', there is no higher law of conduct than truth."

-Sri Aurobindo

Hinduism -The Eternal Religion

T. Duraisingham
Attorney-at-Law

Religion comes from the Latin word "Religio" "re" =back, "ligare" =to bring. That which brings back the soul with God is religion. Hinduism is the oldest of living religions. Hinduism is also known by the names "Sanatana Dharma" and "Vaidika Dharma". Sanatana Dharma means 'eternal religion'. Vaidika Dharma means 'religion of the Vedas.' The Vedas are the foundational scriptures of Hinduism. The ancient rishis and sages of India have expressed a part of the Vedas. Their experiences are direct and infallible. Hinduism regards the spiritual experiences of the rishis of yore as its authority. The priceless truths that have been discovered by the Hindu rishis and sages through millenia, that is through thousands of years, constitute the glory of Hinduism. It is a revealed religion.

Hinduism, unlike some other religions, does not dogmatically assert that the final emancipation of the soul, is possible only through its means and not through any other. Hinduism allows absolute freedom to the rational mind of man, in regard to questions on the nature of God, soul creation, form of worship and the goal of life. This is the fundamental feature of Hinduism.

This essay is mainly based on the summary of an article made by the late advocate A.C. Nadaraja, for many years the President of the Colombo Divine Life Society, on the article on. Hinduism by Swami Sivananda in the Commemoration Volume issued by the World Parliament of Religions held at Rishikesh in April 1953.

However, there are slightly varying descriptions and definitions of Hinduism by others. In my essay on " Hinduism and its Impact on Buddhism", published in London in 1992, in the Saddhatissa Commemorative volume entitled " Buddhist Essays", I have described and defined Hinduism as given hereafter.

The people of the Indian side of the Sindhu (The Indus) were called the Hindus by the Persian and the later western invaders, and their civilization is called the Hindu civilization. From the Punjab, the civilization flowed over into the valley of the Ganges, where it met with numerous cults of primitive tribes. In its southward advance, the Aryan culture came into contact with the Dravidian culture, and ultimately dominated it, though undergoing some modification from its influence. As the civilization extended over the whole of India, it suffered many changes, but it kept up its continuity with the old Vedic type developed on the banks of the Sindhu. The term "Hindu" had originally a territorial and not a religious significance. It implied residence in a well-defined geographical area. Aboriginal tribes, savage and half-civilized people the cultured Dravidians and the Vedic Aryans were all Hindus, as they were the sons of the same mother. The Hindu thinkers realized the fact that the men and women dwelling in India belonged to different communities, worshipped different gods, and practised different rites.

In addition to this, outsiders had been settling there and had made for themselves a home in India. How was Hindu society built up out of material so diverse, so little susceptible in many cases to assimilation, and scattered across a huge continent, measuring nearly two thousand miles from north to south and eighteen hundred miles from west to east? In a few centuries the spirit of cultural unity spread through a large part of the land, and racial stocks of varying levels of culture became steeped in a common atmosphere. The differences among the sects of the Hindus are more or less on the surface, and the Hindus as such remain a distinct cultural unit, with a common history, a common literature and a common civilization.

Swami Sivananda has set down the various subdivisions that Hinduism has within its fold, such as Vedanta, Saivism, Saktism, Vaishnavism and so on. It has various cults and creeds. It is more a league of religions than a single religion with a definite creed. Hinduism pays respect to all these religions. Rig Veda declares "Ekam sat vipra bahudha vadanti", that is, truth is one; sages call it by various names. The Upanishads declare that all spiritual paths lead to the same goal, just as

cows of variegated colours yield the same white milk. Sri Krishna says in the Bhagavat Gita, 'However men approach me, even so do I welcome them; for the paths that men take from every side are mine.' Schopenhaur studied the Upanishads and meditated on the thoughts of the Upanishads. He said that "the Upanishads are the solace of my life and they will be solace to me after my death also".

Religion is the practical aspect of philosophy. Philosophy is the rational aspect of religion. Hindu philosophy is a way of life. Religion is spiritualiation of human life for a Hindu. The religious history of the world tells us that from time immemorial, India has been the home of great sages and rishis. England is famous for industry; America for commerce; Italy for sculptural works; but India is famous for its religious devotion, yogis and saints. The goal of a religios Indian is self-realization, or attainment of God-consciousness through renunciation.

THE HINDU SCRIPTURES

The foundation of Sanatana Dharma is Sruti; Smiritis are its walls; the Puranas and Itihasas are the buttresses or supports. In ancient times, the srutis were learnt by heart. The teacher sang them to this pupils and the pupils sang them after him. They were not written in book form at first. All sects and philosophical systems accept the Srutis as the final authority. Smiritis stand next in authority to the Srutis. Smiritis are Dharma Sastras. They consist of four great works by sages, which deal with laws and regulations for the carrying on of the individual, family, social and national duties. The most important Smiriti is Manu Smiriti.

The Puranas consist of anecdotes, stories and allegories. They are meant for the masses, or the common people who are not able to study and understand the abstruse Vedas. They contain the essence of the Vedas in a simple form. There are eighteen Puranas. They were written by the great sage, Veda Viyasa. The Itihasas comprise of two great poems or epics- Ramayana and Mahabharata. The lofty discourses of Bhisma on Dharma and the Bhagavat Gita are contained in the Mahabharata. The Upanishads, the Vedanta Sutras and the Bhagavat Gita are regarded as the most authoritativa scriptures of Hinduism. Each system of philosophy treats of three main problems, namely, the God the world and the soul.

SCHOOLS OF METAPHYSICAL THOUGHT

The three main schools of metaphysical thought are dualism (Dvaita), qualified monism (Visishtadvaita) and pure monism (Advaita). They are different rungs in the ladder of yoga. They are not contradicted, but complementary to one another. Madhava said "Main is the servant of God" and established his Dvaita philosophy. Ramanuja said "Main is a ray or spark of God" and established his Visistadvatia philosophy. Sankara said " man is identical with Brahman or the Eternal Soul and established his Kevala Advaita philosophy.

THE VEDAS

The Vedas are the fountain-head of Hindu religion. The Vedas are the ultimate source to which all the religious knowledge of the Hindus can be traced. The Vedas are the oldest books in the library of man. Religion is of divine origin. It is revealed through intuition. It is embodied in the Vedas. Sruti literally means what is heard and Smiriti means what is remembered. Sruti is revelation, Smiriti is tradition. The rishi is only a medium or an agent to transmit to people, the intuitional experiences which he receives. Hence the truths of the Vedas are called revelations. The Vedas are four: the Rig Veda, the Yajur Veda, the Sama Veda and the Atharva Veda. Each Veda consists of four parts- the Manthras or hymns, the Brahmanas or explanations of the Manthras, the Aranyakas and the Upanishads.

THE UPANISHADS

The Upanishads contain the essence or the philosophical portion of the Vedas. The philosophy of the Upanishads is sublime, profound, lofty and soul-stirring. The Upanishads are the concluding portions of the Vedas or the end of the Vedas. The teaching based on them is, there fore, called Vedanta. They form the Ganana Kanda. They are the most important portion of the Vedas. They form the very foundation of Hin-

duism. They Speak of the identity of the individual soul with the Supreme Soul. They reveal most subtle and deep spiritual truths.

The most important Upanishads are Isa, Kena, Katha, Prasna, Mundaka, Mandukiya, Aitereya, Taithireya, Chandogya, Brihad Araniyake and Swetaswatara. These are supremely authoritative. The subject matter of the Vedas is divided into (1) Karma Kanda or ritualistic section; it deals with the various sacrifices and rituals; (2) Upasana Kanda or worship section; it deals with the various kinds of worship or meditation; and (3) Gnana Kanda or Knowledge section; it deals with the highest knowledge of Nirguna Brahman. The Manthras and Brahmanas constitute the Karma Kanda; the Araniyaka, the Upasa Kanda; and the Upanishads the Gnana Kanda.'

THE LAW OF KARMA

Karma means not only action, but also the result of the action. The consequence of an action is not a separate thing. It is a part of the action and cannot be parted from it. Any deed or any thought that causes an effect is called a Karma. The Law of Karma means the law of causation. Wherever there is cause, an effect must be produced there to. A seed is the cause for the tree, the latter being an effect of the former. The tree produces seeds and becomes the cause of the seeds. The Law of Karma is one of the fundamental doctrines of not only of Hinduism, but also of Buddhism and Jainism. As a man sows so shall he reap. This is the Law of Karma. If you do an evil action, you must suffer for it. If you do a good action, you must get happiness. you are the master of your own fate, you are the architect of your own fortune. You are responsible for what you suffer. You sow an action and reap a habit. You sow a habit and reap a character. You sow a character and reap a destiny.

THREE KINDS OF KARMA

Karma is of three kinds, namely Sanchita (accumulated works), Prarabdha (fructifying works) and Agami (current works). Prarabdha is that portion of the past Karma, which is responsible for the present life. The past actions which have begun to take effect and which he has to experience. The whole lot of Sanchita Karma is destroyed by attaining knowledge of Brahman or the Eternal. It can be greatly modified, by entertaining lofty, divine thoughts and doing virtuous actions. Agami Karma can be destroyed by expiatory rites or Prayachita, and by removing the idea of agency through Nimitta Bhav (the attitude of being an instrument in the hands of God), or Sakshi Bhav (the attitude of a silent witness of the actions of the senses and the mind)

HINDU ETHICS

Ethics is right conduct or Sadachara. Without ethics, you cannot have progress in the spiritual path. Ethics is the foundation of Yoga. Ethics is the corner stone of Vedanta. The Ethics is the gateway to God- realisations. Manu Smriti and the other Smritis contain the code of conduct for man. Good conduct is the root of material and spiritual prosperity. It is good conduct that generates virtues. Ethical culture is the very pivot of spirituality.

VARNASHRAMA DHARMA

It is Dharma alone which keeps a nation alive. Dharma is the very soul of man. The duties of the different castes are called Varnadharma. The four principal castes of the Hindus are Brahmans, Kshatriya, Vaishiya and Sutra. The four Ashramas or stages in life are Brahmacharia, Grihasta, Vanaprasta and Sanniyasa. The principle of Varnashrama Dharma is one of the fundamental principles of Hinduism. Sri Krishna says in the Gita, "The four castes were emanated by me by the different distribution of qualities and actions. Know me to be the author of them, though I am actionless and inexhaustible". The underlying principle in the caste system is division of labour. There is no question of higher or lower division. There are three Gunas namely, Satva (purity), Rajas (extrovert tendency) and Tamas (inertia). Satva predominates in Brahmanas. They are wise persons or thinkers. In some Rajas is predominant. These are Kshatrias. They are warriors and the ruling class. In some Tamas is predominant. They are Vaishias or traders. Sudras are servants. They serve the other three castes. Varnashrama Dharma is a characteristic feature of Hinduism. The caste system has degenerated into Adharma during the past centuries. A Brahmin is not a Brahmin, if he is not endowed

with purity and good character. A Sudra is a Brahmin, if he leads a pious and virtous life. Caste is a question of conduct and character.

ASHRAMA DHARMA

There are four Ashramas or stages in life, namely Brahmachariya or the period of scholastic education; Grahasta or the period of family life; Vanaprasta or the period of seclusion; and Sannyasa or the life or renunciation. Each stage has its own duties.

THE FOUR PATHS FOR GOD-REALISATION

The Four main paths for God-realisation are Karma Yoga, Bhakti Yoga, Raja Yoga and Gnana Yoga. Karma Yoga is suitable for a man of active temperament, Bhakti Yoga for a man of devotional temperament, Raja Yoga for a man of mystic temperament, and Gnana Yoga for a man of rational and philosophic temperament. Karma Yoga is the way of selfless service. The selfless worker is called the Karma Yogin. Bhakti Yoga is the path of exclusive devotion to God. He who seeks the union through love or devotion is called the Bhakti Yogin. Raja Yoga is the way of self-restraint. He who seeks to have union with the Lord through mysticism is called a Raja Yogin. Gnana Yoga is the path of wisdom. He who seeks to unite himself with the Supreme Self through philosophy and inquiry, is called the Gnana Yogin. The Yoga of synthesis is the most suitable and potent form of Sadhana. In the mind there are three defects, namely Mala or impurity, Vikshepa or tossing, and Averana or veil. The impurity should be removed by worship or Upasana. The veil should be torn asunder by the practice of Ganan Yoga. Vikshepa or tossing of the mind should be controlled by the practice of Raja Yoga. It is only then that self-realisation is possible. Only the Yoga of synthesis can bring about an integral development. The Yoga of synthesis will develop the human personality in the most appropriate manner, and lead the aspirant towards the goal of perfection. To become harmoniously balanced in all aspects is the ideal of religion. This can be achieved by the practice of the Yoga of synthesis

The four paths are in fact one, in which the four temperaments emphasise one or the other of its inseparable constituents. Yoga is the method by which the Self can be seen, loved and served. The foundation of Hinduism has been laid on the pivot of spiritual truths. The entire structure of Hindu life is built on eternal truths, which were discovered by the Hindu rishis or seers. That is the reason why the structure has lasted through scores of centuries. Few religions are so very elastic and tolerant like Hinduism. Hinduism is very stern and rigid regarding the fundamentals. But it is very elastic in read justing to the external formalities and the non-essentials. That is the reason why it has succeeded in living through millenia, that is thousands of years. Hinduism is a world religion. The Hindus live in perfect harmony, peace and friendship with the followers of other faiths. Their tolerance and fellow feeling towards other religions are remarkable.

I conclude by quoting key-words of Swami Sivanandaji's teachings:

Serve, Love, Give, Purify, Meditate, Realise, Be good; do good; be kind; be compassionate. Enquire "Who am I?", know the Self and be free.

தலைமையகக் கட்டிடப்பூர்த்திச் சிறப்பு மலர்

முதற் பதிப்பின் சகல பிரதிகளும் விற்கப்பட்டுவிட்டன.
இரண்டாம் பதிப்பு அச்சடிக்கப்படுகின்றது.
பிரதி விலை ரூபா 150/-. முன்கூட்டியே பதிவு செய்யவும்.
'**All Ceylon Hindu** Congress' என்ற பெயரில் கோடிட்ட காசோலைகளை அனுப்பிப்பதிவு செய்யலாம்.

சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின் நூற்றாண்டு

மருத்துவக் கலாநிதி கலைமாமணி
தலைவர், விவேகானந்த சபை, கொழும்பு
துணைத்தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்

1893 செப்டம்பர் 11ம் நாள் முதல் 1893 செப்டம்பர் 27–ஆம் நாள் வரையான காலம் அனைத்துலக இந்துக்களின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட காலமாகும். சிகாகோ அனைத்துலகச் சமயப் பெருமன்றத்தில் இந்து சமயத்தின் உயர்நிலை இயம்பப்பட்டு அந்நிலை ஏற்புடைத்தாகக் கொள்ளப்பட்டு, இந்துக்கள் இருளடைந்த நாட்டினர் அல்லர் என்றும், உலகினுக்கு ஒளிதந்து உலக மக்களிடையே ஐக்கியத்தையும் சமத்துவத்தையும், சமாதானத்தையும் தரவல்ல பெரு நெறிபடைத்த சமயம் இந்து சமயம் என நிறுவப்பட்ட காலம். இதற்குக் காரண கர்த்தாவாக அமைந்தவர் சுவாமி விவேகாநந்தராவர். 'மலர்தலையுலகின் மல்கிரு ளகல, இலகொளி பரப்பி யாவையும் விளக்கும், பரிதியி னொருதா னாகி முதலீ, றொப்பளவாசை முனிவிகந் துயர்ந்த, அற்புத மூர்த்திதன்னலர் தரு தன்மையின், மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும் முனிவற வருளிய" முதல்வன் என்றும், "..... இவ்வுல கத்து முன்னாள், தங்கிரு ளிரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற பொங்கிய விருளை யேனைப் புறவிருள் போக்குகின்ற செங்கதி ரவன்போ னீக்குந்" தன்மையோன் எனும் வர்ணனைகட்கு ஏற்புடை ஞான சூரியன் சுவாமி விவேகாநந்தர் எனின், குன்றக் கூறலாகுமேயன்றி மிகைபடக் கூறலாக அமையாததாகும். இத்தகு ஞான சூரியனின் கமலபாதங்கள் இலங்காபுரியின் மண்ணைத் தீண்டிய தினம் இலங்கை இந்துக்களின் மாதவம் பயனுற்ற நாளாகும். இத் திருநாள் 1897ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் நாளாகும்.

அன்றைய தினம் மதியத்தின் பின்னர் சுவாமிகள் இலங்கையின் மேற்கரையாகிய கொழும்புமாநகரில் உதயஞ்செய்ய, சுவாமிகளின் பிரகாசத்தின் முன் தன் கதிர்கள் வலுவிழக்கின்றன என்ற கருத்து விளங்கச் சூரியன் பின்னோக்கி மேற்குப் பயணத்தினை முன்னெடுத்தான். மேலைப் பகுதியிலிருந்து சுவாமிகள் கீழைத்தேயத்திற்கு வருகை தந்தமையால், மேற்கில் ஏற்பட்ட இருளை நீக்கப் பகலவன் முயன்றனனோ என்ற ஐயம் ஏற்படுகின்றது. சூரியன் வரவால் மலருந் தாமரை மலர்கள் போன்று ஞான சூரியனின் வரவால் இந்துக்களின் இதய தாமரைகள் மலர்ந்தன. இந் நிலை கொழும்புவாழ் இந்துப் பெரு மக்கள் சுவாமி விவேகானந்தருக்கு வழங்கிய வரலாறு காணாத அரச வரவேற்பில் மிளிர்ந்தது.

இதற்கு முன்னைய காலங்களில் மேற்கத்தைய நாடுகளிலிருந்து, மதப் பிரசாரகர்கள் கீழைத்தேய நாடுகட்கு (இலங்கை உட்பட) வருகை தந்து தமது மதமே உண்மை மதம் என்று பிரசாரங்கள் செய்து, மதம் பிடித்த நிலையில் மதமாற்றங்கள் செய்து மக்களை ஈர்த்தனர். பாரம்பரிய வழிபாட்டுத் தலங்களைத் தகர்த்தனர். முதன் முதலில் இந்திய மண்ணிலிருந்து இந்து மத தத்துவங்களை ஒரு பேரரங்கில் எடுத்தியம்பச் சென்ற புனிதன் சுவாமி விவேகானந்தர் ஆவார். மதமாற்றம் செய்யும் நோக்குடனோ, மதவாதம் செய்யும் போக்குடனோ இவர் விஜயம் அமையவில்லை. பெரும் பொருளுடனோ படாடோபத்துடனோ, சென்றவரல்லச் சுவாமிகள். ஏழைச் சன்னியாசியாக எத்தனையோ இன்னல்கட்கு மத்தியில், டாம்பீகம் நிறைந்த அரங்கில் படாடோபிகள் மத்தியிலல்லவா சுவாமிகள் பிரவேசித்தார். ஞானத்தின் திருவுருவாக, ஆன்மீக உற்சாகத்துடன் சமயப் பேரரங்கில் வீறுநடை போட்டார் சுவாமிகள். இந் நிலை மேடையில் வீற்றிருந்த சமய உன்மத்தர்களைக் "கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத் தண்ணார் ஒளிமழுங்கிய தாரகைகளின்" நிலைக்குத் தள்ளியது. "அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதரர்களே" என ஆரம்பித்து உரையாற்றிய சுவாமிகள் அனைவரினதும் உள்ளங்களையும் கவர்ந்த கள்வனானார். சுவாமிகள் வேற்றுச் சமயிகளை வெற்றி கொண்டார் என்று கூறுவது சுவாமிகளின் நிலைப்பாட்டிற்குப் பொருந்தாது. சுவாமிகள் தாம் வேற்றுச் சமய நெறிகளை வெறுக்காத பண்பினர் என்பதையும், பிறசமயக் கொள்கைகளை வெறுக்காது மதித்தல் அவற்றை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய இருபண்புகளை உலகத்துக்குப் புகட்டிய மதம் இந்துமதம் என்பதைத் திடம்பட உரைத்து நிலை நாட்டினார். ஒரே குறிக்கோளை அடையப் பல்வேறு வழிகளிலே சமயங்கள் செயற்படுகின்றன. அக்குறிக்கோள் மனித சமுதாயத்தின் ஆன்மீக முன்னேற்ற மாதலால் சமயவாதிகள் போர்ப்பறை ஒலிப்பதைத் தவிர்த்து, உலக சமயம் என்ற நோக்கினை அடைய முன்னேறவேண்டும் என இன் ஒலி பெருக்கினார். வறுமையில் வாடும் இந்திய மக்களுக்கு உதவிகோரினார். உதவி செய்; சண்டை போடாதே, ஒன்றுபடுத்து அழிக்காதே, சமரசமும் சாந்தமும் வேண்டும். வேறுபாடு வேண்டாம்" என அந்த அரங்கில் முரசறைந்தார். சமயத்தின் சார்பில் சண்டைகள் உயிரிழப்புகள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் இந்நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் இன்றும் நிலவுகின்றன. மனித சமுதாயம் ஒரே குலத்தைச் சார்ந்தது என்பதை நினைந்து, மனித இரத்தஞ் சிந்துவதைத் தடுக்க சுவாமிகளின் ஆன்மீக அறிவுரைகள் அருந்துணை புரியும். 1993ல் சுவாமிகளின் சிகாகோ சொற்பொழிவின் நூற்றாண்டினை உலகங் கொண்டாடியபோது இலங்கையிலுங் கோலாகலமான விழாக்கள் கோலப்பட்டன. 1997 ஜனவரியில் சுவாமிகளின் இலங்கை வருகையும் இலங்கைச் சொற்பொழிவுகளையும் நினைவு கூர்ந்து விழாக்களுக்கு ஆரம்ப ஆயத்தங்கள் எடுக்கப்படுகின்றன.

சுவாமி விவேகானந்தர் 1893 மே மாதத்தில் கொழும்பு வழியேயே மேற்குலகிற்குப் பயணமானார். அப்பொழுது சுவாமிகள் கொழும்பில் பௌத்த தலங்கட்குச் சென்றதாக அறியவுண்டு. எனினும் இலங்கை வாழ் இந்துக்களிடையே சுவாமிகள் உணர்ச்சியையுங் கவர்ச்சியையும் பெறவில்லை. 1876 சனவரி 15ல் ஓர் இந்து மதத் துறவியின் வருகை பத்திரிகைகள் மூலம் பிரசுரமாய் பிரபல்யமாகியது. தம்பையா சத்திரத்தில் இந்துப் பிரமுகர்கள் கூடிச் சுவாமிகட்டு ஓர் பெருங் குதூகல வரவேற்பு நல்கத் திட்டம் தீட்டினர். அவர்களின் முயற்சி திருவினையாகியது. சுவாமிகட்கு வரலாறு காணாத வரவேற்பு கொழும்பு மாநகரில் நல்கப்பட்டது. இவ்வரலாறு காணாத வரவேற்பின் நூற்றாண்டினைக் கொண்டாடுமுகமாக இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளையின் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தாஜி மகராஜ் அவர்களின் தலைமையில் இலங்கையிற் பல வேறு இந்துமத நிறுவனப் பிரதிநிதிகள் கொண்ட செயற்குழு ஒன்று அமைவுற்றது. "நூற்றாண்டு வைபத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் இரண்டு சரித்திரப் புகழ் சார்ந்தவையாக அமைவன. 9 அடி 6 அங்குல உயரமுள்ள சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை விவேகானந்த சபை வளவில் நிறுவப்பட இருக்கின்றது. அடுத்த நிகழ்வு சுவாமி விவேகானந்தரின் நினைவில் இலங்கை அரசு ஒரு முத்திரையை வெளியிடும். கல்கத்தா இராமகிருஷ்ண மிஷனின் துணைத் தலைவர் சுவாமி இரங்கநாதானந்தாஜி மகராஜ் அவர்கள் இலங்கைப் பிரதமர் கௌரவ ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முன் நிலையில் இத் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பார்கள். சுவாமி விவேகானந்தரை நிலையாக நினைவுபடுத்தும் விவேகானந்த சபை வளவில் நிறை நிலையாக இத் திருவுருவச் சிலை பிரகாசிப்பதுடன் சுவாமிகளின் இலங்கை வருகையையும் அவரின் போதனைகளையுங் காலா காலமாக நினைவுறுத்தும். சுவாமி இரங்கநாதானந்தாஜி அவர்கள் 1968ல் சிகாகோ சொற்பொழிவின் 75 வது ஆண்டினை நினைவுகோரும் வகையில் செப்டெம்பர் 15ல் அமெரிக்காவில் நடந்த சமயக் கருத்தரங்கிற் பங்கு பற்றியதுடன் விவேகானந்தர் போன்று ஒருவருடம் அமெரிக்காவிற் சொற்பொழிவாற்றி வேறு பலநாடுகளிற் சொற்பொழிவுகள் ஆற்றியதுடன் இந்தியத் தாயகம் செல்லும் வழியில் டிசெம்பர் 16ல் இலங்கை வந்து இங்கு 11 நாட்கள் சொற்பொழிவுகள் செய்து சுவாமி விவேகானந்தர் வழியைப் பின்பற்றிச் சுவாமிகள் வழியே நடந்தார். எனவே சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையை நினைவு கூரும் வழியில் எடுக்கப்படும் விழாவிற் பிரதம பாத்திரம் இரங்கநாதானந்தாஜி மகராஜ் அவர்கள் பெறுவது சரித்திரஞ்சார் பெருமைக்கு உகந்ததாகும்.

மனித சமுதாயத்திற்கு ஆன்மீக நெறியினை வாரி வழங்கிய சுவாமிகளின் இலங்கை வருகையால் இலங்கை புனிதம் பெற்றது. வருடாவருடம் அவர் வருகையை நினைவில் ஏற்றுக் கொண்டாடும் பணி எம்மவரைச் சார்ந்துள்ளதெனினும், ஐந்து வருடம் பத்து வருடத்திற்கொரு முறையாவது அவர் நினைவில் அவர் மேற்கொண்ட பணியினை முன்னெடுத்துச் செல்வது எமது நன்றிக் கடனாகும். சுவாமிகளை வரவேற்றுத் தம் நன்றிக் கடனைச் செலுத்திய இந்துப் பெருமக்கள் பாக்கிய சாலிகள். அப்பெரியார்கள் சுவாமிகளின் மஹாசமாதியின் பின் விவேகானந்த சபை என்ற அமைப்பை அவர் நினைவில் ஆக்கினர். அச்சபை ஏனைய சபைகளுடன் சேர்ந்து சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின் 100 வது ஆண்டு நினைவு விழாவைக் கொண்டாடுகின்றது. இந்நாளில் அப்பணியில் பல்வழிகளில் பங்கு கொள்ளும் அனைவரும் பாக்கிய சாலிகளே !

இலங்கை அனுபவம் பற்றி சுவாமிஜி விவேகாநந்தர்

1900 ஆம் ஆண்டில் சுவாமிஜி இரண்டாவது முறையாக மேலைநாடுகளிற் பயணம் செய்தபொழுது, தமது நினைவுக் குறிப்புகளைப் பற்றி சகோதரத் துறவியும், கல்கத்தா 'உத்போதன்' எனும் வங்கமொழி இதழின் ஆசிரியருமான சுவாமி திரிகுணாதீதா அவர்களுக்கு வங்க மொழியில் எழுதியனுப்பினார்; 'உத்போத' னில் வெளிவந்த நினைவுக் குறிப்புகளின் ஆங்கில மொழியாக்கத்திற்கு ஞஆநஅடிசைள டிக நுரசடி நயசே கூசயஎநடஞ எனப் பெயரிடப்பட்டது. இதில் சுவாமிஜி தமது இலங்கை அனுபவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இலங்கை இந்துக்களைக் குறித்து சுவாமிஜி எழுதியதாவது:

"இங்கு எல்லா இந்து வகுப்பினரும் ஒன்று கலந்து ஒரே இனமாய் வாழ்கின்றனர். இவர்கள் பஞ்சாபிய ஜாட்டுகளைப் போல எந்த ஜாதிப் பெண்ணையும் (ஐரோப்பியப் பெண் உட்பட) மணந்து கொள்ளலாம். ஒருவன் கோவிலுக்குச் சென்று புனிதமான முப்பட்டைத் திருநீற்றை நெற்றியில் அணிந்து, 'சிவசிவா' என்று கூறினால் உடனே இந்துவாக மாறிவிடுகிறான். கணவன் இந்துவாகவும் மனைவி கிறிஸ்துவ மதத்தினளாகவும் இருக்கலாம். ஒரு கிறிஸ்தவன் நெற்றியில் வெண்ணீற்றைப் பூசி, 'நம பார்வதிபதயே !" என்றதும் இந்துவாக மாறிவிடுகிறான். இதுதான் கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு மிகுந்த கோபமூட்டுகிறது. இலங்கைக்கு நீங்கள் வந்ததிலிருந்து அநேக கிறிஸ்தவர்கள் நெற்றியில் நீறணிந்து 'சிவனே போற்றி' என்று கூறித் தங்கள் பழைய இந்து மதத்திற்குச் சென்று விட்டார்கள்.

"இங்கு அத்துவைதமும், வீர சைவமும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இந்து என்ற பெயருக்குப் பதில் சைவன் எனக் கூறவேண்டும். ஸ்ரீ சைதன்னிய தேவர் வங்காளத்திலே பரவச் செய்த இறைவனின் திவ்விய நாம சங்கீர்த்தனமும் நடனமும் ஆதியிலே தென்னாட்டிலே தமிழர்களிடையே பிறந்தன. இலங்கையில் வழங்கும் தமிழ் சுத்தமான தமிழாகும். மதமும் கலப்பற்ற தமிழ் மதமேயாகும். பல்லாயிரக்கணக்கான மக்கள் பரவசமாய் ஒருங்கே மறைநூல்களை ஓதுதலும், சிவனைப் பரவிப் பாடுதலும் ஆயிரக்கணக்கான தாள வாத்தியங்களின் முழக்கமும் இனிய ஓசையும் சிறந்த அடியாரான அனுமனை யொத்த தோற்றமும் சிவந்த கண்களும் உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழுவதும் நீறுபூசி, கழுத்திலே உருத்திராக்க மாலைகளணிந்து மெய்ம் மறந்து ஆடுவதும் ஆகிய இவற்றை நேரில் பாராமல் ஒருவரால் புரிந்து கொள்ள இயலாது."

சுவாமிஜி, மிகச் சரியாகவே இலங்கை இந்துக்களைப் புரிந்துக் கொண்டார் என்பதை மேலே காண்கிறோம்.

நன்றி – பெ. கு. மணி. எழுதிய நூற்றாண்டு விழாக்காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள்.

சமயம் காட்டும் அமைதிப்பாதை

ஞானசிரோன்மணி (திருமதி) பூமணி குலசிங்கம்
முன்னாள் விரிவுரையாளர், கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

சமயம் என்னும் சொல் செம்மைப்படுத்தல் அல்லது பக்குவப்படுத்தல் என்ற பொருள் கொண்டது. மனிதனையே மையமாகக் கொண்ட இந்த நெறி அவனது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி சிந்தனையில், பேச்சில், நடத்தையில் நெறிமுறையான பண்புகளை அதாவது ஆன்மீக இயல்புகளை மிளிரச் செய்வதே சமயம். நான், எனது என்னுடையது என்ற சுயநலம்மாறி, எமது எங்களுடைய என்ற பிறர்நலம் கருதும் பண்புகள் மிளிரும்போது ஒருவன் மனிதனாகிறான். இது, ஒற்றுமை, அன்பு, சமாதானம், நீதி, அமைதிக்கு இட்டுச் செல்லும் முற்காலத்தில் கல்வி முற்றிலும் ஒழுக்கமடங்கிய சமயக் கல்வியாகவே காணப்பட்டது. குருகுல முறையும் இக்கல்வியையே வழங்கிற்று. திருவள்ளுவரும் அதனையே வலியுறுத்திச் சென்றார்.

'கற்றக் கடைறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக என்றும்
'ஒருமைக் கண் தான் கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து" என்றார்.

அதாவது அறிவுச் செல்வமாகிய கல்வி (ஞானம்) ஒருவனுக்கு அவன் எடுக்கும் பிறவிகளுக்குத் துணையாக இருக்கும் என்று கூறினார்.

"அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்றார் ஔவைப்பிராட்டியார். மாணிக்கவாசக சுவாமிகளும் சிவபுராணத்தில் இக் கருத்தினையே வலியுறுத்துகின்றார். இறைவனது பல்வேறு சிருஷ்டிகளில் மனிதனே உயர் நிலையில் காணப்படுகின்றான். பிற உயிர்கள் யாவும் உணவு தேடுவதும் இனத்தைப் பெருக்குவதும் பிழைத்தலையுமே நோக்காகக் கொண்டுள்ளன. மனிதனுக்கு மட்டுமே சிவனடி சேரும் ஆற்றல் உண்டு. இதற்கெனவே மனம் என்னும் கருவியையும், சிந்திக்குமாற்றலையும், மொழி வன்மையினையும் அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவன் தனித்து வாழவோ, பிழைப்பதற்கு மட்டுமோ தோன்றியவனல்லன். சமூகத்துடனும், சூழலுடனும் இணங்கி வாழ்ந்து சமூகத்திற்குத் தொண்டு புரிந்து நெறிமுறையான நடத்தையினைப் பின்பற்றுவதற்கு ஓர் கலாசாரமும் பண்பாடுமுண்டு. இது அவனைப் பண்புடையோனாக்கி, அமைதியான சமுதாய வாழ்விற்கு தயாராக்கும் பொழுது ஆன்மீகப் பண்புகள் வெளிப்படும். இதனாலேயே சுவாமி விவேகாநந்தர், அரவிந்தர், தாகூர், இராதாகிருஷ்ணன் போன்ற தற்கால 'ஞானிகள்' எம் உள்ளத்திலுள்ள ஆன்மீக/ தெய்வீகப் பண்புகளை வெளிப்படுத்துவதே சமயம் " என்று கூறுகின்றனர். அத்துடன் மேலை நாட்டு உளவியல் அறிஞர் ரொஜேஸ், டீலாங், நீடில்காம், ஜங், மாஸ்லோ போன்றவர்கள் ' ஆன்மீகப் பண்புகள் வாழ்வில் மிளிரும்போது, ஆளுமை விருத்தியாகின்றதெனக்' கூறுகின்றனர். ஆன்மீக முன்னேற்றமே சிவனடி சேர்வதற்கு ஊடகமாகின்றது. இதுவே வாழ்வின் நோக்கமுமாகும். இக்குறியை அடையும் மார்க்கத்தையும் வழிமுறைகளையும் இந்து சமயம் காட்டுகின்றது. செயற்பாட்டின் மூலமே மனிதன் மனிதனை நெறிப்படுத்த முடியும் என்பதை உணர்ந்த நம் ரிஷிகளும் ஞானிகளும் பிரார்த்தனை வழிபாடு, கிரிகைகள், சடங்குகள் என்பனவற்றை உருவாக்கினர். மனம் என்னும் முக்கிய கருவியைச் செயற்பாடுகளின் மூலம் பண்படுத்த இவை பயிற்சியை அளித்தன. நல்லவை, தீயவை, சரியானவை, தவறானவை என்பதை மட்டும் அறிந்து விட்டால் மட்டும் போதாது. இதனை வாழ்வில் கடைப்பிடித்து, நடத்தையில் செயலில் பிரதிபலிப்பதற்கு மன உறுதியும் வலிமையும் அவசியம். இது அனுபவத்தால் பிறப்பதே ஒளிய, நூலறிவாலோ, போதனையினாலோ பிறப்பதன்று. எமக்குப் பயிற்சி அனுபவத்தை அளிப்பது சமய அனுட்டானங்களும் வழிபாட்டு முறைகளுமேயாகும். இதற்கு மனதை இறைவன்பால் செலுத்தி முழு நம்பிக்கையுடன் அயராது ஊக்கத்துடன் முயற்சி செய்யவேண்டும். மனஉறுதியுடனும் ஒருமைப்பாட்டுடனும் கூடிய சுயமுயற்சியே பயன்தரும். இன்றைய சிறுவர்களே நாளையச் சமூகத்தைக் கட்டியெழுப்பும் பெரியோராவர். எனவே சிறு பிராயத்திலிருந்தே பிள்ளைகளுக்குக் குடும்பமும், சமூகமும் இப் பயிற்சியை நடைமுறைப்படுத்தல் அவசியம். மனம் தூய்மை அடையும் போது சிந்தனையிலும் பேச்சிலும் நடத்தையிலும், அன்பும் அறமும் தென்படும்.

இன்றையப் பிரச்சனை

விஞ்ஞானத் தொழில் நுட்பத்துறைகளில் ஏற்பட்டுள்ள துரிதமாற்றங்கள் நவீன சமூகத்தில் பல நன்மைகளை உண்டு பண்ணியுள்ளன. பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில் வியாபாரம், வர்த்தகம், பொருளாதாரம், நவீன தொடர்பு சாதனங்கள் உலகைச் சுருக்கி, பூகோளத்தை ஓர் கிராமமாக மாற்றியுள்ளது. ஆனால் இம்மாற்றங்கள் தோற்றுவித்த சமூகப் பொருளாதார மாற்றங்கள் உலக சமூகத்தை, பணம், பதவி, இன்ப நாட்டத்திற்கே இட்டுச் செல்கிறது. அதிகார அவாவும், அணு ஆயுதங்களும், மனித சமூகத்தினையும் சூழலையும் முற்றிலும் அழிக்கக்கூடியனவாகக் காணப்படுகின்றன. பிரபல்ய விஞ்ஞானி அயின்ஸ்டையின் "சமயம் இல்லாத விஞ்ஞானம் குருடாகவும், விஞ்ஞானமில்லாத சமயம் முடமாகவுமே விளங்கும்" எனக் கூறினார். சமயமே மனிதனை மிருகப்பண்புகளிலிருந்து விடுவித்து, மனித தெய்வீகப் பண்புகளுக்கு உயர்த்த வலியது. இயற்கையினையே வெல்லக்கூடியதான விஞ்ஞானத் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் ஆணவத்தை வளர்த்துள்ளன. அதாவது தன்னால் எதையும் செய்யமுடியும் என்ற எண்ணங்கள் வலுப்பெறுகின்றன. சமய நம்பிக்கை தளர்ச்சியடைய நெறிமுறையான வாழ்வும், அறநெறிசார்ந்த விழுமியங்களும் செயலற்றுக் காணப்படுகின்றன. 'ஒழுக்கம் விழுப்பம் தருதலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்ற வள்ளுவர் கூற்று அர்த்தமற்றதாகிறது. இன்று பொருளாதார நோக்கு சுரண்டல், அடக்குமுறை, அநீதி, வெறுப்பு, பொறாமை, கற்பழிப்பு, வன்செயல் போன்ற மனிதப் பண்புகளுக்கு அப்பாற்பட்ட நடத்தைகளுக்கு இட்டுச் செல்கின்றது. காட்டு நீதியே நாட்டு நீதியாகிறது. எனவே மனநோய், நரம்புத்தளர்ச்சி, விரக்தி, என்பன உருவாகுவதனால், மது, போதைப் பொருட்கள் தற்கொலை என்பவைகளை நாடி மனித சமூகம் அமைதியின்மையினால் நிலைகுலைகிறது.

விஞ்ஞானமும் தொழில் நுட்ப வசதிகளும் மக்களுக்கு ஏன் இன்பத்தையும், நிறைவினையும் திருப்தியையும் கொடுக்கவில்லை? மனிதன் ஏன் அமைதியைத் தேடி அலைந்து சர்வதேச மகா நாடுகளைக் கூட்டி இதனை அடையப் பாடுபடுகின்றான்? மனித உரிமைச் சாசனங்களை ஏன் பிரகடனம் செய்கின்றனர்? காரணம், நவீன அறிவு மனிதனுக்கு எல்லையற்ற அதிகாரத்தையும் செல்வத்தையும் கொடுத்திருக்கின்றதே ஒழிய; வாழ்விற்கு அவசியமான ஞானத்தை உருவாக்கவில்லை. " ஞானம் இல்லாத அறிவு தன்னையே அழிக்கக்கூடியது" என சிந்தனையாளர் இராதாகிருஷ்ணன் கூறுகிறார்.

உண்மையான ஞானம் நூலறிவிலும், பட்டங்களிலும் சான்றிதழ்களிலும் அல்ல, ஆன்ம ஒளி துலங்குவதனாலேயே உதயமாகும் என சுவாமி விவேகானந்தர் விளக்கினார். இதனையே ரிஷிகளும் ஞானிகளும் " சமய வாழ்வு உள் ஒளியை மிளிரச் செய்யும்" என்றனர். இதுவே ஆன்ம விருத்தி, அதாவது பிற உயிர்கள் மீது அன்பையும் மானிட நேயத்தையும் தோற்றுவிக்கக் கூடியது. 'மானிட சமுதாயத்தை இணைத்து ஒன்று சேர்க்கும் ஒரே ஒரு கருவி' என ஜூலியன் ஹக்ஸ்லி (Julian Huxley) கூறுகின்றார். இந்து சமயம் உளத்தூய்மையினை வலியுறுத்தி, தன்னைத்தானே சீர்திருத்தி வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்த்து வலியவனாக்குகின்றது. ஆனால் இன்று சமய நம்பிக்கையின் வீழ்ச்சி சமயத்தையும் வர்த்தகமாக்குகின்றது. இதன் நிமித்தம் நெறி முறையான சமூக வாழ்வை நிலை நாட்டும் கலாசாரம் சீர்குலைந்துள்ளது. சமூகத்தின் அடித்தளம் குடும்பம். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமாகின்றது. நெறிமுறையான வாழ்வின் இருப்பிடம். குடும்பத்தின் அத்திவாரம் விவாகத்தில் தங்கியுள்ளது. இன்று விவாகங்கள் தம் புனிதத்தன்மையினை இழந்துள்ளன. குடும்ப வாழ்வு நிலைகுலைவதனால் நல்லொழுக்க ஆன்மிக விழுமியங்களை விளங்கிப் பின்பற்றக் கூடிய நிலை அற்றுப் போகின்றது. மூத்தோர், நிர்வாகிகள், அரசியல் தலைவர்களின் போக்குகள் பின்பற்றக் கூடியனவாயில்லை. இளைஞர் திக்குத் தெரியாது குழப்ப முற்ற நிலையில் விளங்குகின்றனர். இந்த நிலையினை எவ்வாறு மாற்றியமைப்பதென்பதே எங்கள் கேள்வியாகும்.

இந்து சமயம் மனிதனை நல்லவனாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஆனால் இன்று சமயத்தின் சாரம் கைவிடப்பட்டு வெறும் நம்பிக்கையும் கிரிகைகளும் சடங்குகளுமாகவே விளங்குகின்றது. இதனால் தன்னைத் தானே செம்மைப்படுத்தும் முயற்சிகள் இல்லாது வெறும் பூசைகளும், கிரிகைகளும், வழிபாடுகளும் மனிதனது லௌகீக அபிலாஷைகளை நிறைவேற்றும் என்ற எண்ணம் குடிகொண்டுள்ளது. சமயம் காட்டும் கலாசாரப் பாதையில் சென்று தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் பொழுது நல்லொழுக்கம் உதயமாகும். இது ஆன்மிக விருத்திக்கு வழிகோலும்.

சமயம் காட்டும் ஆன்மீகப் பாதை

எமது சமயம், இறைவனும் ஆன்மாவும் நித்தியமானவை என்ற உண்மையினை வலியுறுத்துகின்றது. "பதியினைப் போல் பசு, பாசம் நித்தியமானவை" எனத் திருமூலர் கூறுகிறார். ஆன்மாவானது பாசம் என்ற ஆணவ மலத்தொடர்பினால் அறிவை முற்றிலும் இழந்துள்ளது. இந்த அறிவைப் பெறும் பொருட்டு எமக்கு இந்த உடம்பையும் உட்கருவிகளையும் உலகையும் பரம்பொருளாகிய சிவபெருமான் கொடுத்துள்ளார். சமுதாய வாழ்வில் ஈடுபட்டு அனுபவ வாயிலாக எம்மைத் தூய்மைப்படுத்துவதன் மூலம் ஆணவ மலமானது சிறிது சிறிதாக நீங்கும். அரிசிக்குத் தவிடு இருப்பதுபோன்று ஆன்மா ஆணவ மலத்தால் சூழப்பட்டுள்ளது. அரிசியை உலக்கையால் குத்தி தவிட்டைப் போக்குவதைப் போல ஆணவத்தை நீக்குவதற்கு விடாமுயற்சியுடன் அரும்பாடுபட வேண்டும். மனதை இறைவன்பால் செலுத்தி வழிபாட்டுமுறைகளையும் சமய அநுட்டானங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

"ஒதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்றார் ஔவைப் பிராட்டி. மலத்தைப் போக்குவதற்கான அறவாழ்வினை இறைநம்பிக்கையுடன் கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும். அப்பொழுதே மனத்தூய்மை ஏற்படும். இறைவனை இடையறாது கைகூப்பி வழிபட்டு அவர் புகழ்பாடி அவர் அருளைப்பெற முயலும் போது நல்லெண்ணம், நற்சிந்தனை தோன்றி நற்செயலுக்கு வழிவகுக்கும். இம் முயற்சிகள் சிறு வயதிலிருந்தே இடம்பெறவேண்டும். நால்வர் காட்டிய தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பன அன்பு மார்க்கங்களே – பக்தி மார்க்கங்களே "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று அப்பர் சுவாமிகள் பாடினார். "பிறரைத் தன் உயிர் போன்று நேசித்து அன்பு செலுத்தும் பணி இறைபணியாகும்". என மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். பிறர் நலம் கருதும் அன்பு வாழ்வே சமயவாழ்வு. இதுவே இன்பம் அமைதிபயக்க வல்லது. அன்பு நெறியே சிவநெறியாகும். திருமூலர் இதனை அழகாக எடுத்துரைக்கிறார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலர்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே"

ஆன்மிக வாழ்வையே நோக்காகக் கொண்ட நம் முன்னோர் பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டு பிரமாண்டமான கோவில்களையே கட்டினர். ஏன் பல்கலைக்கழகங்களை அமைக்கவில்லை? இவை கல்வி நிலையங்கள் அல்லவா? காரணம் இவை ஆணவத்தையே வளர்க்க வலியன. எமக்கு அவசியமானது ஆன்மிக மேம்பாட்டை வளர்த்தலே. நெறிமுறையான வாழ்வின் முக்கியத்தைக் கண்ட நம்முன்னோர் "கோவில் இல்லாத ஊரில் குடிகொள்ள வேண்டாம்" என்று கூறினர். இறைவனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை வழிபாடாகும். அவர் செல்வத்தை விரும்பாதவர் "வேண்டுதல் வேண்டாமை யிலாதவர்" மனம் மொழி மெய்களால் அந்த ஆண்டவனை வழிபடுவதே நம் கடனைத் தீர்க்கும் ஒரே வழி. இச் செயல் எம்மைத் தூய்மைப்படுத்தும். நற்பண்புகளுக்கு அத்திவாரமாகும்.

"காலையிலெழுந்து நாமமேமொழிந்து
காதலுமைமைந்த எனவோதிக்
காலமுமுணர்ந்து ஞான வொளிகண்கள்
காண அருளென்று பெறுவேனே"

என்பது திருப்புகழ்

எமது புராணங்கள், காப்பியங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் யாவும் ஒழுக்கத்தையே மையமாகக் கொண்டுள்ளன. சமய விழாக்களும், பண்டிகைகளும் மனிதனைச் செம்மைப்படுத்துவதையே கருப்பொருட்களாக கொண்டுள்ளன. உதாரணம்– சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை, தீபாவளி முதலியன. எனவே மனமானது தூய்மையடையும் பொழுது சிந்தனை பேச்சு, செயல்– ஒருங்கிணைந்து அன்பு தியாகம் கருணை, விட்டுக் கொடுத்தல், பொறுமை, கூட்டுறவு, பிறரை மதித்தல் சகோதரத்துவம் போன்ற பிறர் நலம் கருதும் பண்புகள் மலர்ந்து, கயநலப் பண்புகள் தேய, ஆணவ மலமும் படிப்படியாக நீக்கப்படும். நாமும் ஆன்மீக முன்னேற்றத்தினை அடைவோம். ஒவ்வொருவரினதும் உள்ளத்தில் அன்பு மலர, "நான், எனது, என்னுடையது" என்ற எண்ணம் நீங்கி அமைதியும் திருப்தியும் பிறக்கும். தனிமனிதனில் தோன்றிய இந்த அமைதி குடும்பத்திலும், சமூகத்திலும், நாட்டிலும், சகல துறைகளிலும் பிரதிபலிக்க நல்லெண்ணம், சமாதானம், ஒற்றுமை, நீதி மலரும். இதுவே சமயம் காட்டும் ஆன்மீகப் பாதை. அமைதியை நிலை பெறச் செய்யும் ஒரே வழி.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு

சிந்து வெளி நாகரிகம்

–ஓர் அறிமுகம்–

சோமசுந்தரம் முரளி B.A. (Cey)

க.பொ.த.(உ.த) பரீட்சைக்கு இந்து நாகரிகம் படிக்கும் மாணவர்களுக்கென மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் திரு.முரளி எழுதிய விசேட கட்டுரை இது)

இந்து சமயம் எங்கே? எப்போது? யாரால்? தோற்றுவிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைத்தில. ஆன்மீக வாதிகளைப் பொறுத்தவரை 'ஆதியும் அந்தமும் இல்லாத அந்த அரும் பெரும் சோதி' போலத் தோற்றமும் முடிவும் இல்லாதது இந்து மதம். ஆயினும் வரலாற்றாய்வாளர்களின் ஆய்வுகள் கூட இந்து மதத்தின் தொன்மையை ஆராய முடிந்ததே தவிர அதன் தோற்றம் பற்றிய கால வரையறுப்பை ஊகங்களாகக் கூட வெளியிட முடியவில்லை. இற்றைவரை நிகழ்த்தப்பட்ட வரலாற்று ஆய்வுகளின்படி, இந்து மதத்தின் தொன்மைபற்றி நாமறிந்த முதலாவது காலப்பகுதியாக விளங்குவது சிந்து வெளி காலமாகும். இக் காரணம் பற்றிச் சிந்து வெளி கால சமய, சமூக, பண்பாட்டு அம்சங்களை ஆராய்தல் பொருத்தமானதாகும்.

சேலம், சேனாப், இராவி, பியர், சாட்லேஜ் ஆகிய ஐந்து கிளை நதிகளும் இமயத்திலிருந்து வரும் சிந்து நதியுடன் கலக்கும் பகுதி 'பஞ்சாப்' என அழைக்கப்படுகிறது. ஐந்து ஆறுகள் கலக்கும் இடம் என்பது இதன் பொருளாகும். இன்று இப்பகுதி பாகிஸ்தானின் எல்லைக்குள் உள்ளது. இப்பகுதியில் புகையிரதப் பாதை அமைப்பதற்காக மண்மேடுகளைத் தோண்டிக் கற்கள் எடுக்கப்பட்டபோது, அக்கற்கள் பலவற்றிலே சித்திர எழுத்துக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அத்தோடு ஆய்வுகளும் ஆரம்பமாயின. சேர்.ஜோண் மார்ஷல், சேர்.வில்லியம் ஜோண்ஸ், சேர். அலெக்ஸாண்டர் கணிங்கம், சேர்.மோட்டிமர் உவீலர், கலாநிதி மைக்கே வட்சி ஆகியோரை உள்ளடக்கிய ஆய்வாளர் குழு 1920 முதல் 1924 வரை இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டது. இவ்வாராய்ச்சியின் பயனாக வியக்கத் தக்க பல விடயங்கள் கண்டறியப்பட்டன. கி.மு.2500 இற்கும் கி.மு.1500 இற்கும் இடைப்பட்டதெனப் பொதுவாகப் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இக்காலப்பகுதியில் இந்து மதம் என்று கொள்ளத்தக்க, அல்லது இந்து மத சார்புடைய ஒரு மதம் நிலவி வந்தமை கண்டறியப்பட்டது.

மேற்குறித்த ஆய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட தாயத்துக்கள், பதக்கங்கள், முத்திரைகள், களிமண் தகடுகள், சுடுமண் பொருட்கள், பாவனைப் பொருட்கள், என்பு எச்சங்கள், மற்றும் அழிந்தும் அழியாமலும் காணப்பட்ட கட்டடங்கள் என்பனவும் அக்காலத்து மக்களின் சமய, சமூக, பண்பாட்டு நிலைகளையும், பழக்கவழக்கங்கள் என்பனவற்றையும் நிர்ணயிக்க உதவுகின்றன.

சிந்து வெளி காலச் சமய நிலை:

சமய நிலையென்பது வழிபடப்பட்ட தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், சமய நம்பிக்கைகள் ஆகிய மூன்று முக்கிய அடிப்படைகளில் ஆராயப்பட வேண்டியது. முதலில் வழிபடப்பட்ட தெய்வங்கள் என்ற அடிப்படையில் நோக்கும் போது, இன்றைய இந்து மதத்தைப் போலவே சிந்து வெளியிலும் *'பல தெய்வ வழிபாடு'* நிலவி வந்ததை அவதானிக்க முடிகிறது. இன்றும் நாம் வழிபட்டுவரும் சிவன், சக்தி, இலிங்கம், சூரியன், நாகம், பறவை, மரம், அக்கினி, தேவதைகள், என்று கருதத்தக்க தெய்வங்கள் பலவற்றைச் சிந்துவெளி மக்கள் வழிபட்டு வந்தமையை அங்கு நிகழ்த்திய ஆய்வுகள் விளக்குகின்றன.

சிந்து வெளியிலே சுட்ட மண்ணினாலான பெண் பாவை உருவங்கள் பல கண்டெடுக்கப்பட்டன. இவ்வுருக்களை ஆய்வாளர் சாந்த முகம் கொண்டவை, கோரமுகம் கொண்டவை என இரண்டாக வகுத்து ஆராய்கின்றனர். இன்றும் இலக்குமி, சரஸ்வதி, உமை, கௌரி போன்ற சக்தியின் சாந்த வடிவங்களையும் காளி, துர்க்கை, நீலி, சூலி, போன்ற கோர வடிவங்களையும் நாம் வழிபட்டு வருகின்றோம். இங்கு கண்டெடுக்கப்பட்ட குழந்தையைக் கையிலேந்திய பெண்ணுருக்களின் வளர்ச்சிப்படியாக இன்றைய சோமஸ்கந்த மூர்த்தம் [1] இருக்கலாமென்று ஆய்வாளர் கருதுகின்றனர்.

மரமொன்றின் மீது இரு கொம்புகளுன்னதும், தலைவிரிகோலத்துடனுமான ஒரு பெண் நிற்பது போலவும், கீழே ஒரு பெண் மண்டியிட்டபடி இருப்பதும், அவளருகே கட்டைப் பாவாடை அணிந்த ஏழு பெண்கள் நிற்பதுமான ஓர் உரு அங்கு கண்டெடுக்கப்பட்டது. இது வனதேவதை வழிபாடாக

1 *இறைவனும் இறைவியும் நடுவில் முருகனுமாகக் காட்சிதரும் வடிவம் சோமஸ்கந்த மூர்த்தம் எனப்படும்.*

இருக்கலாமென்று ஆய்வாளர் கூறுகின்றனர். சிந்து வெளியிற் கண்டெடுக்கப்பட்ட ஒரு இலட்சினையில் கருவுற்ற நிலையில் ஒரு பெண்ணும் அவளது கருப்பையிலிருந்து செடியொன்று கருத்துயிர்ப்பது போலவும் காணப்படுகிறது. இது பூமியைப் பெண்ணாக வழிபடுகின்ற தரைப் பெண் வணக்கமாக இருக்கலாம். இந்துக்களிடையே 'சக்தி புவனம் ஏழையும் பூத்தவள்' எனும் கருத்து நிலவி வருவதைக் காணலாம். இவ்வாறாக சிந்து வெளியிற் கண்டெடுக்கப்பட்ட பெண்ணுருக்கள் இன்றையச் சக்தி வழிபாட்டோடு தொடர்புபடுத்தி நோக்கக் கூடிய ஒரு பெண் தெய்வ வழிபாடு அங்கு காணப்பட்டதை உறுதி செய்கின்றன.

சிந்து வெளியிற் கண்டெடுக்கப்பட்ட உருவச்சிலை ஒன்றின் முகத்தின் இருபுறமும் இரு படைப்புக்கள் காணப்படுகின்றன. இது இன்றைய மும்மூர்த்தி வழிபாட்டின் அன்றைய நிலையாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. இங்கு கண்டெடுக்கப்பட்ட யோகி வடிவமானது, யோகிகளுக்கெல்லாம் தலைவன் எனும் பொருளில் சிவனுக்கு வழங்கும் யோகீஸ்வரன் என்ற பெயரை நினைவூட்டுவதாகவுள்ளது. இங்கு காணப்பட்ட யோகி வடிவத்தைச் சூழ, யானை, புலி, கரடி, சிங்கம், மான், முதலான விலங்குகள் காணப்படுவது உயிர்களுக்கெல்லாம், தலைவன் எனும் பொருளில் சிவனுக்கு வழங்கும் 'பசுபதி' என்ற பெயரை விளக்குவதாக இருக்கலாம். இரு கொம்புகளும் நடுவில் பூங்கொத்தும் கொண்டதாக இங்கு ஓர் இலட்சினை கண்டெடுக்கப்பட்டது. இதுவே பிற்காலத்தில் திரிசூல வழிபாடாக மாறியிருக்கலாமென ஆய்வாளர் கருதுகின்றனர். இவற்றிற்கெல்லாம் மணிமுடி வைத்தது போல விளங்குவது சிந்து வெளியிற் கண்டெடுக்கப்பட்ட காலைத்தூக்கி ஆடும் ஓர் வெண்கலச் சிலையாகும். இது நடராஜப் பெருமானின் தில்லையம்பலத் திருக்கூத்து[2] எனும் பஞ்ச கிருத்திய நடனத்தை விளக்குவதாயிருக்கலாமென்பது ஆய்வாளர் கருத்து.

உருவிற் சிறியனவும் பெரியனவுமான பல இலிங்கங்கள் இங்கு கண்டு பிடிக்கப்பட்டன. சிறிய இலிங்கங்கள் பலவற்றில் தொளைகள் காணப்பட்டன. எனவே இவை தாயத்துக்களாக அணியப்பட்டிருக்கலாம். அளவிற் பெரிய இலிங்கங்கள் பூஜையறையில் வைத்துப் பூசித்திருக்கலாம். இன்றும் இலிங்கத்தை மூலஸ்தானத்தில் வைத்துப் பூசிக்கும் வழக்கம் உண்டு. இவ் இலிங்கங்களிலே இலிங்கம் சிவனையும், பீடம் சக்தியையும் குறிப்பதாகும். இவ் இலிங்கங்கள் என்று கொள்ளத்தக்க உருக்களைக் கொண்டு சிலர் சிந்து வெளி மக்கள் ஆண், பெண் குறி வழிபாடு (இலிங்க யோனி வழிபாடு) உடையவர்கள் என்றும் குறிப்பிடுவர்.

சிந்து வெளியிற் கண்டெடுக்கப்பட்ட எருமை, யானை, புலி, மான், வெள்ளாடு போன்ற மிருகங்களின் இலட்சினைகள் அங்கு மிருக வழிபாடு நிகழ்ந்ததை உறுதிப்படுத்துவதாக இருக்கலாம். இன்றும் மிருகங்கள் இந்து தெய்வங்களின் வாகனங்களாக விளங்குவதைக் காணலாம். அத்துடன் நந்தி வழிபாடும் காணப்படுகிறது. இங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு இலட்சினையில் யோகி ஒருவரின் முன் காளைமாடொன்று காணப்படுகிறது. இது சிவ வழிபாட்டுடன் நந்தி வழிபாட்டின் தொடர்பை விளக்குவதாக இருக்கலாம்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு இலட்சினையில் முக்காலி ஒன்றின் மீது பாற் கிண்ணமும், அதன் முன் படமெடுக்கும் நாகமும் காணப்படுகின்றது. இதனைக் கொண்டு சிந்து வெளியில் நாக வழிபாடு நிகழ்ந்ததை அறிய முடிகிறது. மற்றும் இங்கு புறா, கருடன் போன்ற பறவைகளின் உருக்கள் கொண்ட இலட்சினைகளும் காணப்பட்டன. கருடன் மகா விஷ்ணுவின் வாகனமாகவும், மயில், முருகனின் வாகனமாகவும் கொள்ளப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மரவழிபாடு நிகழ்ந்தமையை விளக்கும் வகையில் கிளைகளுக்கிடையே கொம்புள்ள பெண்ணொருத்தியின் இலட்சினை விளங்குகிறது. இன்றும் விநாயகர், வைரவர் போன்ற தெய்வங்கள் மரத்தடியில் வைத்து வழிபடப்படுகின்றன. இங்கு ஆறு தலையையுடைய ஒரு விலங்குருவம் கொண்ட இலட்சினை ஒன்று காணப்பட்டது. இதில் சூரியக் கதிர்களை ஒத்த வட்டமாக நெருங்கிய தலைகள் காணப்படுகின்றன. இதனைக் கொண்டு அங்கு சூரிய வழிபாடு நிகழ்ந்திருக்கலாமெனக் கொள்ள முடிகிறது. இன்றும் இந்துக்கள் தைப்பொங்கல் பண்டிகையை சூரிய வழிபாடாகக் கருதிக் கொண்டாடி வருகின்றனர்.

சிந்து வெளியிற் கண்டெடுக்கப்பட்ட பல இலட்சினைகளிலும், உருவச் சிலைகளிலும் நான்கு கைகளையுடையவை பல காணப்பட்டன. அத்தோடு மனித உருவும் மிருகத் தலையும் கொண்டவையும், மிருக உருவும் மனிதத் தலையும் கொண்டவையுமாகக் கலப்புருவங்கள் பலவும் இங்கு கண்டெடுக்கப்பட்டன. இன்றும் இந்துக்களினால் வழிபடப்படும் பல தெய்வங்கள் நான்கு கைகளைக் கொண்டிருத்தலையும் விநாயகர், நரசிம்மர் போன்ற கலப்புருக் கொண்ட தெய்வங்கள் வழிபடப்படுவதனையும் காண முடிகிறது.

இனி சிந்து வெளி கால மக்களது வழிபாட்டு முறைகள் பற்றி நோக்குமிடத்து அவை இன்று நடைமுறையிலுள்ள இந்து வழிபாட்டு முறைகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இங்கு காணப்பட்ட இலட்சினை ஒன்றில் தட்டுக்களை ஏந்திய பெண்கள் காணப்படுகின்றனர். இது சிந்து வெளி மக்கள் இறைவனுக்கு உணவு படைத்து வழிபட்டிருக்கலாமெனக் கொள்ள இடமளிக்கிறது. தெய்வத்தின் முன்னே குழந்தையைக் கையிலேந்திய பெண்ணின் உருக் கொண்ட இலட்சினை நேர்த்திக்கடன் கழிக்கும் நடைமுறை இருந்ததற்கான ஆதாரமாகுமென ஆய்வாளர் கூறுவர். மேலும், இங்கு கண்டெடுக்கப்பட்ட வாளேந்திய ஆடவன் முன்னே மண்டியிட்ட பெண் இலட்சினையும், வெள்ளாட்டைப் பிடித்தபடி ஓர் ஆடவனும் அவனெதிரே பலர் வரிசையாக நின்று வணங்குவது போன்றதுமான இலட்சினையும் அங்கு 'பலியிடல்' நிகழ்ந்திருக்கலாம் என்ற ஊகத்திற்கு இடமளிக்கிறது. இசை, நடனமூலம் வழிபாடு நிகழ்ந்ததை இங்கு காணப்பட்ட எருதின் முன் நடனமாடும் பெண்ணின் இலட்சினையும் மத்தளம் அடிப்பவனும், மாடும் பெண்ணும் கொண்ட இலட்சினையும் விளக்குகிறது. கற்கள், தட்டுக்கள், வீட்டுச் சுவர்கள் என்பவற்றில் புகைபடிந்திருந்தமை தூப தீப வழிபாட்டுக்கான ஆதாரங்களென்றும், ஒரு உருவத்தை நால்வர் தூக்கிச் செல்வது இறைவனை ஊர்வலமாய் கொண்டு வருதல் என்று கொள்ளலாமென்றும் ஆய்வாளர் கூறுவர்.

அடுத்து இவர்களது சமய நம்பிக்கைகள் பற்றிக் கூறுமிடத்து, முக்குறிகளையுடைய பானைகள் பல இங்கு

2. சிவனது ஐந்தொழில்களைக் குறிக்கும் நடராஜ வடிவம்.

காணப்பட்டதாகவும், சுவஸ்திகா (卐) எனும் யோகக் குறியுடைய பதக்கங்கள் காணப்பட்டதாகவும், இவர்கள் நோய் தீர்க்க அவற்றைத் தாயத்துக்களாக அணிந்திருக்கலாம் என்றும் ஆய்வாளர் கூறுகின்றனர். மேலும் இங்கு, உயிர் பிரிந்து சொர்க்கம் செல்வது போன்றதும், யமன் வருவது போன்றதுமான இலட்சினைகளும் கண்டெடுக்கப்பட்டன. வீட்டுச் சந்துகளில் காணப்பட்ட என்பும், சாம்பலும் கொண்ட குவளைகள், இவர்களிடம் ஆஸ்தியைப் பாதுகாக்கும் வழக்கம் இருந்ததைக் காட்டுவதாகுமெனக் கருதப்படுகிறது.

ஆகமொத்தத்தில் தொகுத்து நோக்குமிடத்து சிந்து வெளியிலே தற்கால இந்து மதத்தை ஒத்ததான தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும் சமய நம்பிக்கைகளும் விளங்கியதை ஊகிக்க முடிகின்றது.

சிந்து வெளி காலச் சமுதாயம்

காலக் கணிப்பீடு செய்யும் ஆள்கூற்று நிபுணர்களின் கருத்துப்படி சிந்து வெளியிற் கண்டெடுக்கப்பட்ட என்பு, எச்சங்கள் மத்திய தரைப் பிரதேசத்தில் வாழ்ந்த ஆதியினத்தின் என்பெச்சங்களை ஒத்தவை எனக் கொள்ளப்படுகின்றது. சிந்து வெளி மக்கள் திராவிட இனத்தவர் எனவே கொள்ளப்படுகிறது. ஆயினும் இதனைத் திடப்படுத்திக் கூற முடியவில்லை.

அளவிற் பெரியனவும் சிறியனவுமான பல கட்டடங்கள் சுட்ட மற்றும் உலர்ந்த செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. வெளிச்சுவர்கள் மழை, வெயில் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தன. சுவர்கள், தரை என்பன களி மண்ணாலும் தவிடு கலந்த களி மண்ணாலும் மெழுகிடப்பட்டிருந்தன. பல அறைகள் கொண்ட கட்டடங்கள், உயர்ந்த கூரைகள், காற்று, வெளிச்சம் புகக்கூடிய யன்னல் அமைப்புக்கள் என்பனவும் காணப்பட்டன. நாற்சார் வீடுகள், சாதாரண வீடுகள், அங்காடிகள், களஞ்சியங்கள், தனியான உடைமாற்றும் அறைகள் கொண்ட குளியலறைகள், தடாகங்கள் மற்றும் அடுக்குமாடிக்கட்டடங்கள் என்பனவும் காணப்பட்டன. இவ் வீடுகளில் காணப்பட்ட நாற்காலிகள், முக்காலிகள், கட்டில்கள், என்பனவும் பிற பாவனைப் பொருட்களும் இங்கு நாகரிக வளர்ச்சி பெற்ற ஒரு பண்பட்ட சமூக அமைப்பு இருந்தது என்று கொள்ள இடமளிக்கிறன்றன. இக் கட்டடங்களில் மாடிகளிலிருந்து கழிவுகளையகற்ற சுட்ட கழிமண்ணாலான குழாய்கள் காணப்பட்டன. சிறிய வடிகால்கள் பெரிய வடிகால்களுடன், இணைத்து நகருக்கு வெளியே கழிவகற்றும் ஆமை யோட்டு வடிவ வடிகாலமைப்பு [3] காணப்பட்டமை மற்றொரு சிறப்பம்சமாகும்.

இங்கு வாழ்ந்த மக்கள் தத்தம் வசதிக்கேற்ப ஆடையணிகளையும் ஆபரணங்களையும் அணிந்திருந்தனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட முத்து, மாணிக்கம், மரகதம், என்பன பதித்த ஆபரணங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. அத்தோடு இங்கு பொற் கொல்லத் தொழில் நிகழ்ந்ததையும் இதன் மூலம் அறிய முடிகின்றது. இங்கு காணப்பட்ட மரக்கலங்களின் சிதைவுகள், தூண்டில்கள் என்பன கடல் வாணிபம் மற்றும் மீன்பிடித் தொழில் என்பன நடைபெற்றதையும் மட்டப் பலகைகள், அளவு கோல்கள் என்பன சிறந்த கட்டடக் கலை வளர்ச்சியையும் கொத்து வேலை நிகழ்ந்ததனையும் விளக்கும். அம்மி, ஆட்டுக்கல், உரல் என்பனவும் மற்றும் சட்டி, பானை, கூசா என்பனவும் இங்கு கற்தச்சுத் தொழில் மற்றும் வனைதற்ல் தொழில் சிறப்புற நிகழ்ந்ததனையும் பறை சாற்றுகின்றன. சவரக்கற்கள் காணப்பட்டமை அங்கு நாவிதத் தொழில் சிறப்புற நிகழ்ந்ததனைக் காட்டும்.

சிந்து வெளி நாகரிகம் ஓர் நதிக்கரை நாகரிகம் என்பதால் அங்கு விவசாயம் முக்கிய இடம் பெற்றிருந்தது. சிதைவடைந்த நிலையிற் கிடைக்கப் பெற்ற மரக் கலப்பைகள், மற்றும் எருதுகளின் என்பு எச்சங்கள் என்பனவும் இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர் எனக் கொள்ள இடமளிக்கிறது. இங்கு நாய் பூனை, ஆகியவற்றின் என்பு எச்சங்கள் பல கண்டெடுக்கப்பட்டன. எனவே இவை அங்கே செல்லப் பிராணிகளாக வளர்க்கப்பட்டிருக்கலாம்.

நகருக்குப் புறம்பான இடத்தில் உயரமான இடத்தில் நிமிர்ந்த நிலையில் மனித என்புகள் பல புதைந்திருந்தன. எனவே சிந்துவெளி மக்கள் இறந்தவரைப் புதைக்கும் வழக்கமுடையோராயிருந்திருத்தல் வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ் என்புகளின் காலடியில் பாவனைப் பொருட்களும் புதைந்திருந்தன. எனவே இறந்தவர்கள் பயன்படுத்திய பாத்திரங்களையும் கூடவே புதைக்கும் வழக்கத்தையுடையோராயிருந்திருக்கலாம். இன்றைய இந்துக்களிடம் இந்த வழக்கங்கள் இன்றும் இருப்பதனைக் காணலாம்.

வாள், கத்தி, எறிகத்தி, சூலம் என்பன இங்கு கிடைக்கப் பெற்றமை இங்கு போர்கள் நடந்திருக்கலாமெனக் கருத இடமளிக்கிறது. மேலும் இங்கு சுடுமண்ணாலான சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் பலவும் கண்டெடுக்கப்பட்டன. பெரியோர் சதுரங்கம், சொக்கட்டான் ஆகியனவற்றைப் பொழுது போக்காக விளையாடியமைக்கான ஆதாரங்களும் கிடைக்கப் பெற்றன.

சிந்து வெளியிலே சங்குதாரோ எனுமிடத்திலே கண்டெடுக்கப்பட்ட சிறிய குப்பியானது மைக்குப்பியாக இருக்கலாமென்று கருதப்படுகிறது. எனினும் இங்கு வாழ்ந்த மக்கள் எழுதப் பயன்படுத்திய பொருட்கள் பற்றி போதுமான ஆதாரங்களேதும் கிடைத்தில. இலக்கிய ஆதாரங்களும் இருந்திருத்தல் வேண்டுமெனக் கூறப்படுகிறதே தவிர அவையும் கிடைத்தில.

ஆக, மொத்தத்தில் சிந்துவெளி பற்றிய எந்தவொரு கருத்தையும் உறுதிப்படுத்திக் கூற முடியவில்லை. காரணம் சிந்து வெளியின் ஏறத்தாள பத்தில் ஒரு பகுதி மட்டுமே இதுகாறும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி இலக்கிய ஆதாரங்களேதும் இங்கு கிடைக்கவில்லை. கிடைத்த எழுத்துக்களின் வரிவடிவமும் இதுவரை வாசித்தறியப்பட வில்லை. அத்தோடு சிந்து வெளி நாகரிகத்தை ஆராய்ந்த அறிஞர்களுள்ளிட்ட ஏனைய அறிஞர்களதும் கருத்துக்கள் கூட ஊகங்களாகவே வெளியிடப்பட்டுள்ளன. எது எவ்வாறாகவிருப்பனும் சிந்து வெளியிற் காணப்பட்ட சமய சமூகக் கட்டமைப்பு பெரிதும் இந்து மத சாயல் கொண்டதாகவே அதாவது பெரிதும் இன்றைய இந்து மதத்தை ஒத்ததாகவே காணப்படுகிறது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

3. பல சிறிய வடிகால்கள் மீண்டும் மீண்டும் ஒன்று சேர்ந்து பெரிய வடிகாலுடன் இணைந்து கழிவகற்றும் வடிகாலமைப்பு. ஆமையோட்டின் மேற்புறம் போற் காணப்படும். நவீன வடிகாலமைப்பு முறைகளில் ஒன்று

மாணவர் கூடர்

இப்பக்கம் மாணவர்களின் ஆக்கத்திற்கு ஊக்கம் தரும் பகுதி. இளம் மாணவி ஸ்ரீ. ஜனனியைப் போல் ஏனைய இளம் உள்ளங்களும் தங்கள் கருத்துக்களை உதிர்ப்பதற்கு இது ஒரு பக்கம்

ஒன்றே குலம் – இது இந்து தத்துவம்

செல்வி.ஸ்ரீ. ஜனனி மனோகரன்–யாழ்ப்பாணம்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது தமிழ் முதுமொழி இக்கூற்று இந்து சமயத்தின் அடிப்படை நாதமாக உள்ளது. பல்வேறு சமயப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டதாகவும், பல்வேறு திருநாமங்களில், பல்வேறு திருவுருவங்களில் இறைவனை வழிபடுவதற்கான தத்துவங்களைக் கொண்டதாகவும் இந்து சமயம் இருப்பினும் மனித குலத்தை ஒரே இனமாக, ஒத்த நிலையில் வைத்துப் போற்றும் பாங்கு இந்து சமயத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சமயச் சடங்குகளைக் கைக் கொள்ளும் இந்து சமய வழிமுறையில் சமய மாற்றம் அதாவது பிறசமயத்தைப் பின்பற்றுமொருவர் இந்து சமயத்திற்கு மாறுவதற்கான மதமாற்றச் சடங்கு இல்லாதிருப்பது குறிப்பிடக்கூடிய ஒரு அம்சமாகும்.

குழந்தை பிறந்தபோது ஒரு சடங்கு பூப்பெய்தும் போது ஒரு சடங்கு, திருமணத்தின் போது ஒரு சடங்கு, இறப்பின் போது ஒரு சடங்கு, வீட்டு மனை அமைக்கும் போது ஒரு சடங்கு, குடிபுகும் போது ஒரு சடங்கு என வாழ்வின் எல்லா நிகழ்வுகளுக்கும் சமய வழியில் சடங்குகள் மேற்கொள்ளும் இந்து சமயத்தவர் மத்தியில் மதமாற்றத்திற்கான சடங்கு மட்டும் இல்லாதிருப்பது தனித்துவமான சிறப்புக் கொண்டது.

ஏன் இந்து மதத்தில் மத மாற்றத்திற்கான சம்பிரதாயங்களோ, சாஸ்திரங்களோ இல்லாதுள்ளது என்பதை ஆராயும்போது இறைவன் ஒன்றே என்ற தத்துவம் மேலோங்கி விளங்குகின்றது.

உலகிலே உயிர்க்கும் உயிரினங்களெல்லாம் இறைவன் படைப்புகளே என்று இந்து சமய அடிப்படைக் கொள்கை அமைவதால் உயிரினங்களில் மனித இனத்தில் வேறுபாடு காட்டாத பாங்கு தெளிவுறுத்தப்படுகின்றது. பல்வேறு தெய்வங்களை வழிபட்டாலும், வழிபாட்டு முறைகள் பல்வேறு வழிகளில் அமைந்தாலும் இறைவன் ஒருவனே என்பதால் அந்த ஒரே இறைவனை வழிபடும் சமய நெறியில் பாகுபாடு இல்லை என்பது இந்து தத்துவம்.

அன்பு மயமான, அருள் மயமான இறைவன் எவ்வாறு தனது படைப்புக்களான உயிரினங்கள் மத்தியிலே பாகுபாடு காட்டமுடியும்? ஒரு தாய் தான் பெற்றெடுத்த பிள்ளைகள் மத்தியிலே வேறுபாடு காட்டினால் அதனை நாம் அநாகரிகமான, அருவருப்பான செயலாகக் கருதுவோம். அப்படியிருக்க எங்கும் நிறைந்த, எம்மைப் படைத்த அன்புருவான இறைவன் பெற்ற தாயைப் போன்று அணைத்து அல்லவா அருள்வான்.

அதைவிட்டுப் பிரித்தா பார்த்து அருள்வான்? சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நகரில் சர்வசமய மாநாட்டிலே ஆற்றிய சகோதரத்துவ உரை மனித குலத்தின் உண்மை நிலையை இறைவனின் உந்நத நிலையை துலாம்பரமாக எடுத்துக் காட்டியுள்ளது.

சர்வ சமயப் பெரியார்களும் சுவாமிகளது ஆழ்ந்த கருத்துள்ள உரையை உணர்வு பூர்வமாக வரவேற்றதன் மூலம் இவ்வுண்மை புலனாகின்றது. சுவாமி விவேகானந்தரின் சமயங்களின் கோட்பாட்டு எல்லைகளைக் கடந்த ஒன்றே குலம் ஒருவனே தேவன், உலக உயிர்களெல்லாம் ஒரே இறைவனின் படைப்புகளே அதாவது ஒரு தாய் பிள்ளைகளே என்ற கூற்றே இந்து சமயத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.

ஆறுகளெல்லாம் நாடு, காடு எல்லாம் கடந்து இறுதியில் ஆழியில் சங்கமிப்பதைப் போன்றே உலகிலே உள்ள மக்களெல்லாம் பல்வேறு திருநாமங்களில், திருவுருவங்களில், தத்துவங்களில் பரம்பொருளை வழிபட்டாலும் இறுதியில் ஆதியும், அந்தமுமில்லா அன்பும், அருளும் மிகுந்த எம்பெருமான் திருவடியை நோக்கியே நகர்கின்றனர் என்ற உண்மையை இந்து சமயக் கோட்பாட்டைச் சிந்தையிலே கொண்டால் உலகம் உய்தியுறும்; உயர்வுறும்.

சிறுவர்களுக்கு ஒரு தெய்வீகக் கதை

நல்லோர் சிநேகம்

ஓர் ஊருக்கு ஒரு சாமியார் வந்தார். அவர் நன்றாகப் பேசக் கூடியவர். சத்சங்கத்தைப்பற்றி அடிக்கடி வற்புறுத்திச் சொல்வார். அவர் அன்று சில நண்பர்களை அழைத்து, "நான் ஓர் அற்புதம் செய்து காட்டுகிறேன்" என்றார். அவர்கள், "என்ன அற்புதம் ?" என்று கேட்டார்கள். அவர் அவர்களை ஒரு குளத்தங்கரைக்கு அழைத்துச் சென்றார். ஒரு சிறிய கல்லை எடுத்துக் குளத்தில் போட்டார். அது நீரில் அமிழ்ந்து விட்டது.

"கல் எங்கே ?" என்று சாமியார் கேட்டார்.

"நீரில் அமிழ்ந்து விட்டது" என்றார்கள் அருகில் இருந்தவர்கள்.

"கல் நீரில் மிதக்குமா ?" என்று கேட்டார் சாமியார்.

"மிதக்காது" என்று விடை வந்தது.

"இத்தனை சிறிய கல்லே நீரில் அமிழ்ந்து விட்டதே. ஒரு பெரிய கல்லைத் தண்ணீரின் மேல் மிதக்கச் செய்ய முடியுமா ?"

"முடியவே முடியாது".

"நான் மிதக்கச் செய்கிறேன். அந்த அற்புதத்தைத்தான் இப்போது செய்து காட்ட எண்ணுகிறேன்" என்று சாமியார் சொன்னதைக் கேட்டு எல்லோரும், 'அது எப்படி முடியும் ?' என்று தமக்குள் யோசிக்கத் தொடங்கினார்கள்.

சாமியார் உடனே ஒரு பெரிய குண்டுக் கல்லைக் கொண்டு வரச் சொன்னார். சில பேர் அதை உருட்டிக் கொண்டு வந்தார்கள். "நீங்கள் எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்டு ஒரு மணிநேரம் கழித்து வாருங்கள். அந்த அற்புதத்தைக் காண்பீர்கள்" என்று கூறி அவர்களை அனுப்பி விட்டார் சாமியார்.

அவருடன் இரண்டு சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களிடம் அங்கே கிடந்த பெரிய கட்டையை உருட்டிக் கொண்டு வரச் சொன்னார். அதைக் குளத்திற்குள் உருட்டச் செய்தார். அது குளத்தில் மிதந்தது. அதன் மேல் அந்தக் குண்டுக் கல்லைத் தூக்கி வைக்கும்படி சொன்னார். அவ்வாறே செய்தார்கள். கட்டை சிறிது தண்ணீரில் ஆழ்ந்தாலும், அதன் மேல் இருந்த கல் அமிழவில்லை.

ஒரு மணி நேரம் கழித்து ஊர் மக்கள் வந்தார்கள். சாமியார் செய்யும் அற்புதத்தைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தோடு வந்தார்கள். வந்து குளத்தைப் பார்த்தார்கள். குண்டுக் கல் ஆழாமல் மிதந்ததைக் கண்டார்கள். ஆனால் ஆச்சரியப்படவில்லை. "இதுதானா ?" என்றார்கள்.

"முன்னே போட்ட சிறிய கல் தண்ணீருக்குள் அமிழ்ந்ததா? மேலே மிதந்ததா ?" என்று கேட்டார் சாமியார்.

"அமிழ்ந்து போயிற்று" என்றார் ஒருவர்.

"இந்தப் பெரிய கல் அமிழ்ந்ததா?"

"இல்லை, ஆனால்....."

"ஆனால் என்பதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். கல் நீரில் ஆழ்ந்து போகாமல் நீரின் மேல் இருக்கிறதா, இல்லையா ?"

"ஆம், இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லையே ! கட்டை மிதக்கிறது. அதன் மேல் கல் இருப்பதனால் அது நீரில் அமிழவில்லை."

"அப்படியானால் கல் கட்டையாக மாறிற்றா ? அதன் கனம் குறைந்து விட்டதா ?"

"இல்லை."

"கல் கல்லாகவே இருந்தாலும் கட்டையின் சார்பினால் நீரின் மேல் மிதக்கிறது அல்லவா ?"

"ஆம்."

"இப்படித்தான், இயல்பாகப் பிரபஞ்சச் சேற்றுள் அமிழ்கிற தன்மை படைத்தவராக ஒருவர் இருந்தாலும், அதில் அமிழாமல் மிதக்கும் சாதுக்களைச் சேர்ந்தால் அவர் பிரபஞ்சச் சேற்றில் ஆழாமல் இருக்கும் வழி பிறக்கும்."

இப்போது சாமியார் பேச்சைக் கேட்டு யாவரும் வியந்தார்கள்.

"கல் தனியாக இருப்பதனால் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் குறைந்த கனமுடையதானாலும் தண்ணீரில் ஆழ்ந்துவிடும். ஆனால் எவ்வளவு கனமுள்ள கல்லானாலும் மிதக்கும் கட்டையோடு சேர்ந்தால் அதுவும் மிதக்கும். அது போல, எவ்வளவு பொல்லாதவராக இருந்தாலும் நல்லவர்களைச் சேர்ந்தால் அவர்களும் அறியாமை என்னும் நீரில் ஆழமாட்டார்கள். சத்சங்கம் அவ்வளவு சிறப்பானது" என்று சாமியார் சொன்னார்.

நன்றி: சுவாமி கமலாத்மானந்தர்
தொகுத்த தெய்வீகக்கதைகள்
(மயிலாப்பூர் இராமகிருஷ்ணமிஷன் வெளியீடு)

செய்திச் சரம்

மாமன்றத் தலைமையகத்திலிருந்து

ஆண்டுப் பொதுக் கூட்டம்

★ தாது வருடம் கார்த்திகை மாதம் 8ம் நாள் (23.11.96) அன்று மாமன்றத்தின் 40வது ஆண்டுப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. புதிய நிறைவேற்றுக்குழு விபரம் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

★ விஜயதசமி (21.10.96) அன்று தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் விசேட பூசை வழிபாடு நடந்தது. இவ்வழிபாட்டில் பரீட்சைத் தினைக்களம் இறைவரித் தினைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த அலுவலர்கள் இனமத வேறுபாடின்றிக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஞானசிரோன்மணி திருமதி பூமணி குலசிங்கம் நவராத்திரியின் மகிமை பற்றி சிறப்புரை நிகழ்த்தினார்.

★ வெள்ளிதோறும் நண்பகல் 12.30 மணிக்கு தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் சிவகாமி அம்மாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானுக்கு விசேடபூசை நடந்து வருகிறது. பல அரச தினைக்கள ஊழியர்களும் தனியார்துறை ஊழியர்களும் இப்பூசை வழிபாடுகளில் பங்கு பற்றி வருகிறார்கள்.

★ சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் எழுதிய 'Glories of Shaivaism' எனும் ஆங்கில நூலை மறுபதிப்பு செய்து வெளியிட மாமன்றம் ஒழுங்குகள் செய்து வருகின்றது.

★ 28.07.1996 அன்று மாமன்றத் தலைமையகக் கட்டிட நிதிக்குச் சிறப்பாக உதவிய ஐந்து குடும்பங்களின் மறைந்த தலைவர்களின் (முன்னைநாள் தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம், திருமதி யோ. மாணிக்கம், திரு. அ. செல்லப்பா, திரு. கா. நடேசன், திரு. க. குணரத்தினம் ஆகியோரின்) திருவுருவப் படங்களைப் பாரதநாட்டின் தூதுவர் மாண்புமிகு நரேஸ்வர டயால் திரை நீக்கம் செய்துவைக்க, திரு. வே. பாலசுப்பிரமணியம் நினைவுரையை மாண்புமிகு நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் நிகழ்த்தினார்.

★ தீபாவளி தினத்தை ஆடம்பரமாகக் கொண்டாடாமல் வழிபடு தினமாக அனுட்டிக்குமாறும், வீடுவாசல்களை, இழந்து உடுபுடவையின்றிப் போதாத உணவால் ஏற்படும் பசியுடன் நோய்வாய்ப்பட்டு மருந்தின்றி அல்லற்படும் மக்களுக்கு உதவுமாறும் இந்து மக்களுக்கு மாமன்றம் பகிரங்க வேண்டுகோள் விடுத்தது.

அங்கத்துவ சங்கங்களிலிருந்து

விவேகானந்த சபை, கொழும்பு

★ 03.11.96 அன்று நாட்டின் பல பகுதிகளிலும் இருக்கும் பாடசாலை மாணவர்களுக்காக வருடாந்தம் சபை நடத்தும் சைவ சமயப் பரீட்சை நடத்தப்பட்டது.

★ 02.10.96 அன்று மகாத்மா காந்தி நினைவு தினம் அனுட்டிக்கப்பட்டது. பாரதநாட்டின் துணைத் தூதுவர் மகாத்மா காந்தி பற்றிச் சபையில் சிறப்புரை நிகழ்த்தினார்.

★ 12.10.96, 13.10.96, 14.10.96 ஆகிய தினங்களில் நவராத்திரியையொட்டிக் கலைவிழா நடாத்தப்பட்டது. 13.10.96 அன்றைய நிகழ்ச்சியை மாமன்றமும் அதன் அங்கத்துவ சங்கங்களில் ஒன்றான சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கமும் இணைந்து நடத்தினர்.

சைவமுன்னேற்றச் சங்கம், கொழும்பு

★ 20.10.96 அன்றுசங்கத்தின் நூல்நிலையத் திறப்பு விழா நடந்தது.

★ 27.10.96 அன்று ஆண்டுப் பொதுக் கூட்டம் நடந்தது.

★ 03.11.96 அன்று கலைமகள் விழாவும் சங்கத்தின் பொதுச் செயலாளராக 30 ஆண்டுகள் அளப்பரிய பணியாற்றி இளைப்பாறிய திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டும் விழாவும் நடந்தது.

கொழும்பு மகளிர் இந்துமன்றம்

★ 14.10.96 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கலைமகள் விழாவினைச் சிறப்புற நடத்தினர்.

இந்து வித்தியாவிருத்திச் சங்கம்

இந்துவித்தியாவிருத்திச் சங்கம் நிர்வகித்து வரும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மீண்டும் பல நிகழ்ச்சிகள் இடம்பெறும் இடமாக புதுப் பொலிவுடன் மிளிர்கின்றது.

சுவாமி விவேகானந்தருக்குச் சிலை

சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின் நூற்றாண்டை நினைவு கூரும் பிரமாண்டமான சிலை விவேகானந்த சபை வளவில் 15.01.97 அன்று திறந்து வைக்கப்படும். இந்தியாவிலிருந்து இச் சிலையைப் பெறுவதற்கான செலவினை மாமன்றம் பொறுப்பேற்கின்றது. மண்டபம் கட்ட நிதி தேவை. தலைமையக இராமகிருஷ்ண மிஷனுக்கு அந்த உதவியை அனுப்பி உதவி புரியுங்கள்.

...கக் கட்டிடப் பூர்த்தி சிறப்பு மலரை மாமன்றத்தலைவர், ...ணை மிஷன் தலைவருக்குக் கையளிக்கும் காட்சி. நடுவில் ...ந்து கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி அவர்கள்.



சிறப்பு மலரினை விமர்சனம் செய்கிறார் மாண்புமிகு மேன்முறையீட்டு நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள்.

... அறங்காவலரும் இந்து அறநிதியத்தலைவருமான, ...துரை நடேசன் சிறப்பு மலரின் பிரதியைப் பெறுகிறார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த இந்து-பௌத்த நல்லெண்ணக் குழு, தலைமையகத்தின் பிரார்த்தனை மண்டபத்திற்கு வந்து பிரார்த்தனை நடத்திய போது எடுக்கப்பட்ட படம்.

...கக் கட்டிட வேலைகளுக்குத் தம்மை அர்ப்பணித்த கட்டிடப் ...நிபுணர் திரு.என்.ஏ.வைத்தியலிங்கம் சிறப்பு மலரின் பிரதியைப்

தலைமையகக் கட்டிடத்தில் உருவப்படங்களைத் திரை நீக்கம் செய்ய 28-7-96ல், பாரதத் தூதுவர் அவர்கள் வந்திறங்கும் காட்சி.

இந்தச் சுடரில்

பஞ்சபுராணங்கள்

வாழ்த்துரைகள்

6. 'சிவனே சரணம்'

7. விளக்கீடு

8. ஆறுமுகநாவலரும் சிதம்பரமும்

9. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

11. சஞ்சலம் வந்தால் வரட்டும்

13. Hindu Approach to Modern Crisis

20. அபரக் கிரியைகள்– இந்து கலைக்களஞ்சியம்

21. மார்கழித் திருவாதிரையும் திருவெம்பாவையும்

25. சுவாமி விபுலானந்தர் – வாழ்வும், பணிகளும், ஆக்கங்களும் ஒரு சிறு கண்ணோட்டம்

28. சைவ வாழ்க்கை

29. சைவசித்தாந்தம் பரப்பிய முன்னோடியான சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள்

31. சைவத்திருமுறைகள் வகுத்துள்ள வாழ்க்கை நெறி

33. சமய வாழ்வும் ஒழுக்க நெறியும்

35. Hinduism - The Eternal Religion

39. சுவாமி விவேகாநந்தரின் இலங்கை வருகையின் நூற்றாண்டு.

41. சமயம் காட்டும் அமைதிப்பாதை

43. சிந்து வெளி நாகரிகம்– ஓர் அறிமுகம்

46. 'ஒன்றே குலம்' இந்துதத்துவம்

47. நல்லோர் தொடர்பு

48. தலைமையகத்தினதும், அங்கத்துவ சங்கங்களினதும் செய்திகள்

அடுத்த சுடர்கள்

* மகாசிவராத்திரி
* சித்திரைப் பூரணை
* ஆவணிச்சதுர்த்தி
* கார்த்திகைத் தீபம்

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்யக் குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழ்

தாதுவருடம் — கார்த்திகை 9ம் திகதி
24–11–96

ஆசிரிய குழு

திரு. ஆ.குணநாயகம்
மருத்துவ கலாநிதி க. வேலாயுதபிள்ளை
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. கந்தையா நீலகண்டன்

ஒரு பிரதியின் விலை	ரூ. 20.00
வருடாந்த சந்தா	ரூ. 80.00
வெளிநாடு வருட சந்தா	டொலர் 10.00

அகில இலங்கை இந்துமாமன்றம்
ACHC கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை
கொழும்பு-2 இலங்கை
தொலைபேசி : 434990, 344720

இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.

HINDU OLI

Quarterly of
All Ceylon Hindu Congress
24th November 1996

Editorial Board:
Mr. A. Gunanayagam
Dr. K. Velayuthapillai
Mr. K. Rajapuvaneeswaran
Mr. Kandiah Neelakandan

Price	R. 20.00 per copy
Annual Subscription	Rs. 80.00
Foreign subscription (including postage)	U.S.$ 10.00

All Ceylon Hindu Congress,
A.C.H.C. Bldg.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo 2, Sri Lanka.
Telephone Nos.: 434990, 344720

Next issues will appear in 1997 on
Maha Sivarathri
Sithirai Poornai
Avani Sathurthi
Karthikai Deepam

Views expressed in the articles in the Hindu Oli are those of the Contributors

PRINTED BY UNIE ARTS (PVT) LTD.